# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 43 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 24, ஞாயிற்றுக்கிழமை 08.01.2017


## வடக்கில் வீடு கோரி 8,500 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கு மாகாணத்தில் வீடுகள் கோரி இதுவரை 8 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் மாவட்டச் செயலகங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தே அதிகளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.
வடக்கு மாகாணத்தில் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட 10 ஆயிரம் பொருத்து >> 52

## விபத்தில் சாவடைந்த வவுனியா மாணவி கணிதத்தில் முதலிடம்

வவுனியா, ஜன. 8
குருநாகலில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த வவுனியா மாணவி கடந்த வருடம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். எனினும் அவர் தற்போது உயிருடன் இல்லாதமை கவலையளிக்கும் செய்தியாக அமைந்தது. >> 52



### தமிழ் மக்கள் இனியும் பலிக்கடா ஆகமுடியாது

# புது அரசமைப்பை உருவாக்காவிடின் வழிகாட்டல் குழுவை கலையுங்கள்

*அதைப் பகிரங்கமாக உலகுக்கு அறிவியுங்கள் என அமைச்சர் மனோ காட்டம்*

கொழும்பு, ஜனவரி 8
பெரும்பான்மைக் கட்சிகளின் அரசியல் இழுபறிகளுக்குத் தமிழ் பேசும் மக்கள் இனியும் பலிக்கடா ஆக முடியாது. புதிய அரசமைப்புக்குத் தயாரில்லை என்றால் அதன் உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவைக் கலைத்து விட்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்குஎதுவும்தரதயாரில்லை என்று உலக நாடுகளுக்கு அறிவியுங்கள். தேவையற்றுக் காலதாமதம் செய்யாதீர்கள்.
இவ்வாறு மிகக் காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் கூட்டு அரசின் அமைச்சரும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின்தலைவருமான மனோகணேசன். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவில் அவரும் உறுப்பினராக இருக்கிறார். அவரது அறிக்கை >> 52

## 4 கட்சிகள் இணைந்து தனியாக முன்மொழிவு

*புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்வைக்கின்றன*

கொழும்பு, ஜன. 8
ஈ.பி.டி.பி., சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய நான்குகட்சிகளும் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான யோசனைகளைத் தனியாக முன்வைக்கவுள்ளன.
இந்த முன்மொழிவுகள் வழிகாட்டல் குழுவுக்கு தனி அறிக்கையாக வழங்கப்படும் என்று தமிழ் >> 52

## பிரிட்டனுக்கு மங்கள உயர்மட்டப் பயணம்

கொழும்பு, ஜன. 8
பிரிட்டனின் புதிய பிரதமராக தெரேஸா மே பதவியேற்ற பின் னர், அந்த நாட் டுக்கு இலங்கை சார்பில் உயர்மட்டப் பயணமாக, அயலுறவுத்துறை அமைச்சர் மங் கள சமர வீர செல்லவுள்ளார். நாளை திங்கட்கிழமை அவர் >> 52

## தேசிய ரீதியில் ஸ்கந்தா சாதிப்பு

### தொழில்நுட்பத் துறையில் யதுர்சாஜன் முதலிடம்



யாழ்ப்பாணம், ஜன. 8
கடந்த வருடம் நடந்த ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் யதுர்சாஜன் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார்.
இந்தச் சாதனை தொடர்பில் அவர் >> 52

## மகிந்த அணியினர் அடாவடி அம்பாந்தோட்டையில் பதற்றம்

–முதலீட்டு ஊக்குவிப்பு வலய ஆரம்ப நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கல்வீச்சு
–ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை வீச்சு, 23 பேர் காயம்; 52 பேர் கைது





கொழும்பு, ஜன. 8
நீதிமன்றினால் ஆர்ப்பாட்டங்கள் - போராட்டங்கள் நடத்துவதற்கு அம்பாந்தோட்டையில் தடை விதிக்கப்பட்டும், அதனையும் மீறி மகிந்த ஆதரவு அணியினரால், பிக்குகள் - சிங்கள மக்களைப் பயன்படுத்தி மிகப் பெரும் ஆர்ப்பாட்டம் அங்கு நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நீர்த் தாரைப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மேற்கொண்டனர். பதிலுக்கு மகிந்த அணியினர் கல் வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டனர். பெரும் களேபரம் அங்கு வெடித் >> 52

## இராணுவம், பொலிஸ் தலையிடாது

கொழும்பு, ஜன. 8
போரின்போது இடம்பெற்ற கொடுமைகள் தொடர்பாக நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாலோசனைச் செயல ணியுடன் கருத்துக் களைப் பகிர்ந்தவர்கள்விடயத்தில் இலங்கை இராணுவமோ, பொலிஸாரோ தலையீடு செய்யமாட்டார்கள்.
இவ்வாறு இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
போரின்போது தாம் பட்ட அவலங்களை, கவலை >> 52

## யாழ்.இந்து, வேம்படி பெறுபேற்றில் முன்னணி

### தலா 25 பேருக்கு 3 ஏ

யாழ்ப்பாணம், ஜன. 8
ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிகள வாகத் தலா 25 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் 18 பேரும், உயிரியல் பிரிவில் 7 பேரும் சிறப்புச் சித்தியைப் பெற்றுள்ளனர். >> 52

## நீ உருப்படமாட்டாய்

*இந்தச் சொல்லால்தான் சாதித்தேன் என்றார் தார்த்திகரன்*



கிளிநொச்சி, ஜன.8
நான் சாதாரண தரம் வரை படித்த பாடசாலையை விட்டு வெளியேறியபோது அந்தப் பாடசாலையின் அதிபர், நீ உருப்படமாட்டாய் எனச் சொல்லி அனுப்பி வைத்தார். அந்தச் சொல்லால்தான் நான் இன்று இந்தப் பெறுபேற்றைப் பெற்றேன். எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் ஒரு தொழில்நுட்பவியலாளராக >> 49

## வடக்கை விட எதற்கு அம்பாந்தோட்டையில் அதிகளவு பொலிஸார்?

### மகிந்த ராஜபக்ச கேள்வி

கொழும்பு, ஜன. 8
யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளை விட அம்பாந்தோட்டையில் அதிகளவு பொலிஸார், இராணுவத்தினர் ஏன் நேற்றுக் குவிக்கப்பட்டனர். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார். >> 52

## மகிந்த விற்றபோது எங்கு சென்றீர்கள்?

### கேட்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜன. 8
மகிந்த அரசு நாட்டின் இடங்களை வெளிநாடு களுக்கு விற்பனை செய்த போது இன்று போராட்டம் செய்பவர்கள் எங்கு சென்றிருந்தனர். நாட்டின் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்கால இளைஞர்களின் வாழ்க் கைக்கே முன்னெடுக் >> 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு அதிகாரத்தையும் கைப்பற்ற ரணில் சதி

## சிறப்பு அமைச்சர் பதவி குறித்து ஜே.வி.பி. சாடல்

கொழும்பு, ஜன. 8

அபிவிருத்திச் சிறப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மலிக் சமரவிக் ரம ஆகியோரே சிறப்பு அமைச்சர்களாகச் செயற்படுவார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்தியின் அதிகா ரத்தை ஒருவரின் கைக்குள் எடுக்கும் நோக்கில்தான் சிறப்பு அமைச்சு உரு வாக்கப்படவுள்ளது. இந்த உண்மையை உணர்ந்ததால்தான் மாகாண சபைகளில் இந்தச் சட்ட வரைவு தோற்கடிக்கப்படுகின்றது.

புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு அதிகாரம் நாடாளுமன்றுக்கு வழங்கப்படும்போது அந்த முழு அதிகாரத்தையும் தலைமை அமைச்சராக இருந்து கொண்டு தான் கைப்பற்றலாம் என்று ரணில் நினைக்கின்றார்.

அவ்வாறு அதிகாரம் அவரது கைக்கு வரும்போது அபிவிருத்தி அதிகார மும் அவருக்கு இலேசாக வந்துவிடும் என்று ரணில் நினைக்கின்றார். இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப் பட்டால் தலைமை அமைச் சர் ரணில் மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகிய இருவருமே சிறப்பு அமைச்சுப் பதவியைக் கைப்பற்றுவர்.

இந்தத் திட்டம் வெற்றி பெறாது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் ஒன்றி ணைந்தே இந்தச் சட்டவரைவை நாடாளுமன்றில் தோற்கடிப்பர் - என்றார். (த-5)

# நிரந்தர வீடுகள் கோரி சிதம்பரபுரம் மக்கள் நேற்றுப் போராட்டம்

## பொருத்து வீடு தருகிறோம் என அரசியல்வாதிகள் உறுதியளிப்பு



வவுனியா, ஜன. 8

நிரந்தர வீடுகள் கட்டித் தருமாறு கோரி வவுனியா சிதம்பரபுரம் கிராம மக்கள் வீதியில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொருத்து வீட்டைப் பார்த்து அது பிடித்திருந்தால் அறிவியுங்கள் அத்தகைய வீடுகளை வழங்குவோம் என அவர்களுக்கு அரசியல்வாதி கூறியதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

வவுனியா பிரதான வீதியி லிருந்து சிதம்பரபுரம் செல்லும் வீதியில் சிதம்பரபுரக் கிராமத்தில் நேற்று முற்பகல் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

'இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியி ருந்து 1996ஆம் ஆண்டு சிதம்பரபுரத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். அந்தக் காலத்தில் வீடமைப்பு அதிகார சபையினால் 25 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுத் தகரங்களால் சிறு கொட் டில்கள் அமைத்து இன்றுவரை வாழ்ந்து வருகிறோம்.

இன்றுவரை எமக்கு எது வித உதவிகளும் செய்யப்படவில்லை. 270 குடும்பங்கள் இங்கு வசிக்கிறோம். மழை, வெயில் காலங்களில் கொட் டில்களில் இருக்க முடியாமல் அவதிப்படுகிறோம். 21 வருடங்களாக நிரந்தர வீடுகள் இன்றி வசித்து வருகிறோம். இருப்பிடங்களைச் சீர் செய்து தருமாறும் கோருகிறோம்' என்று போராட்டத் தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரு மான கே. காதர் மஸ்தான் அவர்களுடன் கலந்துரையாடினார்.

"யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருத்து வீடு வவுனியாவில் அமைக்கப்படும். அதனைப் பாருங்கள். பிடித்திருந்தால் அதேபோல வீடு அமைத்துத்தரலாம்'என்று அவர் வாக்குறுதியளித்தார். அதனையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான செ. மயூரன், ம. தியாகராசா ஆகியோரும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தனர். (த-4)

# சுத்துக் கொட்டில் படிப்புக்கு நிகராகுமோ?



## அம்பலத்தாடி அப்புச்சி

வருடப் பிறப்புக்கு கூட்டித்துடைச்சு முடிக்கிறதுக்குள்ள முதுகு முறிஞ்சு போச்சுது. புது வருசத்துக்கு முன்னம் ஜேர்மனியிலயிருந்து என்ர முந்தின பிறெண்ட் ஒருத்தன் வந்து "அப்புச்சி அப்புச்சி" என்று கூப்பிட்டுக் கொண்டு வாசல்ல நின்றான். பூ வைச்சு சாமி கும்பிட்டிட்டு நிமிர்ந்த எனக்கு அவனைக் கண்டதும் பூரிப்பாப் போச்சுது. அவனும் என்னைக் கட்டிப்பிடிச்சு பரவசப் படுத்திப் போட்டான். அவன் கிட்ட வரேக்கயே சென்ட் வாசம் குமட் டிக் கொண்டுவந்தது. எண்டாலும் என்ன செய்ய பழைய சிநேகிதம்! தாங்கத்தானே வேணும். முந்தி எங்களுக்கு தமிழ் படிப்பிச்சவர் வித்துவான் என்று ஒரு வாத்தியார். அவர் ஒவ்வொரு நாளும் வகுப்புக்க வரேக்க குப்பென்று வாசம் வந்து வயிற்றப்பிரட்டும். என்னடா இப்பிடி நாறுது என்று பக்கத்தில இருக்கிறவங்களிட்டக் கேட்டாச் சொல்லுவாங்கள் வித்துவான் வாத்தியார் அத்தரப் பூசிக்கொண்டு வாறவரெண்டு. கனகாலத்துக்குப் பிறகு என்ர நண்பன் கிட்ட வந்து கட்டிப் பிடிக்க வித்துவான் வாத்தியார்தான் ஞாபகத்துக்கு வந்தார்.

"அப்புச்சி உன்ர எழுத்துக்களை நான் வாசிக்கிறனான். என்னைப் போல பல பேர் வெளியிலயிருந்து வாசிச்சு கொமன்ற்ஸ் சொல்லுறவங்கள். உனக்கு நேரடியாச் சொல்லுறதுக்கு வழியொன்றும் இல்லாததால சொல்லேலாமல் போச்சு. நான் போனகிழமை கம்பசுப் பக்கம் என்ர சினேகிதங்களைப் பார்க்கப் போனனான். அங்கை கம்பசு வாத்திமார் ரீ குடிக்கிற கொமன் ரூமில நீ எழுதின 'தொழுதுண்டு வாழுறது' என்றதை ரசிச்சு ருசிச்சு வாசிச்சு பெரிய டிஸ்கசன் நடந்ததைப் பார்த்தன். தற்செயலா நான் போனபடியா அதைக் கேட்க முடிஞ்சுது. அவையில கனபேர் உன்னைச் சந்திச்சுக் கதைக்க வேணுமென்றும் கதைச்சுக் கொண்டினம். இப்பிடி வாசிக்கிறவையள் உனக்கு நேரடியா தங்கட அபிப்பிராயத்தைச் சொல்ல நீ உனக்கொரு ஈ.மெயில் கிறியேற் பண்ணி வைச்சா நல்லது" என்று இழுத்தான்.

"எப்பனுக்கு மூச்சு விடு. இஞ்ச செத்துக் கித்துத் தொலைச்சிடாத" என்று நான் இடைமறிச்சதால தான் நிறுத்தினான். ஈமெயில் ஒன்றைக் கிறேயேற் பண்ணித் தாறன் என்றான்.

நான் சொன்னன், "என்ர கை இதுவரைக்கும் உந்தக் கொம்பியூட்டரைத் தொடாமல் கற்போட இருக்கு. அதைக் கெடுத்துப் போடாதை" எண்டன். வெளிநாட்டு உட்திரும்பல் எல்லே! நாங்கள் சொன்னா எதையும் விளங்கிக் கொள்ளுறவையே! அதால, "பேப்பர்காரனா இருந்து கொண்டு கொம்பியூட்டரைத் தொடமாட்டன் என்று விசர்க் கதை கதையாதை. உன்ர கிரந்தங்களை விட்டிட்டு இங்க வா" என்று தன்ர லப்டொப்பில் ஏதோ திண்டி என்ர பேரில் ஒரு ஈ மெயில் கிறேயேற் பண்ணினான். அது இதுதான் பாருங்கோ aappuchchi@gmail.com இனி உங்களுக்கு என்னைத் திட்ட வேணும் எண்டாலோ அல்லது யாரையாவது நீங்கள் என் மூலமாத் திட்டவேணும் எண்டாலோ இதில எனக்குச் சொல்லலாமாம். நான் சொல்லேல்ல. அவன் தான் அதையும் சொல்லித் தந்தவன். திட்டிறதுதான் திட்டுதுகள் கொஞ்சம் பார்த்து நாகரிகமாத் திட்டச் சொல்லு என்றுநான் சொல்லி வச்சன். இதை வைச்சுக் கொண்டு பேஸ் புக் ஒன்று திறந்தால் பொழுது போறதே தெரியாதாம். என்றான்.

உந்தக் கோதாரியச் சொல்லத்தான் வெளிநாட்டில இருந்து வந்தனியோ என்று நான் கொஞ்சம் கெம்பத் தொடங்கினாப் பிறகுதான் அடக்கத்துக்கே வந்தான். ஹோலுக்கு வந்த மனிசி ரெண்டு பேரையும் பார்த்து ஒரு முறை முறைச்சாள். இனி ஆள இஞ்ச வச்சிருந்தால் பிரச்சினை எண்டு போட்டு மெல்ல வெளிக்கிடுத்தி வாசலுக்குத் தள்ளிக்கொண்டுபோய் அனுப்பி வச்சிட்டன். கேற்றுக் கால வெளிக்கிடேக்க, அங்கால இஞ்சால எல்லாம் பார்த்து படு ரகசியமா, "கண்டபடிக்குக் குடிச்சு எனக்குப் பேச்சு வாங்கித் தராத, மருந்து மாதிரிக் குடி" என்று போட்டு பள பளப்பா நீளமா ஒரு பெட்டியைக் கையில திணிச்சுப்போட்டுப் போட்டான். அதைச் சாரனுக்குள்ள மறைச்சுக் கிறைச்சு அறைக்குள்ள கொண்டு வந்து மறைச்சு வைக்கிறத்துக்குள்ள போதும்போதும் என்றாகிப்போச்சு. வச்சிட்டு நிமிரப் பக்கெண்டாகிப் போச்சு. மகன் வழிப் பேர்த்தி ஒருத்தி நிக்கிறாள்.

"அங்க என்ன தேடுறியள்" எண்டாள். நல்ல வேளை நான் போத்தல் வச்சதக் காணயில்லை. "அதெல்லாம் கிடக்கட் டும் நீயென்ன கனநாளைக்குப் பிறகு இந்தப் பக்கம்?" என்று கதைய மாத்தினன். "வார பத்தாம் திகதி எனக்குப் பட்டமளிப்பு விழா அதுக்கு நீங்கள் வரவேணும் என்றாள். "என்னத்தை நான் வந்து..." என்று நான் இழுக்க. "உங்கட பரம்பரையிலேயே நான்தான் முதலாவது பட்டதாரி. கட்டாயம் வரவேணும்" என்றாள்.

பின்ன, என்ர வாய் சும்மா கிடக்குமே! "உவங்கள் என்னத்தை படிப்பிச்சு உங்களுக்குப் பட்டத்தைத் கொடுக்கிறாங்கள் என்று எனக்குத் தெரியாதெண்டு நினைச்சியே! முன்னுக்குள்ள போட்டோக் கொப்பிக் கடைக்காரனிட்ட ஒரு கட்டை அடிச்சு வாங்கினா நானும் பட்டம் எடுத்துப் போடுவன். அவன் தான் வரிசைக்கு எல்லாத்தையும் அடிச்சுக் கிளிப் பில தொங்க விட்டிருக்கிறானே! அதைப் பார்த்து ஆரிட்டையும் குடுத்து டைப் அடிச்சுப்போட்டு எனக்குப் பட்டம் எண்டு கதைக்க வந்திட்டியோ!" எண்டு நானும் கொஞ்சமென்ன, கூடத்தான் கதைச்சுப் போட்டன்.

என்ர வாயக் கிளறினா அது சும்மாவிடுமே! "பட்டம் கிடைச்சா, பிறகு வேலையில்லாப் பட்டதாரிச் சங்கம் வைப்பியள். பிறகு பலாலி றோட்டிலை இல்லாட்டி வைமன் ரோட்டில, இல்லாட்டி தியேட்டர் வாசலில கால் கடுக்க நிப்பியள். கொடி கட்டிக் கொண்டு திரிஞ்சு வாலை பிடிச்சு உருவி வேலை வாங்குறதும் ஒரு பிளைப்பே! உதுக்குத்தானே கம்பசில படிப்பிக்கிற நீங்கள். உங்கட கம்பஸ் ஒரு அறிவாளியை, விஞ்ஞானியை உருவாக்கினதக் காட்டுபார்ப்பம்" எண்டு நான் சொன்னதும் அவளுக்கு மூக்குக்கு மேல கோபம் வந்திட்டுது.

"சுத்துக் கொட்டில்ல சுருட்டு சுத்தில உங்களுக்கு கம்பஸ் படிப்பைப் பற்றி என்ன விளங்கும்!" என்று பொரிஞ்சு தள்ளினாள். சும்மா சொல்லக்கூடாது ஆள் நல்ல சிவப்பி எண்டதால, கோபம் வந்தவுடனும் மூஞ்சை கீஞ்சை எல்லாம் சிவத்துப்போய் ஆள் பார்க்க நல்லா இருப்பாள். அதுக்காகவே அவளச் சீண்டிறதில எனக்கொரு சுகம்.

"சுத்துக் கொட்டில் வெறும் சுருட்டுச் சுத்திற இடமென்றே நினைச்சிட்டாய். அது ஒரு பல்கலைக் கழகம். காலையில நாங்கள் சுத்தத் தொடங்கேக்க ஒருத்தர் பேப்பர் படிப்பார். பிறகு அதப் பற்றி விலா வாரியா கதைப்பம். றேடியோவில செய்தி நேரத்துக்கு நேரம் போகும். உலக விசயமும் நாட்டு நடப்பும் அத்துப்படி. அரசியல் கதைச்சு ஒரு விவா தம் நடத்தி முடிச்சுத்தான். சுத்துக் கொட்டில மூடுவம். அந்தப் படிப்புக்கு வருமே இப்பத்தையான் கம்பஸ் படிப்பு. உங்களுக்குத்தான் கம்பசில அரசியல் நீக்கம் - அதுதான் நலமடிச்சுப் போட்டாங்களாமே! யாரின்ரையும் புத்தகங்களையும் ஆய் வையும் பார்த்து எழுதிப்போட்டு சொல்லுகளை மாத்தியெழுதி நீங்கள் பெரியாக்கள் எண்டால் நாங்கள் கேக்கவேணுமோ!" என்று நான் இன்னும் சீண்ட அவளுக்குத் தலை கால் புரியாத கோபம் ஏறிட்டுது. "பட்டமளிப்புக்கு நீங்கள் வரவேண்டாம். நான் அப்பம்மாவக் கூட்டிக்கொண்டு போறன்" என்று கத்திப்போட்டு வெளிக்கிட்டிட்டாள். இப்பத்தயப் பிள்ளையள் உண்மையச் சொன்னால் உடனும் கோபப்படுகுதுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 8
திருநெல்வேலி இராமநாதன் வீதி (யாழ். பல்கலை. முன்பாக) மறுசீரமைப்பு வேலைகளுக்காக இன்று காலை 6 மணியிலிருந்து மாலை 7.30 மணி வரையும் வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும் என்று யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது. (த-5)

## மூச்சுத் திணறி குழந்தை சாவு

பிறந்து நான்கு நாள்களேயான ஆண் குழந்தை மூச்சுத் திணறி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
அளவெட்டியில் வசிக்கும் 19 வயதுத் தாயாருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. பால் குடித்த குழந்தை அசைவின்றி இருப்பதை உணர்ந்த தாயார் பிள்ளையை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். குழந்தை மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்ததாக மருத்துவர்கள், உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர். (த-5-10)

### தேவை (உடன் வேலை வாய்ப்பு)

நன்றாக ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியை (பெண்) தேவை. கேக் ஐசிங், தையல் தெரிந்த பெண்களும் தேவை. பயிற்சி அளிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
தொடர்பு:- 076 570 3988

### கார் விற்பனைக்கு

சாவகச்சேரியில் டாக்டரின் பாவனையிலுள்ள Toyota Corolla CE 90, 64 - (வெள்ளை நிறம்) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
விலை 13,10 000.00 தொடர்பு: 0719900211

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் புத்தூர் வைத்தியசாலையுடன் இணைந்த புத்தூர் சுன்னாகம் சந்திக்கருகில் 13 பரப்பு 14 குளி காணி உடன் விற்பனைக்குண்டு. சுற்றுமதில் கிணறு உண்டு. வைத்தியசாலை, சுப்பர்மார்கட், வியாபாரக் கட்டடத் தொகுதி, பல்கலைக்கழகம் என்பவற்றிற்கு ஏற்ற காணி.
தொடர்பு: 077 221 6416

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியரின் 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு வைத்தியசாலைக்கு அருகில் வீடு வாடகைக்குத் தேவை.
076 395 5566

### வேலைவாய்ப்புக்கள்

A/L பரீட்சைப் பெறுபேறுகள் வந்துவிட்டதா?
தனியார் துறையில் சாதிக்க விரும்புகிறீர்களா?
இன்றே Winstar Job Bank உடன் இணையுங்கள்
பின்வரும் பதவி வெற்றிடங்கள் எம் நிறுவனத்தில் உள்ளன.

- Front Office Excecutive
- Manager
- Admin Officer
- Office assistant
- Marketing Excecutive

விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
காலம்: திங்கள்.- வெள்ளி 10am - 4pm
**WINSTAR JOB BANK**
106,Post box junction.
Palaly Road,
Thirunelvely Jaffna.
T.P: 021 320 2789
Fb: Winstar job bank
Wed : www.winstarjaffna.com



## Study In Latvia

Schengen visa
WITH WORK PERMISSION

மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்
**2017**
VENUE EXPONET COLOMBO

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Sehengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக Rs. 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.,
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி

கொழும்பு மற்றும் யாழ். கிளையினூடாக முற்றிலும் இலவசமாக Latvia Studen Visa தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.

EXPONET
Overseas Consultants
www.expogroup.lk
No. 379-1/2 Galle Road, Col -06.
Hotline: 0714150995
E-mail: nimal@expogroup.lk
136 Palali Road, Parameswara Junction.
021 7538395

## புத்தம் புதிய ஆரம்பம்......

## CIMA / CMA / CA / AAT

STARTS ON
WEEK DAY BATCH - 16.01.2017
WEEK END BATCH - 15.01.2017

SPECIAL SCHOLARSHIP SCHEME FOR YOU

| | | |
|---|---|---|
| DISTRICT RANK | ( 1 - 5 ) | - 100% |
| DISTRICT RANK | ( 6 - 15) | - 70% |
| DISTRICT RANK | ( 16 - 100) | - 50% |
| DISTRICT RANK | ( 100 - 200 ) | - 25% |

FOR SMS REGISTRATION - 077 932 4255
WHITE LOTUS CAMPUS
154, A1 Navalar Road, Jaffna.
021 722 3773/ 077 622 3963/ 077 932 4255

## வாழ்த்தி வரவேற்கிறோம்

2016 A/L பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில்

## மாபெரும் கௌரவிப்பு விழா

கணித, விஞ்ஞான, வர்த்தக, கலை மற்றும் தொழில் நுட்ப பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதல் 100 இடங்களைப் பெற்ற வடமாகாண மாணவர்களுக்கான சிறப்பு கௌரவிப்பு நிகழ்வு.
பொருத்தமானவர்கள் உங்களது பெயர் விவரங்களை 12.01.2017 இற்கு முன்னர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

வெண்தாமரை நிதியம்
இல. 154 A1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 722 3773, 077 622 3963

## விஸ்டம் தொழில் நுட்பக்கல்லூரி

விஸ்டம்
இல-63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 0772487774

பாராட்டி வாழ்த்துகின்றோம் 2016 (A/L தொழினுட்பப்பிரிவு)


K. Jathursajan (jaffna)
E.TECH
Island Rank - 01
Dist Rank - 01


Nilani R (jaffna)
E.TECH
Island Rank - 67
Dist Rank - 02


S. Vishnuvarathan (jaffna)
E.TECH
Island Rank - 104
Dist Rank - 04


K.Kalaiyamuthan (mullai)
E.TECH
Island Rank - 751
Dist Rank - 01


Y.Shainthan ( mullai)
E.TECH
Island Rank -829
Dist Rank - 02


T.Sangeev (Trinco)
E.TECH
Island Rank - 253
Dist Rank - 01


P.Dillujan (Vavuniya)
E.TECH
Island Rank -559
Dist Rank - 01


I.Akimsha (Jaffna)
B.TECH
Island Rank - 06
Dist Rank - 01


Sujevathany V(jaffna)
B.TECH
Island Rank - 19
Dist Rank - 03


D.Judzy (Mullai)
B.TECH
Island Rank - 125
Dist Rank - 02


T.Dilojan (Kili)
B.TECH
Island Rank -77
Dist Rank - 02

E.TECH

| | Result | D Rank |
|---|---|---|
| Krishalini Sellathurai | 3B | 6 |
| Jeyamohan Joel Jeyappirakash | A2B | 7 |
| Sempatsothy Piranavan | [illegible] | [illegible] |
| Thanabalaratnam Athavan | [illegible] | [illegible] |
| Kandasamy Vijay | 2BC | 11 |
| Vithiya Rasanayagam | B2C | 13 |
| Purushalini Purusothman | 3C | 4 |

| | Result | D.Rank |
|---|---|---|
| Thanaventhan Malavan | B2C | 24 |
| Amirthalingam Gowthaman | 2BS | 27 |
| Re[illegible] | [illegible] | [illegible] |
| Raveenthiran Ketheeswaran | B2C | 32 |
| Ganeshamoorthy [illegible] | 3C | 38 |
| Eruthayaseeli Eruthayarasa | 3C | 43 |
| Arasalingam Jude | 3C | 50 |

B.TECH

| | Result | D.Rank |
|---|---|---|
| K.Dilkki | A2B | 5 |
| T.Vithursan | ABC | 7 |
| J.Nithurshan | A2B | 8 |
| J.Nolin | A2B | 10 |
| G.Saraga | ABC | 12 |
| S.Pavitha | 3B | 13 |
| E.Thishanthini | 2BC | 14 |

| | Result | D.Rank |
|---|---|---|
| Rumesh | 3B | 16 |
| S.Lojana | ABC | 19 |
| Elini | 2BC | 21 |
| S.Vithusha | ABC | 22 |
| V.Nishanthini | ABC | 23 |
| S.Dayani | B2C | 24 |
| S.Tharshana | 2BC | 29 |
| T.Sankavi (Kili) | 3B | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்குண்டு
சொக்கட்டான் பந்தல், படங்கள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 114 1073

### காணி விற்பனைக்கு
ஊர்காவற்றுறை வடக்கு நாரந்தனையில் (BUS ROAD 777)மார்க பண்ணை றோட்டின் பிரதான வீதியில் தம்பாட்டி சந்திக்கு அண்மையாக 34 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. இதனை பகுதியாகவோ/ முழுமையாகவோ விற்கப்படும்.
011 233 4507

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மணியந்தோட்டப் பகுதியில் கடற்கரைக்கு அண்மித்த அழிவடைந்த தென்னந் தோட்டக் காணி குடியிருப்புகளுக்கு பொருத்தமாக பிரித்து விற்கப்படுகிறது.
பரப்பு 2.50 இலட்சம்
071 424 1000

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு
யாழ்.சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
077 614 6434

### விற்பனைக்கு
TATA 207 Pikup (Alluminiya Full Body) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 354 9092

### காணி விற்பனைக்கு
திருநெல்வேலி பலாலி வீதிக்கருகில் நல்ல சூழலில் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. (தரகர் வேண்டாம்)
076 569 5684

### வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு
கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலும் ஆஸ்பத்திரி, பாடசாலை, புகையிரத நிலையத்துக்கும் மிக அண்மையிலும் கூடிய 5½ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தோட்டம் செய்வதற்கும் வசதி உண்டு. பலாலி வீதிக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் மத்தியில் உள்ளது.
077 900 6841, 021 222 4113

### வீடு விற்பனைக்கு
சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள ஒரு பரப்பும் 16 குளியும் உள்ள காணியும் அதனுள் அடங்கும் வீடும் விற்பனைக்குண்டு.
077 614 6434

## தேவை

### சாரதி தேவை
SALES விற்பனையில் ஈடுபடும் கனரக வாகனத்துக்கு (LORRY) சாரதி தேவை. தங்குமிடம் உண்டு.
077 220 8455, 077 884 9259

### வேலையாள்கள் தேவை
கோண்டாவிலிலுள்ள ஹாட்வெயார் நிறுவனத்துக்கு ஆண் வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள் விரும்பத்தக்கது.
077 252 8957

### வேலையாள்கள் தேவை
கொழும்பு, கம்பஹா பிரதேசங்களில் கட்டட வேலைக்கு கூலியாள்கள் மேசன் உடன் தேவை. சம்பளம் மேசன்-1800+OT, கூலிக்கு-1300+OT. தங்குமிடம் வழங்கப்படும்.
077 227 4663

### வேலையாள்கள் தேவை
அம்பாள் சேர்விஸ் ஸ்ரேசனுக்கு அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் தேவை.
அம்பாள் சேர்விஸ் ஸ்ரேசன்
K.K.S.Road மருதனார் மடம்.
077 787 2322

### வீடு தேவை
யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நல்ல நிலையில் உள்ள வீடு விலைக்குத் தேவை.
076 391 7049

### பராமரிப்பாளர் தேவை
70 வயது (ஆண்) முதியவர் ஒருவரை நல்லூரில் உள்ள வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 704 6968

### மணமகள் தேவை
1982, தனியார் துறையில் தொழில் பார்க்கும் அத்த நட்சத்திரம் 3 ஆம் பாதம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆணுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 077 868 3847

### பெண் உதவியாளர் தேவை
சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கிநின்று பணிபுரியக்கூடிய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
071 519 6116

## ஏனையவை

### வீடு வாடகைக்குண்டு
தெல்லிப்பழை, புகையிரத நிலையவீதியில், வைத்தியசாலைக்கு அருகில் சிறந்த வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
071 838 1077

### அலுவலகம்/ களஞ்சிய அறை வாடகைக்குண்டு
கஸ்தூரியார் வீதியில் உதயன் பணிமனைக்கும் கன்னாதிட்டி சந்திக்கும் மத்தியில் முன்னர் கூட்டுறவு இன்சூரன்ஸ் அலுவலகம் அமைந்த பகுதி வாடகைக்குண்டு.
077 036 5768

### அறைகள் வாடகைக்கு
67/42, சீனிவாசகம் வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அறைகள் வாடகைக்கு உண்டு. ஆண் மாணவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 728 3811

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### Tamil/ English Chemistry Personal Classes
Basic, inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்.
075 046 0555

### பிரத்தியேக வகுப்புக்கள்
◆ பொருளியல் ( A/L) ◆ வணிகக்கல்வி ◆ கணக்கீடு ◆ குடியியற் கல்வி ( O/L)
தனியாகவும் குழுவாகவும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
077 906 4595, 077 900 7597

### வகுப்பு (கணிதம்)
தரம் 5 (புலமைப்பரிசில்) மற்றும் தரம் 6 முதல் O/L வரையான வகுப்புகளுக்கான கணிதம் பலவருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
077 937 0228

### MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 / 1.00 / 7.00 / 9.30 4.00 PM




சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்றோன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
விசாரணை 021-2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

### கடை வாடகைக்கு
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் (NSB வங்கிக்கு அருகில்) அமைந்துள்ள கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 222 8875

### வீடு வாடகைக்கு உண்டு
மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
077 790 6224

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி நல்லூர் கல்வியங்காடு பகுதியில் 06 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள் தனியார் நிறுவனங் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
077 355 3997, 021 222 9831

### பணியாளர்கள் தேவை
**சுஜித் என்ரப்பிரைசஸ்**
நிறுவனத்தில் பணிபுரிய விற்பனை முகவர்கள், பணம் அறவிடும் உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. பட்டா வகை வாகனங்களும் தேவை. சம்பளம் 70.000/= - 100.000/= வரை பெறலாம்.
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
தொடர்பு: 021 227 0586
077 904 1258

### வேலைவாய்ப்புக்கள்
பிரபல தனியார் வைத்தியசாலையில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
- ✓ Attendant
- ✓ Nurses
- ✓ Pharmacist

பின்வரும் வேலைவாய்ப்புக் களைப் பெற விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற் கொள்ளலாம்.
(பதிவுக்கட்டணம் உண்டு.)
**WINSTAR JOB BANK**
#106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
021 320 2789

### வேலை வாய்ப்பு
கொழும்பிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள Tourist Hotel ஒன்றுக்கும் கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.
Electrician, Accountant, Receptionist (Male, Female), Kitchen Helpers, Storekeeper, Drivers, Stewerds, Room Boys, Kitchen Supervisor, Night Manager, Manager
214/2, Messenger Street, Colombo - 12
T.P - 0779328895, 0112329664

### வீடு வாடகைக்கு
கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அதி நவீன வசதிகளுடன் ஆடம்பரமான வீடு (குளிரூட்டப்பட்ட) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு:
077 718 6700

### மணமகன் தேவை
யாழ் மயிடிலிட்டியில் பிறந்து பருத்தித் துறையில் வசிக்கும் அழகிய இந்துப் பெண்ணான 09.03.1979 01.25AM புனர்பூசம் 3 ஆம் கால் சூரியன், செவ்வாய் மூன்றாம் இடத்தில் உள்ள சாதகருக்கு மணமகனைத் தேடுகின்றோம். பொருத்தமானவர்கள் படமும் குறிப்பும் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும்.
email2jeeva@yahoo.co.uk
077 337 4467

### விற்பனையாளர்கள் தேவை
கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புக்கு:- த.குமாரசாமி அன் சன்ஸ்
252, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

### Air Ticket & Visa
சகலநாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள், விசாக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சென்னை, மதுரை விசேட விலைக்கழிவுடன் 23,800/=
மலேசியா, தாய்லாந்து, பாங்கொக், இந்தியா நாடுகளுக்கான விசாக்களை மிக விரைவில் பெறலாம்.
Air Ticketing வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளுடன் தற்போது.
SB Travels & Tours(Pvt) Ltd.
216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1080, 81 / 076 691 1082, 83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிடமுடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்**

**யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அமெரிக்கன் வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்**

உரிய ஏற்றுமதி விலையான ரூ. **1500/- 3000/-** வரையான நகைகளுக்கு

**ரூபா. 100/- 200/- 300/- மட்டுமே**

**2017 ஜனவரி 09, 10, 11 (திங்கள், செவ்வாய், புதன்) திகதிகளில்**

**நேரம் : காலை 9.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை**
**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

ரூ. **100/- 200/- 300/-** இக்கு விற்பனை செய்யும் ரூ. **3000/-**
ஏற்றுமதி பெறுமதி கொண்ட **10** இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

**இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்**

| | |
|---|---|
| ❖ ஆஸ்திரேலியன் டயமன் மோதிரம் | ரூ. 100/- only |
| ❖ சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் | ரூ. 100/- only |
| ❖ அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் | ரூ. 100/- only |
| ❖ மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் | ரூ. 100/- only |
| ❖ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ. 200/- only |
| ❖ ஆஸ்திரேலிய டயமன்ட் செயின் | ரூ. 300/- only |
| ❖ பஞ்சாப் பியூட்டி குயின் மாலை | ரூ. 300/- only |
| ❖ அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் | ரூ. 300/- only |
| ❖ கிரிஸ்டல் நெக்லஸ் செட் | ரூ. 300/- only |
| ❖ ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் | ரூ. 300/- only |
| ❖ இத்தாலிய டயமன்ட் தோடுகள் | ரூ. 300/- only |
| ❖ ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் | ரூ. 300/- only |
| ❖ ஜெய்பூர் குண்டன் நெக்லஸ் செட் | ரூ. 300/- only |
| ❖ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ. 300/- only |

**விசேட சலுகை: விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபா 500/- &, ரூபா 5000/- வரை ஆபரணங்கள்**

**இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

அனுமதி இலவசம் தொலைபேசி : 0776070459 Sponsor : S&G International Agency (Pvt) Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் ▶ 06

சீட்டிழுப்பு திகதி ▶ 07.01.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 15 16 31 56

சுப்பர் இலக்கம்: 01

அதிர்ஷ்ட மாதம்: பெப்ரவரி

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 6, 148, 005/= | 2, 135,214/= | 1, 000, 000/= |

12.01.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

www.dlb.lk

## புளோரன்ஸ் நைற்றிங்கேள்

### தாதியர் பாடசாலை

O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் ஒரு வருட தாதியர் பயிற்சியின் பின் உங்களுக்கான நிரந்தர தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்



| | |
|---|---|
| தகைமைகள் | : O/L ஆறு பாடங்களில் சித்தி |
| வயது | : 16 - 35 வரை |
| **MLT வகுப்புகள்** | |
| தகைமை | : A/L விஞ்ஞான பீடம் |
| வயது | : 18 - 35 வரை |

அரசாங்க வைத்தியசாலையில் உள்ள சிரேஸ்ட வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படும்.

முந்திக்கொள்ளும் முதல் பத்து (10) பேருக்கு முற்பணம் 50% குறைக்கப்படும்

**எமது காரியாலய கடமை நேரம்**
**திங்கள் முதல் வெள்ளி வரை**
**காலை 8 - பி.ப 4 மணிவரை**

கே.கே.எஸ். றோட், மருதனார் மடம், ஆஞ்சநேயர் கோயில் முன்பாக
T.P: 0777 186 438 / 021 492 8916

## மருந்தாளர் தேவை (Pharmacist)

**சம்பளம் 50,000 + Bonus**

கிளிநொச்சியில் இயங்கும் முன்னணி மருத்துவ நிலையம் ஒன்றிற்கு மருந்தாளர் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு - சு. நதலன்**
**077 627 4919**

## வவுனியா BUFEA INN

### ஹோட்டலுக்கு பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை



* சமையல் வேலை தெரிந்தவர்கள் (ஆண், பெண்)
* அப்பம், கொத்து, பிறைட்ரைஸ் போடத் தெரிந்தவர்கள் (ஆண்)
* Tea Maker, Waiter (சப்ளையர்) (ஆண், பெண்)
* தகுந்த சம்பளம் மற்றும் தங்குமிட வசதியும் உண்டு

தொடர்புகளுக்கு :
**S. மதன் - 077 476 7320, 077 221 0284**

## மரண அறிவித்தல்



திருமதி
### சோதிமலர் வேலுப்பிள்ளை
( முன்னாள் தாதி, ஈஸ்வரிவைத்தியசாலை காங்கேசன்துறை முன்னாள் தாதி)

கலைமகள் வீதி, தையிட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கு மின்சார நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிமலர் வேலுப்பிள்ளை நேற்று(07.01.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் சின்னதங்கம் தம்பதியினரின் பாசமிகு மகளும் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவமணியின் அன்புச்சகோதரியும் கயாணி(கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் - சத்திரசிகிச்சைக்கூடம்).ரகுவர்மன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமாரின் (இந்தோனேசியா) பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப .ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 207 3347, 077 462 2316

## சாரதிகள் தேவை

கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதிகள் அவசரம் தேவை. வெளிமாவட்டங்களுக்குச் சென்று வரக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**021 222 3344, 076 695 3339** (J/7484) (11,17,18)

## SUPER LUXURY BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi

581, K.K.S ROAD, JAFFNA.

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு அடிகார்ஒழுங்கை (V.C கோப்பாய் எதிராக, 1/2 Km)கல்வலவூரில் 11இலட்சம் பெறுமதியான **ஐந்து அறைகளைக் கொண்ட ஓர் பெரிய வீடு** உண்டு. **நடுவில் முற்றம் உண்டு.** இந்தக் கட்டடத்திற்கு **Rangoun teak** பயன்படுத்தப் பட்டது.

Road frontage, மின்சாரம், குழாய்க்கிணறு உண்டு.

தரகர் தேவையில்லை. Inspection by appointment

R.வசந்தசேனன்
RTD-District Judge (மாவட்ட நீதிபதி)
No. 3,ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
Tel: 021 225 5161 Mobile: 077 400 6797

## வேலையாள்கள் தேவை

**எமது பிரபல காட்சி அறைக்கு விற்பனை உதவியாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

**021 221 6145, 077 351 5980** (J/7485) (11,17,18)

## வேலைவாய்ப்பு

யாழில் உள்ள பிரபல தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த சாதாரணதர கல்வியறிவு போதுமானது. 35000/= இற்கு மேல் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.

078 500 0580, 078 600 7598

Hutch off Stanly Rd, Jaffna.

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 10 . 1922 | 06 . 01 . 2017 |

### திருமதி பொன்னம்மா அம்பலவாணர்

வீமன்காமம், டச்சுறோட், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா அம்பலவாணர் 06.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - குஞ்சரம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராணி, திருச்செல்வம், துரைச்செல்வம் மற்றும் புஷ்பராணி (பிரான்ஸ்), தவச்செல்வம் (வவா), வசந்தராணி (கொழும்பு), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் உஷாராணி (நிலந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தவரத்தினம் மற்றும் இந்திராணி, செல்லம்மா, வன்னியசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலியுகரதி மற்றும் தயாபரநாதன் (அபுதாபி), சாந்தா (கொலண்ட்), சுபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகத்தில் உள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.258, Dr. சுப்பிரமணியம் வீதி,**
**சுன்னாகம் மேற்கு,**
**சுன்னாகம்.**

(J/7488) (11,17,18)


தகவல்:
குடும்பத்தினர்.

**021 321 3484**

## SALE

### விசேட விலைக்கழிவில்

நில, சுவர் பதிப்பு மாபிள்கள் மற்றும் குளியலறை சாதனங்கள்



**LOT MIXED TILES** களுக்கு வாடிக்கையாளர்கள் எதிர்பாக்கமுடியாத விலைக்கழிவில்...

**HOUSE OF CERAMICS**

581, K.K.S Road, Jaffna. | 115, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டம்

# சுயமாகத் தேடிக் கற்றால் உயர் நிலை அடையலாம்

### தேசிய நிலையில் இரண்டாம் நிலை பெற்ற குருபகேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.8

கணினித் துறையில் சிறந்த வல்லுநராக வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 3 ஏ பெற்றுச் சித்தியடைந்து தேசிய மட்டத்தில் இரண்டாம் நிலையும், மாவட்ட மட்டத்தில் முதல் நிலையும் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் குருபகேசன்.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் குரு பகேசன் தேசிய மட்டத்தில் இரண்டாம் நிலையும், மாவட்ட மட்டத்தில் முதல்நிலையும் பெற்றுள்ளார்.

நாங்கள் எங்களுக்குத் தேவையான விடயங்களை சுயமாகத் தேடி அறிந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் கற்பிப்பார்கள் என்று இருந்து விடக்கூடாது. புத்தகக் கல்வியை விட்டு வெளி உலகில் உள்ள விடயங்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். அதனைப் பின்பற்றியே நான் வெற்றி கொண்டேன்.

எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், பாடசாலை அதிபர், பெற்றோர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். மாணவர்கள் மத்தியில் தற்போது பல சவால்கள் காணப்படுகின்றன. சமூக வலைதளங்கள் மற்றும் முக நூல் என்பன அவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றுக்கு நீண்ட நேரத்தை ஒதுக்காது மாணவர்கள் கல்வியில் அதிக நேரத்தை செலுத்த வேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ற-8)

# வில்பத்துவின் விரிவாக்கத்தை நிறுத்தவேண்டும் ஜனாதிபதி

### வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு கடிதம் மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.8

வடக்கு மாகாணத்தில் உள்ள வில்பத்து சரணாலயம் விரிவாக்கம் எனும் நடவடிக்கையானது நாட்டின் இனங்களுக்கிடையிலான அமைதியை சீர்குலைக்க சூழ்ச்சி செய்யும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளின் திருவிளையாடல். இந்த நடவடிக்கை ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு செயலாளர். பி.ஏ.எஸ்.சுப்யான் மௌலவி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

தாங்கள் அண்மையில் வடமாகாணத்தில் உள்ள வில்பத்து சரணாலயத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளீர்கள். இந்தச் செய்தியால் மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வில்பத்து வனப் பிரதேசத்தை அண்டியுள்ள மக்கள் மிக மன வேதனையுடன் உள்ளனர்.

நாட்டின் வளங்களும் சுற்றுச் சூழல்களும் இயற்கைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தங்களுடைய கொள்கையில் நாங்களும் முற்று முழுதாக உடன்படுகின்றோம். வில்பத்து சரணாலய விரிவாக்கம் எனும் பெயரில் இந்தப் பகுதியில் பாரம் பரியமாக வாழ்ந்து வந்த மக்களின் அடிப்படை வாழ்வுரிமை, வாழ்விடவுரிமை பறிக்கப்படுவதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தலைவர் என்ற வகையில் தாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பதே எங்களது முழுமையான நம்பிக்கை.

25 வருடங்களிற்கு பிறகு முஸ்லிம்களுக்கு தற்போது தான் தங்களுடைய கிராமங்களுக்கு மீள் திரும்பக்கூடிய அச்சம் அற்ற சூழல் உருவாகியுள்ளது. தங்களது சொந்த இடத்திற்கு திரும்பி வந்து காடாகக் காட்சியளிக்கும் தங்களது பாரம்பரிய கிராமத்தை மிகவும் சிரமப்பட்டு துப்புரவு செய்து மீளவும் மீள்குடியேறிவரும் வேளையில் தங்களது இந்த அறிவிப்பு மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்து போலாகும்.

தற்போது ஜனாதிபதி அறிவித்துள்ள வில்பத்து சரணாலயத்தை விரிவுபடுத்தி வனஜீவராசிகள் வலயமாக பிரகடனப்படுத்தல் எனும் தீர்மானத்தை தாங்கள் கைவிட வேண்டும், 2012 ஒக்ரோபர் 10ஆம் திகதி வெளிவிடப்பட்ட இல 1879/15 என்னும் வர்த்தமானி அறிவித்தலையும் தாங்கள் இரத்து செய்ய வேண்டும் எனும் இரண்டு கோரிக்கையை நல்லாட்சியின் ஜனாதிபதி என்ற வகையில் தங்களிடம் முன்வைக்கின்றோம்.- என்றுள்ளது. (ற-21,32)

# விண்வெளி ஆராய்ச்சியாளராக உருவாகுவதே எனது விருப்பம்

### உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற கம்சா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.8

தமிழர்களாகிய எங்களிடம் இருக்கும் தற்போதைய ஆயுதம் கல்வி மட்டும்தான். தமிழ் மாணவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3ஏ பெற்றுச்சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள வேம்படி மகளிர் கல்லூரி மாணவி த.கம்சா தெரிவித் தார்.

2016ஆம் ஆண்டு க.பொ.த உயர்தப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் கம்சா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எனது பாடசாலைக் கல்விக் காலத்தில் கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். நான் எதிர்காலத்தில் சிறந்த விண்வெளி ஆராய்ச்சியாளராக வருவதே எனது விருப்பம். நான் எனது பாடங்களை வகுப்பறையில் கற்பிக்கும் போதே அதனை விளங்கிக் கொள்வேன். சந்தேகங்கள் இருப்பின் உடனுக்குடன் ஆசிரியர்களிடம் கேட்டுகொள்வேன் -என்றார். (ற-8)

# திண்மக் கழிவு சேகரிப்பு நிலையங்கள் விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.மாநகரப் பகுதியில் திண்மக் கழிவுகளைச் சேகரிப்பதற்கான நிலையங்கள் அமைக்கும் பணிகள் இந்த மாதத்தில் துரிதப்படுத்தப்படவுள்ளன.

பாஷையூர், குருநகர், அரியாலை, நல்லூர், நாவாந்துறை, மடத்தடி, தண்ணீர்த்தாங்கியடி போன்ற இடங்களில் திண்மக் கழிவுகளைச் சேகரிப்பதற்கான நிலையங்கள் அமைக்கப்படுகின்றன என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தப் பகுதி மக்கள் தமது சுற்றாடல்களில் சேகரிக்கும் கழிவுகளை தரம்பிரித்து இந்த நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும். உக்கும் உக்காத மற்றும் கண்ணாடிப் பொருள்கள் போன்றவற்றை மக்கள் வேறாக்கி இந்த நிலையத்தில் ஒப்படைக்க முடியும். திண்மக் கழிவகற்றும் நிலையங்கள் மாநகர, வட்டார ரீதியில் விஸ்தரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்தார். (ற-17)



முல்லைத்தீவு நகரத்துக்கு அண்மையாக உள்ள சுற்றுலா மையமான கடற்கரை பிரதேசம் மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசங்கள் கரைதுறைப்பற்று பிரதேச சபையால் சுத்தமாக்கப்பட்டு அழகுபடுத்தப்படுகின்றது. (ற-21)

கிளிநொச்சி மாவட்டம்

# மாவட்ட செயலாளராக மக்களுக்கு உதவுவேன்

### கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற துவாரகன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜன.8

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு சேவையாற்றவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் ர.துவாரகன்.

2016ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் துவாரகன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

மாவட்டச் செயலாளராக உருவாகி மாவட்ட மக்களுக்கு சேவையாற்றவேண்டும் என்பது எனது விருப்பம். இந்தப் பெறுபேற்றைப் பெற உதவியவர்களுக்கு நன்றிகள்- என்று அவர் கூறினார். (ற-21)

மிகுதி நாளைய உதயனில்...

### முல்லைத்தீவு, முள்ளியவளையில்

# போதையுடன் சாரத்தியம் 2016ஆம் ஆண்டு அதிகம்

முல்லைத்தீவு, ஜன.8

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 2015 ஆம் ஆண்டு மது போதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு எதிராக 55 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களால் இறந்தவர்களின் தொகை பூச்சியமாக உள்ள நிலையில் கடந்த ஆண்டு வீதி விபத்துக்களால் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2015ஆம் ஆண்டு வீதி போக்குவரத்து தொடர்பான வழக்குகளால் தண்டப்பணமாக ரூபா13லட்சத்து ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது. கடந்த வருடம் அந்தத் தொகை 26 லட்சத்து 47ஆயிரத்து 700 ரூபா வாக அதிகரித்தது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதினெட்டு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய இந்தப்பொலிஸ் நிலையத்தில் கடந்த ஆண்டு கசிப்புத் தொடர்பாக 105 வழக்குகளும், சட்ட விரோத சாராய விற்பனை தொடர்பாக 2 வழக்குகளும், சட்ட விரோத கோடா தொடர்பாக 25 வழக்குகளும், கஞ்சா தொடர்பான 8 வழக்குகளும், சட்டவிரோத மணல் தொடர்பான 42 வழக்குகளும், சட்ட விரோத மரம் தொடர்பான 30 வழக்குகளும், தடைசெய்யப்பட்ட இறைச்சி விற்பனை தொடர்பான 6 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன- என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டம்

# மாவட்ட மக்களுக்கு சேவை வழங்குவதே எனது விருப்பு

## உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற சுபனேந்திரா தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன.8
முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மருத்துவப் பிரிவுக்குத் தெரிவானவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்கின்றனர். எமது பிரதேச மக்கள் மருத்துவ சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எமது மாவட்ட மக்களுக்கு சேவை செய்வதே எனது விருப்பு.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3 ஏ பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்றுள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுபனேந்திரா.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் சுபனேந்திரா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எனது ஆசிரியர்களின் சொற்கேட்டு இங்கேயே கல்வி கற்றேன். இன்று நல்ல நிலையை அடைந்துள்ளேன். பல இடங்களுக்குச் சென்று நேரத்தை வீணடிக்காது ஓரிடத்தில் முழு மனதுடன் படித்தால் நல்ல நிலையை அடையலாம். எனது பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.- என்று அவர் தெரிவித்தார். (ற-7)

# விந்தை மிக்க நாடாக மாற்றுவதே இலக்கு

## கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற சதுர்சன் கூறுகின்றார்



முல்லைத்தீவு, ஜன. 8
கட்டடக் கலையில் தேர்ச்சி பெற்று நாட்டை விந்தை மிக்கதாக மாற்ற வேண்டும் என்பது எனது இலட்சியம்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 2 ஏ,பி பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் எஸ்.சதுர்சன்.

2016 ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

அதில் சதுர்சன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

என்னுடைய வெற்றிக்கு ஊக்கமளித்த பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்று அவர் கூறினார். (ற-7)

கிளிநொச்சி மாவட்டம்

# தினமும் மீளக் கற்றால் சிறந்த பயன் கிட்டும்

## கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற சோபனப்பிரியன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.8
அன்றாடம் கற்பதை அன்றே மீளவும் கற்பதன் ஊடாக சிறந்த பெறுபேற்றை அடைய முடியும். சிவில் பொறியியல் கல்வியைத் தொடரலாம் என எதிர்பார்த்திருக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 3ஏ பெற்றுச்சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள ச.சோபனப்பிரியன்.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் சோபனப் பிரியன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அப்பா மேசன் வேலை செய்கின்றார். எனது இரண்டு அண்ணன்கள் பல்கலைக் கழகத்தில் பயில்கின்றனர். எனது கல்விக்கு உதவிய ஆசிரியர்கள், சக மாணவர்கள், பெற்றோர்கள், சகோதரர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.- என்று அவர் தெரிவித்தார். (ற-6)

# குருவை மனதில் நினைத்து கற்றால் முன்னேற முடியும்

## கலைப் பிரிவில் முதலிடம் பெற்ற டனோஜா கூறுகின்றார்



முல்லைத்தீவு, ஜன.8
குருவை மனதில் நினைத்துக் கற்றால் எதையும் சாதிக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 3 ஏ பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள விசுவமடு மகா வித்தியாலய மாணவி ம.டனோஜா.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் டனோஜா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எனது பெறுபேற்றுக்கு எனது பாடசாலையே காரணம்.

எனது குடும்பத்துக்கும், ஆசிரியர்களுக்கும், அதிபருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். வீட்டில் கற்கும் நேரத்தை அதிகரித்ததால்தான் என்னால் சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்தது.- என்று அவர் கூறினார். (ற-7)

# சாதிக்க வேண்டியவை நிறையவே உள்ளன

## வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற தஞ்சுதா கருத்து



முல்லைத்தீவு, ஜன.8
எமது சமூகத்துக்காக சாதிக்க வேண்டியவை நிறையவே உள்ளன. நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதே எனது இலக்கு.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3 ஏ பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி ரி.தஞ்சுதா.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் தஞ்சுதா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எனக்கு உறுதுணையாகஇருந்த ஆசிரியர்கள், பெற்றோருக்கு நன்றி கூறுகின்றேன். மாண வர்கள் வெற்றியை இலக்காகக் கொண்டு ஆசிரியர்களின் அறிவுரை கேட்டு கற்றால் பெரும் இலக்குகளை அடைய முடியும்.- என்று அவர் கூறினார். (ற-7)

# தாயின் உழைப்பின் மூலமே முதலிடம் பிடிக்க முடிந்தது

## வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற டிலக்சிகா தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜன.8
வங்கி முகாமையாளராக உருவாகி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எனது அவா.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்வர்த்தகப்பிரிவில்மாவட்ட மட்டத்தில் 3 ஏ பெற்று முதல் நிலை பெற்றுள்ள கிளிநொச்சி புனித சென்திரேசா கல்லூரி மாணவி க.டிலக்சிகா.

2016ஆம் ஆண்டு க.பொ.த.பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் டிலக்சிகா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இறுதிப் போரில் மாத்தளனில் நடந்த செல் தாக்குதலில் தந்தையை இழந் தோம். குடும்பவருமானம் இன்றித்தவித்தோம். மீள் குடியேற்றத்தின் பின்னர் எனது தாயார் கிளிநொச்சி சந்தையில் தூள் விற்ற பணத்திலேயே எனக்குக் கல்வி புகட்டினார். தாயாரின் சிறு வணிக வருமானத்திலேயே நான் கல்வி கற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பிடித்தேன். முகாமைத்துவ பட்டதாரியாகி வங்கியாளராக வேண்டும் என்பதே எனது விருப்பு.- என்று அவர் தெரிவித்தார். (ற-10)

# விவசாயத் துறைக்கு சேவைகள் செய்வேன்

## உயிரியல் தொழில் நுட்பப் பிரிவில் முதலிடம் பெற்ற அபிராமி தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன.8
எங்கள் மாவட்டத்தில் விவசாயமே முக்கிய தொழிலாகவுள்ளது. விவசாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த விவசாயத்துறைக்கு சேவை செய்வேன்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் ஏ, 2பி பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மாணவி வை.அபிராமி.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் அபிராமி மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எனது அப்பா ஒரு விவசாயி. இந்த வெற்றிக்கு ஊக்கமும், உற்சாகமும் தந்த எனது கல்லூரிச் சமூகத்துக்கும், பெற்றோருக்கும் நன்றிகள் கூறுகின்றேன்.

எமக்கு இலட்சியம் இருக்க வேண்டும். முழு விருப்புடன் படித்தால் வெற்றி நிச்சயம்.- என்று அவர் குறிப்பிட்டார். (ற-7)

யாழ்ப்பாண மாவட்டம்

# அன்றாடம் கற்றால் வெற்றி பெறலாம்

## கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற கஜானன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.8
மாணவர்கள் வகுப்பறையில் கற்கும் விடயங்களை அன்றாடம் மீட்டல் செய்வதன் மூலம் கல்வியில் வெற்றி பெற முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 3ஏ பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ் இந்துக் கல்லூரி மாணவன் கா.கஜானன்.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் கஜானன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றார்.

எதிர்காலத்தில் சிறந்த மின்பொறியியலாளராக வருவதே எனது நோக்கமாகும். எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது பாடசாலை அதிபருக்கும் ஆதரவாக இருந்த எனது பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் நன்றி.- என்று அவர் குறிப்பிட்டார். (ற-8)

# விடாமுயற்சியுடன் கற்றதே எனது வெற்றிக்கு காரணம்

## விஞ்ஞான பிரிவில் முதலிடம் பெற்ற தனுசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.8
விடாமுயற்சியும் தொடர்ச்சியான கல்வியுமே எனது வெற்றிக்குக் காரணம். வைத்திய துறையைத்தெரிவு செய்து சேவையாற்றுவதே எனது நோக்கம்.

இவ்வாறு தெரிவித்தார் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 2ஏ,பி பெற்றுச் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ள கா.தனுசா.

2016ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் தனுசா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எந்தவொரு விடயத்திலும் நல்ல முயற்சி எடுக்க வேண்டும். நான் வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் கல்வி கற்றேன்.

அம்மா, அப்பா இருவருமே ஆசிரியர்கள். நான் கல்வி கற்ற பாடசாலை ஆசிரியர்கள், தனியார் வகுப்பு ஆசிரியர்கள், சக மாண வர்கள் என பலரும் உதவி புரிந்தனர்.- என்று அவர் கூறினார். (ற-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப் பாவனையில் தேவை சிக்கனம்

யாழ்ப்பாணம், ஜன.8
வறட்சியான காலநிலை தற்போது நிலவுகின்றது. விவசாயிகள் நெல் வயல்களுக்கு தண்ணீர் இறைப்பதைத் தவிர்க்க வேண்டும். பருவகால மாற்றத்தை உணர்ந்து தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகக் கட்டடத் தொகுதியில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தற்போது காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. வறட்சி நிலை காணப்படுகின்றது. சாவகச்சேரிப் பகுதியில் நெல் வயல்களுக்கு விவசாயிகள் தண்ணீர் இறைக்கின்றனர். சுற் றிலும் வறட்சியான காலநிலை காணப்படும் போது வயல்களுக்கு தண்ணீர் இறைப்பதால் முன்னேற்றகரமான சாத்தியப்பாடுகள் ஏற்படாது. விவசாயிகள் இதை உணர்ந்து நெல் வயல்களுக்கு தண்ணீர் இறைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

தண்ணீரைச் சிக்கனமாகப்படுத்த சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம் போன்ற முறைகளைச் செயற்படுத்த வேண்டும்.

வெங்காயம், மிளகாய் போன்றன பயிரிடும் போது வரிசையில் கிளிசறியா மரம் நட்டு பயிரிட்டால் தண்ணீரை மீதப்படுத்தி குளிர்மையாக வைத்திருக்கும் தன்மையுடன், உரமும் கிடைக்கும். தென்னை, மா போன்ற வற்றுக்குப் பானை நீர்பாசன முறை மூலம் தண்ணீர் இறைத்தால் தண்ணீரை மீதப் படுத்தலாம் போன்ற அறிவுரைகள் கூட்டத்தில் வழங்கப்பட்டன.

கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக விவசாயிகளுக்கு இது போன்ற விடயங்களைத் தெரியப்படுத்தப்பட்டன. குளங்களுக்குள் காணப்படும் பொருக்கை அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பொருக்கு இருப்பதால் நீர் சேமிக்கப்படுவது குறைவாக இருக்கின்றது. குளங்களை ஆழமாக்கும் திட்டத்தில் பொருக்கு அகற்றுதலும் உள்ளடக்கப்பட்டது - என்று மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அங்கு குறிப்பிட்டார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மின்சார அலகு ஒன்றுக்கு 6.48 ரூபா அறவிடப்படும் என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்தது. அந்த நடைமுறை இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை - என்று கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் கடிதம் மூலம் யாழ்.மாவட்ட செயலாளருக்கு அனுப்பப்படும் - என்று விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-21,10)

## யாழ்ப்பாண முஸ்லிம்கள் நலன் கருதி திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.8
யாழ்ப்பாணத்தில் மீள்குடியமரும் முஸ்லிம் மக்களின் நலன்கருதி பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் றொசான் தமீம் தெரிவித்தார். இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள் ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பல திட்டங்கள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முன்மொழிந்தனர். வடக்கு - கிழக்கு பகுதிகள் தொடர்பில் பிரதானமாகப் பேசப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக ஆராயப்பட்டன. யாழ். மாவட்டத்தில் மீள்குடியேறி வரும் முஸ்லிம் மக்களின் நலன் கருதி நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் நிதி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப் பட்ட நிதியின் மூலம் பல அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கட்சியின் முன்னாள் அரசியல் பிரதிநிதிகள் எனப் பலரும் அதில் கலந்துகொண்டனர் - என்றார். (ற)

## பாதசாரிகள் கடவை அமைக்க கோரிக்கை

முள்ளியவளை அம்பாள் முன்பள்ளிக்கு முன்பாக பாதசாரிகள் கடவை ஒன்றை அமைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர்.

கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை சந்தியில் உள்ள அம்மன் ஆலயத்துக்கு எதிராக இயங்கும் அம்பாள் முன்பள்ளியில் சுமார் 50க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்வி கற்கின்றார்கள். முன்பள்ளி பிரதான வீதியிலேயே அமைந்துள்ளதால் சிறார்கள் விபத்தை எதிர்நோக்கக்கூடிய ஆபத்து உள்ளது. முன்பள்ளிக்கு முன்பாக பாதசாரிகள் கடவையை அமைக்க முன்வர வேண்டும் - என்று அவர்கள் கோரியுள்ளனர். (ற-21)



## மாயவனூரில் நேற்று கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.8
கிளிநொச்சி, மாயவனூரில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது. காணி ஒன்றைத் துப்புரவு செய்தபோது போத்தல் ஒன்றுக்குள் இருந்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சுபேசன் தெரிவித்தார்.

காணி உரிமையாளர் பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டைக் கண்டுள்ளார். பொலிஸாருக்கு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி நீதிவான் மன்றில் அனுமதி பெறப்பட்டு, நேற்றுக் காலை இராணுவத்தின் வெடிபொருள்கள் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் கைக்குண்டை செயலிழக்கச் செய்தனர் என்றும் அவர் தெரிவித்தார். (ற-6)

## கடலட்டை பிடிப்பதைத் தடுக்கிறது கடற்படை

### மன்னார் மீனவர்கள் குற்றச்சாட்டு

மன்னார், ஜன.8
மன்னாரின் தென்கடலில் இரவு நேரம் சுழியோடி கடலட்டை பிடிப்பதற்கு மன்னார் கடற்றொழில் திணைக்களம் அனுமதித்துள்ளது. கடற்படையினர் அதற்குத் தடை விதிக்கின்றனர்.

இவ்வாறு மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

மன்னாரின் தென்கடல் பகுதியில் நீண்ட காலமாக இரவு நேரங்களில் மீனவர்கள் சுழியோடி கடலட்டை பிடிக்கின்றனர். கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதிப் பத்திரம் பெற்றே அதில் ஈடுபடுகின்றனர்.

கடலட்டை பிடித்தல் ஒக்ரோபர் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான 7 மாதங்கள் மாத்திரமே மன்னாரின் தென்கடலில் நடைபெறுகின்றது. ஏனைய காலங்களில் செய்ய முடியாதது. மன்னார் மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் சிலிண்டர் பயன்படுத்தியும், சிலிண்டர் பயன்படுத்தாதும் கடலட்டை பிடிக்கின்றனர்.

தற்போது இரவு நேரத்தில் கடலுக்குச் சென்று சுழியோடி கடலட்டை பிடிக்கும் மீனவர்களை இரவு நேரத்தில் செல்ல அனுமதிக்காது பகல் நேரத்திலேயே தொழில் செய்யவேண்டும் என்று கடற்படையினர் வற்புறுத்துகின்றனர்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் அனுமதியை வழங்கியுள்ளது. கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஆதிக்கம் செலுத்தியுள்ள கடற்படையே தடை விதிக்கின்றது. மீனவர்களின் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் முகம் கொடுத்துள்ளன. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-21,56)

## 6,000 நாய்களுக்கு 2016இல் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ்.மாநகரப் பகுதியில் கடந்த ஆண்டு மட்டும் 6 ஆயிரத்து 65 நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது. 322 நாய்களுக்குக் கருத்தடை செய்யப்பட்டது.

இவ்வாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்தது.

அநேகமான குடியிருப்பு நாய்களுக்கும் தெரு நாய்களுக்கும் கருத்தடை செய்யப்பட்டுள்ளது. முற்றவெளி, கொட்டடி, குருநகர், நாவாந்துறை, வண்ணார் பண்ணை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு 7 ஆயிரத்து 661 பேர் நாய் கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். மூவர் உயிரிழந்தனர். நாய்களின் அதீதமான பெருக்கமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-21,17)

# அரச காணியில் தனியார் சிக்க முறையற்ற வகையில் அனுமதி

## மாந்தை கிழக்கு மக்கள் குற்றச்சாட்டு; மறுக்கின்றார் பிரதேச செயலாளர்

முல்லைத்தீவு, ஜன.8
மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தனிப்பட்ட முறையில் தனி ஒருவருக்கு அரச காணியை வழங்கியுள்ளார். அந்தக் காணியில் வர்த்தக நிலையத்தை நடத்துவதற்கும் அவர் அனுமதியளித்துள்ளார். இவ்வாறு பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குற்றச்சாட்டை முற்றாக மறுத்த மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர், காணி அரச காணியாகவே உள்ளது. எந்தவித ஆவணங்களும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

முல்லைத்தீவு, பாண்டியன்குளம் பகுதியில் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சந்தியில் கமநலசேவை நிலையத்துக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட பகுதி அரச காணியாக அடையாளப்படுத்தப்பட்டது.

2010ஆம் ஆண்டு மீள்குடியமர்வின் பின்னர் அந்தக் காணியின் ஒரு பகுதியை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியமராத ஒருவருக்கு வர்த்தக நிலையம், வீடு, கிணறு, கழிப்பறை என்பன அமைப்பதற்கு பிரதேச செயலாளர் தனிப்பட்டமுறையில் அனுமதி வழங்கியுள்ளார்.

காணியின் எஞ்சியுள்ள பகுதியில் வேறு வர்த்தகர்களுக்கு வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. மாந்தை கிழக்கு பிரதேச சபையால் 2017ஆம் ஆண்டில் கலாசார மண்டபம் ஒன்றையும் அதனுடன் இணைந்து கடைத்தொகுதி ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதற்கான காணி பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. அரச காணியை உபயோகப்படுத்தும் தனியாருக்கு சாதகமான முறையில் அவருக்குத் தேவையான காணியை விடுத்து, ஏனைய சிறிய பகுதியை மாத்திரம் பிரதேச செயலாளர் வழங்கினார்.

2013ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னர் காணி ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு எதிராகவும் - அப்போது நடைபெற்ற காணி நடமாடும் சேவையின் தீர்மானங்களுக்கு எதிராகவும் அந்தக் காணி வழங்கப்பட்டுள்ளது - என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பாண்டியன்குளம் சந்தியில் உள்ள காணி அரசகாணி. காணியை வைத்திருக்கும் நபர் பல அபிவிருத்திகளை அனுமதி இன்றிச் செய்துள்ளார்.

மின்சார வசதியை பெறுவதற்கான அனுமதி மாத்திரம் கடந்த காலத்தில் வழங்கப்பட்டது. இது தவிர எந்த விதமான காணி ஆவணங்களும் வழங்கப்படவில்லை. அது தற்போதும் அரச காணியாகவே உள்ளது. அதில் எந்த அபிவிருத்தியையும் செய்ய முடியாது - என்று மாந்தைகிழக்கு பிரதேச செயலாளர் ஆர்.ரமேஸ் தெரிவித்தார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று தமிழ் மக்கள் கொலை இன்று தமிழ்மொழிக் கொலை

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் காட்டம்

கஞவாஞ்சிக்குடி, ஜன.08

அன்று தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். இன்று தமிழ்மொழி கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு எமது இளம் தலைமுறை செயற்படவேண்டும் எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செய லகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எமது இளைஞர், யுவதிகளிடையே வெளிநாட்டுக் கலை, கலாசாரங்கள், மொழி என்பன ஊடுருவிக் காணப்படுகின்றன. குறிப்பாக எமது அயல்நாடான இந்தியாவில் இருந்து வெளியாகும் நாடகங்களைப் பார்த்தால் அந்நிய மொழியான ஆங்கிலம் தான் கூடுதலாகப் பேசப்படுகின்றது. சஞ்சிகைகள் மூலம் தமிழர் களுடைய தொன்மைகளையும், வரலாறுகளையும் தமிழ் உணர்வோடு பரப்புகின்ற செயற்பாடுகள் வெளிவர வேண்டும்.

இன்றும் பாடசாலைகளில் உள்ள பாடப் புத்தகங்களில் குறிப்பாக பாடத்திட்டங்களில் தமிழர்கள் தொடர்பான பல வரலாற்று சரித்திரங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டு தான் செல்கின்றன.

ஆகவேதான் நாங்கள் எதிர் காலச் சந்ததியினருக்கு எமது வரலாறுகள், தொன்மைகள், சரித்திரங்களைத் தெரியப்படுத்த வேண்டுமாக இருந்தால், சரியான ஆய்வுகளை மேற்கொண்டு, வரலாற்று ரீதியான நூல்களை வெளியிடுவது காலத்தின் கட்டாயமாகும் - என்றார்.

(கு-ய)

# மார்கழி மாத வைகுண்ட வழிபாடுகள்

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் மார்கழி மாத வைகுண்ட வழிபாடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணி தொடக்கம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு 7.00 மணிக்கு பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி பெரு மானுக்கு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் அதியுயர் சிறப்பு முழுக்கு, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், அதிகாலை வைகுண்ட வாசல் திறப்பு, மோட்ச ஆராதனை உட்பட நான்கு சாமப் பூஜைகளும், திருப்பாவை உற்சவம், திருப்பள்ளி யெழுச்சி பாடப்பெற்று வசந்த மண்டப வழிபாடுகளுடன் சுவாமி வீதியுலா வருவார் எனவும் அறிவிக்கப்பட்டது. (கு-9)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா 11ஆம் திகதியன்று

தென்மராட்சி, ஜன.8

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வலய ரீதியாக வருடாந்தம் நடத்தும் பாட சாலைகளில் தரம் 1 வகுப்புக்களில் மாண வர்களை இணைக்கும் கால்கோள்விழா எதிர் வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு தென்மராட்சி கல்வி வலயத்தின் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தி னராக மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்புவிருந்தினர்களாக மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குண ராஜா, திணைக் கள கல்வி முகா மைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.மணிமார் பன் ஆகியோரும் கலந்து கொள் வர். கால்கோள் விழாவில் அயல் பாடசாலைகளான கைதடி கலை வாணி வித்தி யாலயம், கைதடி சேதுகாவலர் வித் தியாலயம் கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலை ஆகிய வற்றில் இணைய வுள்ள மாணவர் களும் கலந்து கொள்ளவுள்ள னர் என்று தெரி விக்கப்பத்து ற்9

## விநியோகஸ்தர்கள் தேவை

கடந்த 26 வருடங்களாக தகவல் தொழில்நுட்ப மற்றும் வலுசக்தி சார்ந்த உற்பத்தி பொருட்களை இறக்குமதி மற்றும் சந்தைப்படுத்தும் நாங்கள், எமது வியாபார பங்குதாரர்களுடன் நன்மதிப்பையும் நல்லுறவையும் பேணி வருகிறோம்.
எம் விநியோகஸ்தர்கள் தனிமனிதர்களாய் தொடங்கிய அவர்களது வலையமைப்பு இன்று 25 இற்கும் மேற்றப்பட்ட பணியாளர்களுடன் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

அந்தவகையில் INDOASIAN உற்பத்தி பொருட்களின் (mcb/ rccb) ஏகவிநியோகஸ்தர்களான நாங்கள் எங்கள வலையமைப்பை விஸ்தரிக்கும் வகையில் நாடு முழுவதும் விநியோகஸ்தர்களை வரவேற்கிறோம்.

தெரிவுசெய்யப்படும் விநியோகஸ்தர்களிடமிருந்து...
01. வங்கிப்பிணை
02. களஞ்சிய வசதி
03. விநியோகஸ்திற்கான வாகனம்
முதலியவற்றை எதிர்பார்க்கிறோம்

மேலதிக தகவல்களுக்கு - **077 2 919 046 அழைக்கவும்**

INDOASIAN MAKES SENSE | Debug Group of Companies

## Yarl Beauty & Language's Skills College

YBLSC

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.



அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

கிழமை நாள் பிரிவுகள் 19.01.2017 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 21.01.2017 அன்று 10.00 மணிக்கு

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை )

SHANTHIHAM

## சாந்திகம்
### உளவளத்துணையாளருக்கான பயிற்சிநெறி - 2017

கடந்த 28 வருடங்களாக உளநலப் பணிகளுடன் பயிற்சிகளையும் சாந்திகம் வழங்கி வந்துள்ளது. தற்போது உளவளத்துணையாள ருக்கான பயிற்சியொன்றினை ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சியானது வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் உளவளத்துணையாளர் களை பரவலாக உருவாக்கும் நோக்கம் கொண்டதாகையால் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் தகுதியான வர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இப்பயிற்சியானது அறிவுக்கான வகுப்பறை கற்கைகளையும், பிரயோக அறிவுக்கான களப்பயிற்சியையும் உள்ளடக்கிய ஒரு வருடகாலப் பயிற்சியாகும்.

**இப்பயிற்சிக்கான தகைமைகள்**

- கல்வித்தகைமையும், சமூகசேவை அனுபவம், ஈடுபாடுகள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.
- தங்களது வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள உளசமூக சேவையாற் றும் நிறுவனங்கள் அல்லது அரசாங்க உளநலப் பிரிவிலிருந்து சிபார்சு கடிதமொன்றைப் பெற்றுக் கொண்டு வருதல் விரும்பத் தக்கது.

**பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படும் முறை**

விண்ணப்பங்கள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அதன் பின் நுழைவுத் தேர்வு, நேர்முகப்பரீட்சை ஊடாகத் தகுதி யானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பபடிவத்தை சாந்திக நிறுவனத்தில் பெற்று பூரணப் படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் " உளவளத் துணையாள ருக்கான பயிற்சி நெறி " எனக் குறிப்பிட்டு **சாந்திகம், 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 20.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**தொலைபேசி :**
**021 222 3338/ 021 300 4900**
**இணையத்தளம் - Shanthiham.org**
**மின்னஞ்சல் - psych@sltnet.lk**
**இணைப்பாளர்,**
**பயிற்சிப் பிரிவு,**
**சாந்திகம்.**

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC | UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations | ICDL | BCS | abe | SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

13, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

15, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

14, January, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்


சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

14, January, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy
Contact (Jaffna Branch) : 021 300 55 55
| Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
## சுவர்க்கவாசல் ஏகாதசி உற்சவம்
### 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| காலை | 5.30 | மணிக்கு | வேதபாராயண சமர்ப்பணம் |
| காலை | 5.40 | மணிக்கு | பரமபத வாசல் திறப்பு. விஸ்வரூப மகாதர்சனம். சோடசோப உபசாரம். திருப்பாசுர சமர்ப்பணம். ஆசீர்வாதம். |
| காலை | 6.30 | மணிக்கு | திருக்கைத்தல சேவை. உற்சவ கருவறையிலிருந்து புறப்பாடு. |
| காலை | 9.00 | மணிக்கு | மகாதிருமஞ்சனம் (அபிஷேகம்) |
| நண்பகல் | 12.00 | மணிக்கு | ததீயாராதனம் (அன்னதானம்) தொடர்ந்து ஒவ்வொரு மணித்தியாலமும் சகஸ்ரநாம அர்ச்சனை நடை பெறும். |
| பிற்பகல் | 7.00 | மணிக்கு | வசந்தமண்டப பூஜை. பிருந்தாகான நாத சமர்ப்பணம். |
| இரவு | 11.00 | மணிக்கு | அபிஷேகம். |
| நள்ளிரவு | 12.00 | மணிக்கு | விஷேடபூஜை. |

### 09.01.2017 திங்கட்கிழமை

| | | | |
|---|---|---|---|
| அதிகாலை | 5.00 | மணிக்கு | தீர்த்த அபிஷேகம் (தீர்த்த வாரி) |
| காலை | 6.00 | மணிக்கு | பாரணை அன்னதானம். |

**ஞாயிறு முற்பகல் 11.00 மணி:** - பாட்டு - சி.அருணன், த.லுகர்சன். வயலின்- ஸதூசன், மிருதங்கம்- அ.சண்முகப்பிரியன்

**இரவு 7.30 மணி - பிருந்தாகான நாத சமர்ப்பணம்**
புல்லாங்குழல்: க.தேசிகன், வீணை: மஞ்சு சீதா ஜெகதீஸ், வயலின்: ஜேர்ஜ் பிறிசில்லா, மிருதங்கம்:ச.பிரணவன், கெஞ்சிரா:பா.ஞானவேல், முகங்சிங் : கு.சுயந்தன்

**குறிப்பு:**
அடியவர்கள் அபிஷேகத்துக்கு வேண்டிய பால், தயிர், இளநீர் மற்றும் பூவகைகளை முன்கூட்டியே ஆலயத்திற்கு சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் நித்திரை விழித்து வழிபட வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.


- ஆலய தர்மகர்த்தா -
ச.கணேசலிங்கம்.

தொ.பே.இல : 021 224 2300

# நொதேண் சென்றல் வைத்தியசாலை

## நரம்பியல் சிகிச்சைப்பிரிவு

- பாரிசவாதம், பார்க்கின்சன் நோய், தலைவலி , நித்திரைக் கோளாறுகள், வலிப்பு நோய், கை, கால் மற்றும் இடுப்பு வலி, விறைப்பு போன்ற அனைத்து நரம்பியல் உபாதைகளுக்கும் வடக்கின் முன்னணி விசேட வைத்தியநிபுணர்களினால் ஆலோசனை மற்றும் சிகிச்சைகள்
- காலதாமதமின்றி நரம்பியல் சத்திர சிகிச்சைகளையும் மேற்கொள்ளமுடியும்
- அனைத்து நோய்களையும் துல்லியமாகக் கண்டறியும் தொழில் நுட்பங்கள்



o MRI and CT SCAN
o Electroencephalogram (EEG)
o Sleep lab
o Electromyography (EMG)
o Nerve Conduction Studies (NCS)

Northern Central Hospitals (PVT) LTD.
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
E.mail: inquiry@nchjaffna.com
Web: www.nchjaffna.com

(சி.27309)
(13.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த ஆண்டு ஒரு லட்சம் எக்ஸ்—றேக்கள்

யாழ், ஜன.8
யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் எக்ஸ்றே கதிர் வீச்சுப் பிரிவில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 56 ஆயிரம் எக்ஸ்றே படங்கள் எடுக்கப் பட்டன.
அவற்றில் சுமார் 45 ஆயிரம் எக்ஸ்றே படங்கள் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த நோயாளர்களுக்கு எடுக்கப்பட்டது.
ஒரு லட்சத்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எக்ரே படங்கள் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு எடுக்கப்பட்டன என்று வைத்திய சாலைப் புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.
(ற-17)

## நெல் கொள்னவு செய்வதற்கு விண்ணப்பம்

யாழ், ஜன.8
இந்த முறை 75 ஆயிரம் கிலோ நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப் படுத்தும் சபையிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்று பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.
கொள்வனவு செய்யப்படும் நெல் சங்கத்தின் அரிசியை ஆலை ஊடாக அரிசியாக்கி நுகர்வோருக்கு விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
போதிய மழை வீழ்ச்சி இன்மையால் அரிசியின் விலையும் அதிகரிக்கலாம் என்பதை அடுத்தே சங்கம் இந்தமுறை நெல்லைக் கூடுதலாகக் கொள்வனவு செய்யவும் தீர்மானித்துள்ளது.
அதே சமயம் மிளகாய் மற்றும் சிறு தானியங்களையும் விவசாயிகளிடமிருந்து சங்கம் கொள்வனவு செய்யவுள்ளது.
வெங்காயக் கொள்வனவு குறித்து இதுவரைக்கும் முடிவெடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தது. (ற-17)

---

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி நவறெட்ணம்



செலாங்கூர், மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மற்றும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி சரஸ்வதி நவறெட்ணம் 06.01.2017 வெள்ளிக்கிழமை ஒக்வில் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு நமசிவாயம் - இரத்தினம் தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற தம்பு நமசிவாயம் நவறெட்ணம் அவர்களின் பாசமிகு துணைவியாரும் ரவீந்திரன், சிறீரஞ்சினி, சிறீசாந்தினி காலஞ்சென்ற முரளி கிருஸ்ணன், சிறீரட்ணாம்பிகை மற்றும் நமசிவாயம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமிர்தா, காலஞ்சென்ற Dr.யோகேந்திரன், கதிரைமலைநாதன், சபேசன், ரேவதி, Dr.பத்மஜா, ஆசிரியர் சேதுநாதன், திருச்செந்தில்நாதன், சிறிஅருள்நாதன், பாலமீரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிந்துஜா, லக்சுமி, ரதினி, வைஸ்ணவி, லவன், விபீசன், சுருதி, யாதவன், ஹரிஹரன், மீரா மற்றும் ஓநீல் சேர்ஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை நீலகண்டன், வேலுப்பிள்ளை ராமநாதன், அன்னபூரணி குணரத் தினம், வேலுப்பிள்ளை வைரவநாதன், வேலுப்பிள்ளை முத்துக்குமார சுவாமி, விமலாதேவி ராமநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி பஞ்சாட்சரம், தேவராஜன்(உத்தரவு பெற்ற நில அளவையாளர்), ராமநாதன்(நலன்புரி அலுவலர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), வீரசிங்கம் (தபால் அதிபர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சேதுகாவலர் சேனாதிராஜா, பொன்னாச்சிபிள்ளை ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2017) திங்கட்கிழமை கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:

| | |
|---|---|
| ரவி நவறெட்ணம் | : 905 257 4487 |
| றஞ்சினி யோகேந்திரன் | : 416 561 5197 |
| சாந்தினி கதிரைமலைநாதன் | : 647 637 1704 |
| அம்பி நவறெட்ணம் | : 416 606 4897 |
| நமசி நவறெட்ணம் | : 206 280 5331 |

(J/7483)
(14,17,18.)

---

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### ஆண்டி முருகையா

திதி - சுவர்க்கவாயில் ஏகாதசி

பாசத்தின் உறைவிடமாய்
- பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளில் நாம்
- வாழ்கின்றோம்.


தோற்றம் 25.12.1935
மறைவு 07.01.2009

குடும்பத்தினர்.
தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

(ஜே.7442) (13.18)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



எமது அன்புத் தெய்வம்
### அமரர் செல்லையா தில்லைநாதன் (J.P)

அன்னை மடியில் 09.09.1929
ஆதிரன் திருவடியில் 13.12.2016

நிகழும் துர்முகி வருடம் கார்த்திகைத் திங்கள் 28 ஆம் நாள் பௌர்ணமித் திதியில் 13.12.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் செல்லையா தில்லைநாதன்** (J.P) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.01.2017 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் ஆலய புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 12.01.2017 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது புங்குடுதீவு இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரது மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும், ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் எமது துன்பவேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் அன்னாரது ஆத்மசாந்திக்காக பல்வேறு வழிகளில் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்

11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
இல.11, சூரியா வீதி, அன்னை இல்லம்.
நீர்கொழும்பு.
தொ.பே. 077 759 3858

மனைவி, பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

(ஜே.7419) (13.17.18)

---

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
### வ. கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற நேரக்கணிப்பாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்- காங்கேசன்துறை)
திதி: வைகுண்ட ஏகாதசி (08.01.2017)

இன்றும் நம்பமுடியவில்லை
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தது
- என்பது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்,
உங்கள் நினைவு என்றும் எம்முடன்

தோற்றம் 01.01.1927
மறைவு 05.01.2012

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
'புலமைக்கல்வி நிறுவனம்',
சோதி வேம்படி லேன்,
மானிப்பாய்.

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### சிவசுப்பிரமணியம் சிவசீலன்

தோற்றம் 04.05.1971
மறைவு 25.11.2016

கடந்த 25.11.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிவசுப்பிரமணியம் சிவசீலன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மூங்கிலாறு,
உடையார்கட்டு தெற்கு.
077 432 0814

சி.கோமதி
(மனைவி)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வேலு சின்னத்தம்பி

(கிளி கடை உரிமையாளர்)

அன்னையின் மடியில் 27.11.1951
அரக்கனின் அழிப்பில் 16.12.2010

திதி: ஏகாதசி
(08.01.2017)

பாசத்தின் உறைவிடமாய்
எம்மை எல்லாம் அன்பினால் வழிகாட்டி
அல்லும் பகலும் அயராது உழைத்து- எம்மைப்
பேணி வளர்த்த அன்புத் தந்தையே
சேராத செல்வம் எல்லாம் சேர்த்து விட்டு
சேர்ந்திருக்க அரக்கன் செய்த கொடுமையால்
எங்களைத் தவிக்கவிட்டு சென்றீர்களே-அப்பா
ஆண்டுகள் ஆறு சென்றிடினும் ஒரு கணம் ஏனும்
உங்களை மாண்டதாக மறந்ததே இல்லையப்பா
எத்தனை ஆண்டுகள் இனிவரினும் மீண்டும் மீண்டும்
உங்கள் நினைவுடன் வாழ்வோம்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 23 . 07 . 1961
விண்ணில் 10 . 12 . 2016

யாழ் சென் தோமஸ் றோ.க. பெ. பாடசாலையில் கடமை யாற்றும் எமது ஆசிரியை **செல்வி தர்மபாலன் ருசாந்தி** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ரதிமலர் தர்மபாலன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், பாடசாலைச் சமூகம்
யா/ சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடங்குபவை: ஆடாதோடை, பனாங்கற்கண்டு, கண்டங்கத்தரி, அதிமதுரம், திப்பலி, இஞ்சி, கற்பூரவள்ளி, முந்திரி ஆகிய ஆயுர்வேத ஔடதங்கள் அடங்கிய 400 வருட பழமை வாய்ந்த பாரம்பரிய பாணியாகும்.

## ஆடாதோடை அதிமதுரம் இருமல் பாணி




- சகல விதமான இருமல், தடிமல், பீனிசம் , தொண்டை கற கறப்பு மற்றும் சுவாசப்பை நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.
- சிறுகுழந்தைகள், வளர்ந்தோர் மற்றும் வயது வந்தோரும் பாவிக்கக் கூடிய ஆயுர்வேத பாணி
- ரத்தல்கொட ஆயுர்வேத வைத்தியரின் பாரம்பரிய புராதன தயாரிப்பு முறைக்கமைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- 100% இயற்கை மூலிகைகள் மட்டுமே அடங்கியது
- பக்க விளைவுகள் இல்லை
- மதுசாரம் சேர்க்கப்படவில்லை
- மனித உடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எவ்வித ஔடதமும் சேர்க்கப்படவில்லை

தமிழில் தொடர்புக்கு:- ஸ்ரீதரன் 076 824 0023

சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
Arpico Super Market, அனைத்து ஆயுர்வேத பாமசிகளிலும் கிடைக்கும்.

Pasyale Ayurveda Osu (Pvt) Ltd.
Dalupitiya, Kadawatha, Sri Lanka.
Tel: 011 4818196 / 011 5638470
Email: pasyaleayurveda_product@yahoo.com


# PROJECT OFFICER - 1 POSITION (MALE / FEMALE)

**Base station : Mullaitivu**

PARCIC is looking for a suitable person as a Project Officer for Inland Aquaculture project in Mullaitivu.

**Essential Qualifications & Experience**

- Degree holder in Fisheries and Aquaculture or studied in related subject.
- Work experience related to aquafarming activities.
- Good knowledge of project cycles, demonstrated experience in Monitoring and Evaluation.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.
- Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**

- **Closing date for applications will be 18th January 2017**
- The contract will be renewed depending on the project budget allocation as well as the applicant's work performance.
- The position applied for should be indicated on the top of your application, on the top left hand corner of the envelope or in the subject line of the email.
- **Please send in your application together with the names of two non-related referees to;**

slproject1@parcic.org or
Regional Director,
No.28, Temple Road, Jaffna. 021 222 7897
Only applicants selected for the interview will be contacted.

# TECHNICAL OFFICER - 1 POSITION (MALE / FEMALE)

**Base station: Mullaitivu**

PARCIC is looking for a suitable person as a Technical Officer for constructing fishermen's resting hall in Mullaitivu.

**Essential Qualifications & Experience**


- Complete NCT (Civil) or equal subject
- Work experience related to building construction projects.
- Good knowledge of project cycles, demonstrated experience in Monitoring and Evaluation.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with relevant authorities for permission procedures.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Strong skills in time management and meeting deadlines.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.

**Please note:**

- **Closing date for applications will be 18th January 2017**
- The contract will be part-time (three days per week) for four to six months only.
- The position applied for should be indicated on the top of your application, on the top left hand corner of the envelope or in the subject line of the email.
- **Please send in your application together with the names of two non-related referees to;**

slproject1@parcic.org or
Regional Director,
No.28, Temple Road, Jaffna. 021 222 7897
Only applicants selected for the interview will be contacted.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருவாளர் சுப்பிரமணியம் சிவானந்தன்**

கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் 1984 - 1988 வரை சேவை புரிந்து 04.12.2016 இல் ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் அவர்களை ஓய்வு காலத்தில் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்: திருமதி. அரிச்சந்திரன் அற்புதராணி*
*திருமதி. ஈஸ்வரநாதன் சசிலேகா*

## மணமகள் தேவை

வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா பிரசாவுரிமையுடைய Book Keeper Manager ஆக தொழில் புரியும் 30 வயது நிரம்பிய றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு படித்த நற்குணமுடைய மணமகள் தேவை. (N/2189)(12.18)

076 837 3190

## உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் அற்புதமான செய்தி

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ இயற்கை மருத்துவ ஔடதம், பால்மா, குளிசை

**உடற்பருமன் கொண்டோருக்கு**
**விலை 3500/= 5500/= 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறுகுறைத் தல், வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமானது

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு**

**உடல் எடை குறைவானோருக்கு**
**விலை 3500/=, 5500/=, 24000/= 3 மாதத்திற்குரியது**

உடல் எடை கூட்டுதல்,ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மாற்ற, பலவீனம், கணச்சூடு உடல்குறைபாடுகள், மார்பு கூட்டுதல் அனைத்திற்குமானது. மேலும் கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கரும்புள்ளி, பருக்கள்,பருவந்த குழி, அடையாளம் நீக்கும் "நெச்சுரல் வைத்நிங் கிறீம்" தேவையற்ற ரோமம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், தலைமுடிவளரச் செய்யும் இயற்கை மருத்துவ எண்ணெய் விற்பனைக்கு உண்டு.

**விலை 1500/= , 1800/= , 3500/=, 5500/=**

**பதிவு இல. 16168,**
**077 210 6155**

**221, நாவலர்றோட்,**
**(பிறவுண் றோட் சந்தி அருள்கொமினி)**
**கேஷன் அருகில்) யாழ்.**

## வீடு வாடகைக்குண்டு

'சுந்தரபவனம்' 47, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் 4அறைகள், சமையலறை, 2பெரிய விறாந்தை, இணைந்த குளியலறை, 4,5 பெரிய வாகனங்கள் விடக்கூடிய வாகனத்தரிப்பிட வசதி மற்றும் தண்ணீர் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு : 011 271 4880** (J/7388) (14,17,18)

## யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

**யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கு** நித்திய பூசைகள் செய்வதற்கு **பிரதம குருக்கள், உதவி பூசகர்** தேவையாக உள்ளனர். ஆகவே, சுயவிவரங்கள் அடங்கிய தங்களது விண்ணப்பங்களை 20.01.2017 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

- **சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குவதற்கு வீடு வழங்கப்படும்.**

**தலைவர்,பரிபாலனசபை,**
ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி நிறுவனமான எமது ஒப்பந்தக் கம்பனிக்கு கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- மேசன்
- பைப் பொருத்துநர்
- தச்சுத் தொழிலாளி
- கம்பி வளைப்பவர்
- உருக்குப் பொருத்துநர்
- ஓட்டுநர்
- உதவியாளர்
- மின்னியல் வல்லுநர்

சுயவிவரக்கோவையை அனுப்ப வேண்டிய முகவரி

**Pali Construction Company**
No.135/3/10,
Nabeesha Complex, Kotugodalla Street, Kandy.
075 232 9742 - Email- palithawijesekara@yahoo.com
(J/7414)(11,17,18)

## British English, பிரெஞ்சு மொழி வகுப்புகள்

**மேற்படி மொழிகள் இலண்டனிலிருந்து வருகை தந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.**
**(பிரெஞ்மொழியில் 17 வருடம் அனுபவமுள்ளவர்)**

- 8 பேர் கொண்ட குழுவகுப்பு (அடிப்படை, நடுத்தரம், உயர்தரம் எனப் பிரித்து கற்பிக்கப்படும்)
- Spoken English இற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
- அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிநாடு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு கற்பிக்கப் படும்.
- விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை
- 7 நாள்களும் வகுப்பு நடைபெறும்.
- ஒரு மணித்தியாலத்துக்கு குறைந்த செலவில் கட்டணம் அறவிடப்படும்

தொடர்பு: 077 883 6602 A. கிஷான் (J/7443)(13,16)

## அகண்ட தீபம் ஏற்றும் விழா

யாழ், ஜன. 8

கல்வியங்காடு மேல்மருவத்தூர் சுயமம்பு அருள் மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் அகண்ட தீபம் ஏற்றும் விழா நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை நடைபெறும். அன்றைய தினம் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (த-ரி)

## வர்த்தகர்கள் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்

வவுனியா, ஜன.8

வவுனியா மாவட்ட வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் 10 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வவுனியா பொலிஸ் நிலைய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக கேட்போர் கூட மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாந்து அறிவித்துள்ளார். (ற-402)

## விசேட வழிபாடு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு இன்று ஜனாதிபதிக்கும் - நாட்டு மக்களுக்கும் நல்லாசிவேண்டி வவுனியா சிதம்பரம் திருப்பழனி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. வழிபாடுகள் மு.ப.11 மணிக்கு நடைபெறவுள்ளன. மரம் நடும் வைபவமும் இடம் பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணியை துப்புரவு செய்த விவசாயிகளை பொலிஸார் கூட்டிச் சென்றதால் குழப்பம்

மூதூர், ஜன.08

திருகோணமலை - மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கங்கு வேலி அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலயத்துக்கு அருகில் தமது மேட்டு நிலக் காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட விவசாயிகள் மூவரைப் பொலிஸார் அழைத்துச் சென்றதால் குழப்பமான நிலமை ஏற்பட்டதாகக் கங்குவேலி விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி மேட்டுநிலக் காணியில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பொருட்டு விவசாயிகள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அங்கு சேருநுவரப் பொலிஸார் வந்து, மூன்று விவசாயிகளையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

விவசாயிகள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலமை சுமுகமாகியதாக சம்மேளனம் மேலும் கூறியது. (த-ய-40)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக அபிவிருத்திக்கு இ.தொ.கா. புதிய திட்டமாம்

மலையக பெருந்தோட்டப் பகுதிகளை அபி விருத்தி செய்வதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புதிய நடைமுறை ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. முதல் முறையாக டயகம பிரதேசத்தில் உள்ள தோட்டங்களை ஒருவருடத்தில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். நுவரெலியா மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொட்டகலையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: மலையக பெருந்தோட்டப் பகுதிகளுக்கு சிறுகச் சிறுக பொருள்களை கையளிப்பதும் தோட்டப் பகுதி களின் அடிப்படைத் தேவைகளை பகுதி பகுதியாக முன்னெடுப்பதும் சிறந்ததாக அமைய வில்லை. ஆகையால் தற்போது திட்டம் ஒன்றைக் காங்கிரஸ் வகுத்துள்ளது. தோட்டங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அப்பகுதி அரச அதிகாரிகளின் ஆலோசனைகள் பெறப்படும். இது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து ஆலோசிக்கப் பட்டது.

புதிதாக வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் ஊடாக ஒரு பிரதேசத்தை முழுமை யாகப் பெற்று, அதன் அபிவிருத்திப் பணிகளை ஒரு வருட காலப்பகுதிக் குள் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டப் பகுதியில் வீதிகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை செய்து கொடுக் கும் பட்சத்தில் பாதி வேலைத் திட்டங்கள் முடிவடையும் - என்றார்.

(த-ய-43)


CANADA, USA, POLAND, ITALY Study, Work & Visit Visa
Minimum Qualification O/L
VISA Consulting and Online from filling.
குறைந்த செலவில், விரைவில் பயணம்.
Bank Balance 100%
குறைந்த தகைமை O/L
Poland மூலம் Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street, Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 077 749 3436
Sharmi : 077 752 5797
Office : 011 302 0892

SAHAN'S FARM PLUS
BAIRAHA குஞ்சு, ஊர்க்குஞ்சு மற்றும் வான்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. பிரதி சனி மற்றும் செவ்வாய் தினங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, நெல்லியடி.
077 995 9382, 077 995 7700

தேவை
1. முகாமையாளர்
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த A/L படித்த 18 - 21 இற்கு உட்பட்டவர்கள்.
2. தொழிலாளி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த O/L படித்த 18- 21 வயதுக்குட்பட்ட நீர்க்கசிவைத் தடுப்பதற்கான தொழில்நுட்பத் தைக் கற்க விரும்புபவர்கள்.
தொடர்பு: 077 232 3000
(U 27835) (14,17,18)

யோகட் மற்றும் ஐஸ்கிறீம் கோப்பைகளுக்கான அலுமினியம் பொயில் (Foil)
100% பாதுகாப்பானது
அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத எந்தவொரு அளவிலும் பெற்றுக்கொள்ள முடியும். (Printed & Plain)
ஒற்றை வர்ணத்தில் மற்றும் பல வர்ணங்களில் சாதாரண தோற்றத்தில் அல்லது தமக்கு பிடித்த தோற்றத்தில் தயாரித்துக் கொள்ள முடியும்.
சிறிய மற்றும் பெரிய அளவுகளிலும் அச்சிட்டுக் கொள்ளலாம்.
தமக்கு பிடித்த தோற்றத்தில் அச்சிட்டுக் கொள்வதற்கு குறைந்தபட்சம் 300,000 அலுமினியம் பொயில் அச்சிட்டுக் கொள்ளப்பட வேண்டும்.



விற்பனை முகவர் தேவை (Distribution Agent)
விலை ரூ. 0.88 சதத்திலிருந்து (அரசாங்க வரி நீங்கலாக)
மேலதிக விவரங்களுக்கு
டிசைன் இலவசம் (Artwork Free-of-Charge)
டயமண்ட் இன்டர்நஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டெட், கொழும்பு 08.
0773 541 096 / 0777 356 778 / 0115 390400-2

இனி இல்லை மூட்டுவலி
மூட்டுகளில் வலி, இறுக்கம், வீக்கம்
அடிபட்ட காயங்கள், தொற்றுக்கள் என்பவற்றினால் முழங்கால், இடை, முழங்கை, தோள்பட்டை, விரல்கள் ஆகியவற்றில் உட்புறத்தில் ஏற்படும் சிராய்ப்புகள், கிழிசல்கள் காரணமாக இவை ஏற்படுகின்றன.
ஒஸ்ரியோ ஆர்த்தரைடீஸ், யூரிக் அமிலப்படிவுகள், எஸ்.எல்.ஈ, வாதமூட்டழற்சி, முள்ளந்தண்டு அழற்சி, மென்சவ்வுகளில் ஏற்படும் அழற்சி மூட்டுகளில் வலிக்கான காரணிகளாகும்.
மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினைகளை எமது சிக்கலற்ற ஆயுர்வேத சிகிச்சை மூலம் வலி, வீக்கம் என்பவற்றை நீக்கி விரைவாக குணப்படுத்தும்
Hotline: 0777555600
0777708310
0777708330

FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## மரண அறிவித்தல்

### விசுவநாதர் சிவசுப்பிரமணியம்

(மணியன்னை -புத்தூர்)



தோற்றம் 28.10.1936 மறைவு 06.01.2017

சிவன் கோயிலடி, புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் சிவசுப்பிரமணியம் (மணியம்) 06.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் ஈஸ்வரதேவியின் அன்புக் கணவரும் கிருபாகரன்(UK), யோகேஸ்வரன் (முன் னாள் ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி), காலஞ்சென்ற சசிகரன், கேதீஸ்வரன்(பாப்பன் - வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்), சசிகலா (UK), ஹேமகலா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேசசபை தலைமைக் காரியாலயம், புத்தூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இன்பவேணி (ராதா -UK), குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) வெண்ணிலா (கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க.பா), சுதாகரன் (UK), ஞானபாஸ்கரன் (விவசாயப் போதனாசிரியர் தர்மக்கேணி) ஆகியோரின் மாமனாரும் டிக்சன் (UK), கோகுல்(UK), தனுஸ்(UK) , கிசானி (யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), கிரிசன் (யா/ தெல்லிப்பழை, மகாஜனக்கல்லூரி), செந்தூரி (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஹரீசன் (யா/ இந்துக் கல்லூரி), நீரஜா(UK),ஜனுயன் (UK), யாதவி(UK), சங்கவி, சாம்பவி ஆகியோரின் பேரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசமணி, காலஞ்சென்ற தணிகாசலம், நவரத்தினராசா (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2017) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(U 7460)(12,18)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி மாணிக்கவாசகர்



பிறப்பு 16.10.1942 இறப்பு 04.01.2017

யாழ்.மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி மாணிக்கவாசகர் 04.01.2017 புதன் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா தம்பதிகளின் பாசமிகு மகளும், கந்தையா - கமலம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், பத்மினி ( சுவிஸ்), உதயச்சந்திரன் (சுவிஸ்), உதயகுமார் (இலங்கை), செந்தில்நாதன் (சுவிஸ்), பிறேமினி (லண்டன்), செல்வசோதி (இலங்கை), சிவதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற இராசமணி, தங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் ரூபசவுந்தரி, ஆனந்தி, ஆன்லூஜியா, சந்திரசேகர், காலஞ்சென்ற சிவேந்திரன் மற்றும் ரமேஷ் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலட்சுமியின் அன்பு மைத்துனியும், ஷாறுஜன், நீலுஜா, காலஞ்சென்ற மதுரன் மற்றும் பவித்திரா, ஆதீஷன், அநோஜன், தெபோரா, றெபேக்கா, அஸ்வினி, அஸ்விதா, நிஷங்கன், நிறோஜன், நிலுஜன், ஹரேஷ், சண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷேஜ்ஷென், அஜ்ஷ்ணா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொர்ண வடலி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(சொர்ணவடலி பிள்ளையார் கோயில் பின்வீதி )


(J/7465) (11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 987 7291, 075 835 2195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ விபத்தில் வீடு நாசம்



கொழும்பு, ஜன.8

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கினிகத்தேனை அம்பகமுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் வீடு ஒன்றுமுற்றாகஎரிந்துநாசமாகியுள்ளது.

வீட்டில் இருந்த 5 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் நித்திரையில் இருந்தனர்.

பின்னர் தீப்பற்றியுள்ளதைக் கண்டு கூச்சலிட்டுள்ளனர். சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சித்தபோதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், ஆடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

இது தொடர்பாக கினிகத்தேனை பொலிஸ் நிலையத்திற்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ற)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனியாவது நிறுத்துவார்களா?

ஒற்றையாட்சிக்குக் கீழ் எந்தவொரு தீர்வையும் ஏற்கப்போவதில்லை; தமிழ் மக்களின் வேணவாவை நிறைவு செய்யாத எந்தவொரு தீர்வையும் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் மிகத் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார். இதன் பின்னராவது கூட்டமைப்பு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளப்போகிறது, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை விட்டுக்கொடுத்துவிட்டது என்று பெருங் குரலெடுத்துத் தமிழ் மக்களைக் குழப்பும் செயல்களை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கைவிடுகின்றனவா என்று பார்ப்போம்.

கடந்த சில வாரங்களாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனையும் இலக்கு வைத்து ஈபிஆர்எல்எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தார். தெற்கிலே சிங் கள அரசியல்வாதிகள் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் முன்வைத்து வந்தார்.

புதிய அரசமைப்பு முயற்சிகள் அனைத்தையும் சம்பந்தனும் சுமந்திரனுமே தனியாகக் கையாள்கிறார்கள் என்றும், கூட்டமைப்புக்குள் இருந்தாலும் தமக்கு அதில் பங்கேதும் இல்லை என்பதால் அவர்கள் இருவரும் புரியும் துரோகங்களுக்கு எல்லாம் தாம் பொறுப்பாளியாக முடியாது என்றும் மக்களுக்குத் தன்னிலை விளக்கம் கொடுக்க அவரும் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முயன்று வந்தார்கள்.

இதன் உச்சக்கட்டமாக, புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் இருந்து சம்பந்தனும் சுமந்திரனும் - கூட்டமைப்பு - வெளியேறி கொழும்பு அரசுடன் நேரடியாகப் பேசவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். இதற்கு மேலும் வலுச் சேர்க்கும் விதத்தில் அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஏற்பாடு மற்றும் ஊக்குவிப்பில் அண்மையில் சம்பந்தரின் உருவப்படம்கூட வவுனியாவில் எரிக்கப்பட்டது.

ஆனால், நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் கூட்டம் நடைபெற்றபோது அவர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தவேயில்லை. வேடிக்கை என்னவென்றால், வழிகாட்டல் குழுவில் இருந்து கூட்டமைப்பு வெளியேறக்கூடாது என்று புளொட் வலியுறுத்த அதற்கு எந்த மறுப்பும் சொல்லாமல் அமைதியாக இருந்தார் சுரேஷ்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரின் முன்னால் கைகட்டி வாய்பொத்தி இருப்பதும், பின்னர் வெளியே வந்து சம்பந்தரும் சுமந்திரனும்தான் துரோகிகள், நாங்கள் எல்லோரும் புனிதர்கள் என்று கூறி மக்களைக் குழப்புவதையும் சுரேஷ் பிரேமச்சந்திரன் நீண்டகாலமாகவே செய்து வருகிறார்.

உண்மையில் தனது கருத்தில் நேர்மையான அர்ப்பணிப்பை அவர் கொண்டிருந்தாரானால், வழிகாட்டல் குழுவில் இருந்து கூட்டமைப்பு வெளியேறவேண்டும் என்ற கருத்தை அவர் திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கவேண்டும். அதனை ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில், கொள்கை முரண்பட்ட நிலையில் கூட்டமைப்பில் தொடர்வதில் அர்த்தமில்லை என்று கூறிவிட்டு, வெளியேறியிருக்கவேண்டும். இத்தனைக்கு அவரது கட்சியின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரியமைக்கு அமையவே அந்தக் கூட்டத்தைச் சம்பந்தன் கூட்டியிருந்தார். ஆனால், அங்கு தமக்குரிய விடயத்தை சுரேஷ் தரப்பினரில் எவரும் வலியுறுத்தவில்லை.

சம்பந்தரின் முன்பாக அமைதியாக இருந்துவிட்டு, வெளியே வந்து இனிமேலாவது மக்களைக் குழப்பாமல் இவர்கள் இருப்பார்களா என்றால், நிச்சயம் இல்லை என்று கூறலாம். குழம்பிய குட்டையில் (மக்கள் மத்தியில்) வாக்கு மீன் பிடிக்கலாம் என்ற தப்புக் கணக்கை வைத்துக்கொண்டே அவர் மீண்டும் மீண்டும், கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்கு இணங்கிவிட்டது, வடக்கு - கிழக்கு இணைப்பைக் கைவிட்டுவிட்டது என்று முழக்கமிட்டு வருகிறார். அதற்குப் பொறுப்பாளிகள் சம்பந்தரும் சுமந்திரனும்தான், நாங்கள் இல்லை என்றும் மக்களை நம்ப வைக்கப் பார்க்கிறார்.

இப்போது, ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வுக்கு இணங்கப் போவதில்லை என்பதையும், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத தீர்வை பரிசீலிக்கப்போவதில்லை என்பதையும் சம்பந்தர் திட்டவட்டமாகச் சொல்லிவிட்ட பின்னராவது, இவர்கள் தேவையற்ற வகையில் மக்களைக் குழப்பாமல் அமைதியாக இருந்தால் நல்லது. ஆரோக்கியமான திசை நோக்கி அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடலை முன்னகர்த்த அவர்கள் முன்வரவேண்டும்.

# உறவுகளது இழப்பை நினைவுகூரும் உரிமை அங்கீகரிக்கப்படுவது அவசியம்

தமது அன்புக்கு உரியவர்களது மரணம் மற்றும் காணாமல் போனமையை நினைவுகூரும் உரிமை அங்கீகரிக்கப்படுவதுடன், இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் எழுப்புவதற்கான பங்கும் அனுமதிக்கப்பட வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைத்துள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணி தன்து அறிக்கையை 4ஆம் திகதி வெளியிட்டது. நேற்றைய உதயனில் வெளியான அந்த அறிக்கையின் தொடர்ச்சி வருமாறு;

2.26 வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் பொறி முறைகளுடன் தொடர்புகொள்வதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதைச்செய்வதற்குத் தவறும் பட்சத்தில் நல்லிணக்கச் செயற்முறையின் பரப்பை அது மட்டுப்படுத்துவது மட்டுமன்றி, அதன் ஏற்புடைமையைக் கேள்விக்குள்ளாக்குதற்கான அடிப்படையையும் அது வழங்கும்.

**இ. குறிப்பான பொறிமுறைகள்**

3. காணாமற் போனோருக்கான அலுவலகமும் (கா.போ.அ) ஆள் இன்மைச் சான்றிதழும் (ஆ.இ.சா)

3.1 கலந்தாலோசனைச் செயல்முறையின்போது வலியுறுத்தப்பட்டதுபோல், பொறிமுறையின் பெயர், காணாமற் போனமை சுயவிருப்பின்றி வலிந்து திணிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

3.2 தொடக்கத்திலேயே கா.போ.அமையநிலையங்களில் பிராந்திய அலுவலகங்களைத் திறக்க வேண்டும். பின்னர் மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாய்ப்பளிப்பதற்பாக மாவட்ட அலுவலகங்களைத் திறக்க வேண்டும்.

3.3 குறிப்பாக விசாரணைச் செயற்பாட்டைப் பொறுத்தவரை, சார்புநலன் குறிப்பிடாத வகையில் காணமற்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த பொருத்தமான திறனுடையவர்கள் இந்த அலுவலகத்து அலுவலர்களாக நியமிக்கப்பட வேண்டும். கண்காணிப்புப் பொறிமுறைச் செயற்பாடுகள் மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவது போன்ற குறிப்பான நடவடிக்கைகள் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் படிவங்களைப் பரிசீலனை செய்தல் போன்ற நடவடிக்கைககளில் இவர்கள் ஈடுபடுத்தப்படலாம். கா.போ.அ நியமிக்கப்பட்டவுடன் கலந்தாலோசனைச் சபையின் இடைக்கால அறிக்கையிலும், ஏனைய அறிக்கைகளிலும், காணாமற்போதல் பற்றி நிறுவனங்களுக்கும், குடும்பங்களுக்கும் தெரிவித்துள்ள பரிந்துரைகளை அது பரிசீலனை செய்யவேண்டும்.

3.4 விசேடமாக மருத்துவச் சட்டத்துறை தொடர்பான வெளிநாட்டு வல்லுநர்கள் உட்பட சர்வதேச தொழில்நுட்ப நிபுணத்துவம் கா.போ.அவில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

3.5 விசாரணை அதிகாரிகளுடன் தகவல் பரிமாற்றம் தொடர்பான தனது தீர்மானங்களைச் செயற்படுவதில் அது பின்பற்றப் போகும் செயல்முறை விதிகளையும், அளவீடுகளையும் கா.போ.அ பகிரங்கப்படுத்த வேண் டும். தன்வசமுள்ள தகவல்களின் இரகசியத் தன்மை பற்றிய அளவீடுகளையும் இது உள்ளடக்கும். இது தொடர்பாக வரப் போகும் தகவல் பெறும் உரிமை முறைமையின் கீழ் தனது கடப்பாடுகளை அது தெளிவாக எடுத்துக் கூற வேண்டும்.

3.6 புதைகுழிகளைத் தோண்டுதலும், பிரேதங்களைத் தோண்டி எடுத்தலும், எலும்புக்கூடுகளை இனங்காணுவதை மட்டுமன்றி விசாரணைகளின் சாத்தியப்பாடுகளையும் மனங்கொண்டே செயற்படுத்த வேண்டும். ஆகவே, எலும்புக்கூட்டு எச்சங்களின் நம்பகத் தன்மையையும், வேறு சான்றுகளையும் உறுதிப்படுத்தும் அக்கறையுடன் அவை செயற்படுத்தப்பட வேண்டும். புதைகுழிகளைத் தோண்டும், பிரேதங்களைத் தோண்டி எடுக்கும் நடவடிக்கைகளின்போது குடும்பங்களினதும் சமூகங்களினதும் உளவியல் தேவைகளையும், நுண் உணர்வுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3.7 விசாரணைகளில் நீதிப் பொறிமுறை விசேட வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் கா.போ.அ என்பவற்றின் பங்கும், பணியும் தெளிவுபடுத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளைப் பொறுத்தவரை விசேட நீதிமன்றம் வழக்குரைஞர் என்பவற்றின் பரப்பெல்லையும் அவற்றின் கடப்பாடுகளும் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். காணாமற்போனோரின் பெருந்தொகையான வழக்குகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் தாமதம் மற்றும் வேறு தடைகள் துரிதப்படுத்தும் வகையில் காணாமற்போனோரின் வழக்குக்களை விசாரிப்பதற்குரிய நீதிமன்றத்தின் விசேட பிரிவு ஒன்றை நிறுவுவது உட்பட அவசியமான நீதித்துறைச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.8 தேசிய அமைப்புகள் மற்றும் கடந்தகால ஆணைக் குழுக்கள் ஆகியவற்றிடம் உள்ள காணாமற்போனோர் தொடர்பான தகவல்கள் அனைத்தும் கா.போ.அவுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

3.9 கா.போ. தங்களால் அறிவிக்கப்படும் காணாமற்போனோர் தொடர்பான வழக்கு அல்லது வழக்குகள் தொடர்பான முன்னேற்றத்தைச் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்த வேண்டும்.

3.10 கா.போ. அவை அணுகும் குடும்பங்கள், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு அமைப்பை அணுகுவதற்குரிய வாய்ப்பும் வழங்கப்படவேண்டும்.

3.11 ஆளின்மைச்சான்றிதழ் என்னும் கலைச்சொல்லில் இடம்பெறும், குறிப்பாக இன்மை (Absence) என்ற சொல், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் இறப்பு என்ற பொருள் தராத வகையிலும், காணாமற் போனமையின் தன்மையைக்குறிக்கும் வகையிலும் பொருத்தமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். மரணப்பதிவுச் (தற்காலிக விதிகள்) சட்டத்தில் ஒரு திருத்தம் அவசியமாகும்.

3.12 காணாமற்போன ஒருவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த அரசுக்கும் கா.போ.அவுக்கும் தேவைப்படும் கால அளவைக் கருத்தில் கொண்டால், ஆளின்மைச் சான்றிழுக்கான தற்போதைய செல்லுபடியாகும் இரண்டு வருடகால எல்லை போதுமானது அல்ல. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஆள் இன்மைச்சான்றிதழைப் புதுப்பிக்க வேண்டிய குடும்பங் களின் நிர்ப்பந்த நிலையைத் தவிர்க்க, ஆள் இன்மைச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலத்தை பத்து ஆண்டுகளுக்கு நீடிக்கும் வகையில் மரணப்பதிவு (தற்காலிக விதிகள்) சட்டம் திருத்தப்பட வேண்டும்.

**4. இழப்பீடுகளுக்கான அலுவலகம்**

4.1 இழப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல் ஏனைய நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் ஊடாகவும், வழமையான நிதி முறைக்கு ஊடாகவும், உண்மையையும் நீதியையும் பெற்றுக் கொள்வதற்குரிய உரிமையை எவ்வகையிலும் தடுக்கவோ சட்டத்துக்கு முரணானதாக்கவோ கூடாது.

4.2 இழப்பீடு பற்றிய பொறுப்புடைய நடைமுறையில் இருக்கும் நிறுவகங்கள் மற்றும் திட்டங்கள் சமூக நலன் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து நன்மை பெறுவோரைத் தெரிவுசெய்வதற்கான நடைமுறையிலுள்ள அளவீடுகள் உட்பட கடந்த காலம் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நஷ்ட ஈடு மற்றும் இழப்பீடு தொடர்பான முயற்சிகள் பற்றிய ஒரு வரைபடம் அவசியமாகும்.

4.3 இழப்பீடுகளைப் பெறுவதற்கான உரிமையை அங்கீகரிக்கின்ற ஒரு தெளிவான இழப்பீட்டுக் கொள்கையும், அதைச் செயற்படுத்துவதற்கான ஒரு தெளிவான வழிகாட்டல் நியமங்களும் வரையப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இழப்பீட்டுக்கான உரிமை அபிவிருத்திக்கான உரிமையிலிருந்து வேறுபட்டதாகவும், அதற்கு மேலதிகமானதாகவும் பார்க்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையானது தனிநபர்களும், சமூகக் குழுக்களும் பாதிக்கப்படுவதற்கு ஏதுவான பெருமளவிலான மோதல் சார்ந்த மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட வன்முறைகளின் பல்வேறு வடிவங்களை எதிர்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் தனிநபர்கள், குடும்பங்கள், சமூகக் குழுக்கள் என்பனவற்றுக்கான பண ரீதியான நஷ்டஈடு, வேறுவகையான பொருள்சார்ந்த உதவிகள், உள சமூகப் புனர்வாழ்வு கூட்டு இழப்பீடுகள், பண்பாட்டு இழப்பீடுகள், மற்றும் குறியீட்டு நடவடிக்கைகள் உட்பட பல்வேறு இழப்பீட்டு வடிவங்களை இது உருவாக்க வேண்டும்.

4.4 பாதிக்கப்பட்ட வெவ்வேறு குழுக்களுக்கிடையிலான மோதல்களையும், அதேபோல், பொதுமக்கள் மத்தியிலான மோதல்களையும் மேலும் மோசமாக்காதிருப்பதை அது உறுதிப்படுத்த வேண்டும்.

4.5 இழப்பீடுகள் வழங்குவதற்கான தெளிவானதும், வெளிப்படையிலானதுமான வழிகாட்டல் விதிகள், குறிப்பாக அதன் வடிவமும், வழங்கப்படும் அளவும் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- இழப்பீடுகளுக்கான தகுதி, உறவின் பன்முகத் தன்மையை ஏற்கும் வகையில் பாதிக்கப்பட்டவர் மற்றும் பாதிக்கப்பட்டவரின் குடும்பம் என்பவற்றுக்கு ஒரு பரந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில் அமையவேண்டும்.
- இழப்பீடுகளுக்கான முன்னுரிமை, பாதிப்பின் தன்மை மற்றும் தேவை என்பவற்றுக்கு ஏற்ப அமைய வேண்டும்.
- இழப்பின் அளவு, மனவடுவின் ஆழம் என்பவற்றுக்கு ஏற்ற விகிதாசாரத்தில் இழப்பீடு அமைய வேண்டும்.
- இழப்பீடு கோரப்படுவதற்குரிய பாதிப்பின் வகைக்கு முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

4 மோதல் தொடர்பான இழப்புகளுக்கு மேலதிகமாக, அமைப்பு ரீதியான வன்முறை மற்றும் அல்லது ஒதுக்கப்படுவதன் விளைவான இழப்பும் - மனவடுவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- நட்டஈடு உண்மையான இழப்பை மட்டுமன்றி, நட்டஈடு கோருபவரின் தற்போதைய நிலைமையையும் அத்துடன் வேறு ஏதும் குறிப்பான பாதிப்படையக்கூடிய தன்மைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

4.6 இடைக்கால இழப்பீடுகள், குறிப்பாகப் பொருள்கள் வழங்குவதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதன் மூலம் மக்கள் தமது உடனடித் தேவைகளை நிறைவுசெய்துகொள்ள முடியும். நீண்ட காலமாக நீதிக்காகக் காத்திருந்தவர்களையும், அதுபோல் குறிப்பிட்ட சில பாதிக்கப்பட்ட குழுக்களையும் பொறுத்தவரை இது அவசியமாகும்.

4.7 மோதல்களின்போது தமது குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்ட குடும்பங்களுக்கு, ஒரே தரத்திலான கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட வேண்டும். குடிமக்களின் உயிரிழப் புக்கான கொடுப்பனவு ஆயுதப் படை யினருக்கும், அரச அலுவலர்களுக்கும், வழங்கப்படும் கொடுப்பனவுக்கு இணையானதாக இருக்கவேண்டும்.

4.8 பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள் என்ற வடிவத்திலும், கொல்லப்பட்ட அல்லது காணாமற்போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தொழில் வாய்ப்பு என்ற வடிவத்திலும் ஒரே தரத்திலான இழப்பீடுகளும் வழங்கப்பட வேண்டும்.

4.9 ஆயுத மோதல்களின்போது தனிநபர்களிடமிருந்து எடுக்கப்பட்ட, குறிப்பாகத் தங்க நகைகள், பணம் வேறு அசையும் சொத்துக்கள் முதலியவற்றைக் கண்டெடுத்து உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.10 தங்கள் அன்புக்கு உரியவர்களின் மரணத்தையும், காணாமற்போனமையையும் நினைவு கூரவும், அதற்காக இரங்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய உரிமையை அரசு அங்கீகரித்து அதற்கு மதிப்பளிக்க வேண்டும்.

4.11 இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் எழுப்புவதில் அரசுக்கு ஒரு முக்கிய பங்கு இருக்கும் அதே வேளை, இது அரசுக்கு மட்டும் உரியது, என்று கருதப்படக்கூடாது. ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கான அரசின் எந்த ஒரு நடவடிக்கையும் ஏற்கனவே இருக்கும் நினைவுச் சின்னங்களையோ, அல்லது நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சமூகக் குழுக்கள் என்பவற்றின் சடங்குகளையோ, அழிப்பதாக அமையக் கூடாது. அரசின் நினைவுச் சின்னம் எழுப்பும் முயற்சிகள், பாதிக்கப்பட்டவர்களதும், சமூகக் குழுக்களதும் பங்குபற்றலுடன் நடைபெறுகின்றது. என்பதையும் இதன்மூலம் நினைவுச் சின்னங்களில் ஒரு கூட்டு உடைமை உணர்வு ஏற்படுவதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும். இந்தக் கலந்தாலோசனைச் செயல்முறை, நினைவுச் சின்னம் பற்றிய கருத்தாக்கத்திலும், கட்டுமானத்திலும் உள்ளார்ந்த பகுதியாக இருக்க வேண்டும். இது இடத்தேர்வு, சார்பற்ற உருவரைவுக்கான கலைஞர்கள் தேர்வு, பாதிக்கப்பட்டோரின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் படியான நினைவுச் சின்னம், நினைவுச் சின்னங்களைக் கட்டி எழுப்புதலும் - பராமரிப்பும் அங்கு நடத்தப்படும் கொண்டாட்டங்களைத் திட்டமிடுதல் போன்றவற்றை உள்ளடக்க வேண்டும். அரச நினைவுச் சின்னங்களின் அமைவு பற்றிய கருத்துக்களின் பல்வகைமை, நினைவுப் பூங்காக்கள் உட்பட இத்தகைய கலந்தாலோசனைச் செயன்முறையின் மூலம் அமைய வேண்டும்.

4.12. ஆயுத மோதல்களின்போது அழிந்த அல்லது காணாமற்போனோர் புதைக்கப்பட்ட அல்லது குறியீட்டுப் பாங்கில் நினைவுகூரப்படுகின்ற இடங்களின் புனிதத்தன்மை மதிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகையவர்களின் குடும்பத்தினர் தங்களுக்குப் பொருத்தமானதாகக் கருதும் சமய, பண்பாட்டுச் சடங்குகள் அல்லது கொண்டாட்டங்களை மேற்கொள்ளவும், தங்கள் இரங்கலை வெளிப்படுத்தவும், அந்த நிலத் துண்டுகளின் உரிமையை அந்தக் குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என்றும், இந்த இடங்களில் பின்னர் எழுதப்பட்ட கட்டடங்களும் அமைப்புக்களும் அகற்றப்பட வேண்டும் என்றும் கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது.

4.13 இலங்கையில் நடைபெற்ற சகல ஆயுதமோதல்களில்போது கொல்லப்பட்ட அல்லது காணாமற்போனோரின் நினைவு தினம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டு, அத்தினத்தில் நடைபெறும் நினைவுகூரல் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டோர் அனைவரின் உணர்வுகளும் அரசால் மதிக்கப்பட வேண்டும்.

4.14 பல்வேறு சமூகங்களும் அனுபவித்த இழப்புகளும், துன்பங்களும் மீண்டும் நிகழாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அரசால் அதிகார பூர்வமாக உறுதிமொழிகள் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக இது 1983 பேரழிவுகள், 2014 அழுத்கம அழிவுகள் போன்றவற்றையும் உள்ளடக்கும். போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த பேரவலங்கள், தென்னிலங்கையில் நடந்த ஆயுதமோதல்களின்போது நிகழ்ந்த இழப்புகள், வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, மலையகச் சமூகம்போன்று சமூகக் குழுக்கள் எதிர்நோக்கிய அமைப்புரீதியான வன்முறைகள், ஒதுக்கல்கள் முதலியவையும், இது தொடர்பாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**5.உண்மை, நீதி, நல்லிணக்கம் மற் றும் மீள்நிகழாமை ஆணைக்குழு (உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு)**

5.1 உண்மைதேடும் பொறிமுறைக்கு வழங்கப்படும் ஆணை தொடர்பாக, கலந்தாலோசனை அமர்வுகளின் போது தெரிவிக்கப்பட்ட முரண்பாடான கருத்துக்கள், தெளிவின்மை என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, பொறிமுறைகளின் நோக்கம் அதன் பரப்பெல்லை அது கருத்தில் கொள்ளவேண்டிய செயன்முறைகளின் வகைகள் அது நிறைவேற்ற வேண்டிய அடிப்படையான பணிகள் என்பவை கவனமாக வரையறுக்கப்பட வேண்டும். உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு அரசு வாக்குறுதியளித்துள்ள பரந்த ஒரு நல்லிணக்கச் செயல்முறையின் ஒரு பகுதி என்ற வகையில் பிற பொறி முறைகளு டன் அதன் உறவுபற்றியும் தெளிவாக வரையறுத்துக்கூற வேண்டும்.

5.2 குறிப்பாக உநீநமீநி ஆணைக்குழு, தனித்தனி விடயங்களையா அல்லது கூட்டு அனுபவங்களைச் சொல்லும் வகைமாதிரியான விடயங்களையா கையெடுக்கப்போகின்றது என்பதில் ஒரு தெளிவு இருக்கவேண்டும்.


5.3 இலங்கையில் தேர்தல்கள் நடைபெற்ற காலத்தில், பாரபட்ச நடைமுறைகள் உட்பட என்ன நடைபெற்றன என்பதை நிறுவுவதும், அது நிறுவப்பட்டதும் உண்மையை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்வதுமே உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழுவின் குறைந்தபட்ச நோக்கம் என்பது கலந்தாலோசனைச் செயலணியின் அபிப்பிராயமாகும். அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதென்பது பொருத்தமான இடத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் உள்ளடக்க வேண்டும்.

5.4 இச்சூழலில் உண்மை என்பது கடப்பாட்டையும் உள்ளடக்குகின்றது. ஆனால் குற்றவியல் கடப்பாட்டை நிறுவுவது, அதாவது யார் குற்றவாளி என்பதைத் தீர்மானிப்பது ஒரு நீதிப் பொறிமுறைக்கே அல்லது நடைமுறையில் உள்ள நீதி முறைக்கே மிகப் பொருத்தமானது. உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு, குற்றவியல் கடப்பாட்டைப் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமான பொறிமுறை அல்ல என்பதே கலந்தாலோசனைச் செயலணியின் அபிப்பிராயமாகும். ஆகவே மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம் அதற்கு வழங்கப்படக் கூடாது.

5.5 உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு உண்மையைக் கண்டறிவதற்கான விசாரணைகள் நடத்துவதையும், குற்ற நடத்தைகள் தொடர்பான தகவல்களை நீதி விசாரணை அமைப்புடன் பகிர்ந்து கொள்வதையும் பரிந்துரைக்கின்றது.

5.6 உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு ஒரு குறிப்பிட்டகால எல்லையைக் கொண்டிருக்க வேண்டும். கால எல்லை முடிவில் அது நாடாளுமன்றத்துக்குத் தன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(மிகுதி நாளை தொடரும்)



# வாசகர் திருமுகம்

## டெங்கு நோய்த் தொற்றிலிருந்து எம்மைத் நாமே பாதுகாப்போம்

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோய்த்தாக்கம் திடீரெனப் பெருமளவில் அதிகரித்துள்ளதான செய்தி கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. வருமுன் காப்போம் செயற்றிட்டத்தின் மூலமே தொற்று நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த இயலும். பொறுப்பை மற்றையோர் மீது சுமத்தாது பொது மக்களாகிய நாம் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே இத்தகைய சுகாதாரப் பாதிப்புக்களிலிருந்து எம்மை நாமே பாதுகாத்திட இயலும்.

எனவே மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.

*எம்.எஸ்.டெலிமா*
*மன்னார்*

## சுயதொழிலுக்கான கடனுதவித்திட்டம் முன்னாள் போராளிகளை ஊக்கப்படுத்தும்

இறுதிப்போரின் போது படையினரால் கைது செய்யப்பட்டும், சரணடைந்தும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளில் பலர் சுயமாகத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தக்க திறன் கொண்டுள்ளனர். ஆயினும் அவ்விதம் சுயமாகத் தொழிலொன்றை ஆரம்பிக்க மூலதனம் கிட்டாது அவர்களில் பலர் சிரமமுறுகின்றனர். புனர் வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட அவர்களுக்கு வங்கிகள் மூலமாகக் கடனுதவி பெற உதவி அவர்களை சுயதொழிலொன்றை மேற்கொள்ள ஊக்குவிக்க புனர்வாழ்வு அதிகாரசபை முன்வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தொழில் திறன் படைத்த அந்த முன்னாள் போராளிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண இந்த வாய்ப்பு அவர்களுக்குப் பெருமளவில் உதவும்.

*பி.நடேசன்*
*கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வன்முறை

Donestic Violence



மருத்துவர் க.குருபரன்

பல்வேறு தரப்புகளும் இப்பொழுது கதைக்கும் ஒரு விடயமாக குடும்ப வன்முறை விளங்குகிறது. எங்களிடையே குடும்ப வன்முறை அதிகரித்து விட்டதா அல்லது இப்போதுதான் நாம் விழிப்படைந்து இருக்கிறோமா? இதன் ஆதிமூலம் எப்போதும் முட்டையா அல்லது கோழியா போல விடை தெரியாத கதை.

**நிகழ்வு-1**

ஒரு 65வயது பாட்டியும் பேர்த்தியும் வைத்தியசாலைக்கு சேர்க்கபட்டார்கள். பாட்டியின் முகம் முழுக்கக் கண்டல் காயம். பேர்த்தியோ பலநாள் சாப்பிடாமல் இருந்தது போல் வாடிய சிறுபயிராக இருந்தாள். தாயில்லா பிள்ளையும் பாட்டியும் சிறு பிள்ளையின் தந்தையால் தினமும் துன்பத்துக்கு ஆளாக்கப்பட்டு வந்தார்கள். பிள்ளையின் தாய் நோய்வாய்ப்பட்டு ஒரு வருடத்தின் முன் இறந்து விட்டார். தாங்க முடியாத துன்பத்தின் பின்பே இருவரும் வைத்தியசாலையின் உதவியை நாடினர்.

**நிகழ்வு-2**

ஒரு 30 வயது இரு பிள்ளைகளின் தாய் மூன்று மாதத்தினுள் வைத்தியசாலையின் பல பிரிவுகளிலும் பலமுறை ஞர்க்கப்பட்டிருந்தாள். ஒவ்வொருமுறையும் புதிதாக ஒரு நோயை கூறிக்கொண்டு வருவார். இறுதியாக இரண்டு கால்களிலுமுள்ள எலும்புகள் முறிந்து அவசர சிகிச்சை விடுதிக்கு வந்திருந்தார்.

மிகவும் கடுமையான சமூக குடும்ப கட்டுப்பாடுகளால் வெளியில் சொல்ல முடியாத குடும்பவன்முறைக்கு ஆளாகிவந்தவர். தாங்கமுடியாத நோவினாலும் நடக்க முடியாத காரணத்தினாலும் தனக்கு நடந்த துன்பத்தை வைத்தியர்களிடம் கூறினார்.

மேலே கூறப்பட்டவை வெளியில் வந்த குடும்பவன்முறைக்கு சில உதாரணங்கள் மட்டுமே. குடும்ப வன்முறை என்பது மிக நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்படும் நெருக்கீடுகள் ஆகும். இது பலவகைப்படும்

01.உணர்வுரீதியாக அச்சுறுத்தல் (Emotional abuse)
02.பொருளாதார ரீதியாக அச்சுறுத்தல் (Financial abuse)
03.பாலியல் ரீதியாக அச்சுறுத்தல்(Sehual abuse)
04.உணவளிக்காமை அல்லது பட்டினி போடுதல்
05.பாதுகாப்பு தராமை(No Security)
06.வீட்டை விட்டு துரத்துதல்(No Shelter/ Nohousing)
07.காதலித்து ஏமாற்றுதல்
08.வீட்டுக்குள் பூட்டி வைத்தல்
09.உடல் ரீதியான வன்முறை(Physical Abuse)

**ஏன் குடும்ப வன்முறை நிகழ்கிறது?**

குடும்ப வன்முறை ஏன் நிகழ்கிறது என்பதற்கு பல காரணங்களை சொல்ல முடியும்.

01.எம் சமுதாயத்தில் முதியோரையும் பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பது ஒரு சமூகக் கடமையாக இருந்தது. பல்வேறு சமூக மாற்றங்களால் இந்த சமூக பொறுப்புணர்ச்சி (Social Responsibility) சற்று குறைந்து வருவதன் வெளிப்பாடே இவ்வாறான குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதன் காரணம்.
02. மது போதைக்கு அடிமையாதல், போரால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் காரணமாக நாம் ஒரு வேர் அற்ற பாசிச் சமுதாயமாக (Rootless Community) மாறி விட்டதே முக்கியமாகும்.

**ஏன் குடும்ப வன்முறை தொடர்பாக மருத்துவதுறையினர் முக்கியம் அளிக்கிறார்கள்?**

குடும்ப வன்முறை பற்றி பல்வேறு அரச நிறுவனங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் கதைக்கின்றன. பல நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துகின்றனர்., வைத்தியசமூகமாகிய நாம் இந்த வன் முறையால் பாதிக்கப்படு பவர்களை அடிக்கடி பார்க்கின்றோம்.



> குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுமிடத்து பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு எள்ளளவில் தானும் சந்தேகம் வராத முறையில் வைத்தியசாலைகளுக்கு வருவது மிக இலகு வானது. இதனால்தான் பல நோய்களை சொல்லி வைத்திய விடுதிகளில் அனுமதி பெறுகிறார்கள்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர் இலகுவில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாத வகையில் ஒரு வைத்தியசாலைக்கு வந்து தன்குறைகளை சொல்ல முடியும்.

மேலும் உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization) குடும்ப வன்முறையை ஒரு மருத்துவ பிரச்சினையாக வரையறுத்துள்ளது.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுமிடத்து பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு எள்ளளவில் தானும் சந்தேகம் வராத முறையில் வைத்தியசாலைகளுக்கு வருவது மிக இலகுவானது. இதனால்தான் பல நோய்களை சொல்லி வைத்திய விடுதிக்ளில் அனுமதி பெறுகிறார்கள்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுமிடத்து
01.உடல் உள ஆரோக்கியம் பாதிக்கப்படும்
02.என்பு முறிவு
03.காயங்கள்
04.கருச்சிதைவு
05.சிலவேளைகளில் மரணமும் நிகழலாம்

இவையாவும் நீண்ட நாள் சிகிச்சை தேவைப்படும் நிலையை உருவாக்கிவிடும். ஓர் ஆரோக்கியமற்ற உடல் மற்றும் மன அளவில் பலவீனமான ஒரு சமூகம் நீண்டநாள் நோக்கில் எம்மிடையே உருவாகலாம்.

**வைத்தியசாலைகளிலுள்ள வசதிகள்**

01.எமது வைத்தியசாலைகளில் இவ்வகையான வன்முறைக்கு உட்பட்டவருக்கு ஆலோசனைகளையும் மேலதிக வழிகாட்டல்களையும் செய்வதற்கு சேவை நிலையங்கள் உள்ளன.
02.நட்பு நிலையங்கள் என்ற பெயரில் இவை இயங்குகின்றன. யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை, சாவகச்சேரி, மந்திகை வைத்தியசாலைக்ளில் நட்பு நிலையங்கள் இயங்குகின்றன.

இங்கே சேவைகளை வழங்குவதற்கு பல்வேறு உத்தியோகத்தர்கள் தயாராக இருக்கிறார்கள் உங்கள் பிரச்சினைகளை செவிமடுத்து ஆறுதல்படுத்தி தேவையான வழிகாட்டல்கனை இவர்கள் செய்வார்கள்.

முக்கியமாக மருத்துவத்துறைக்கு உரிய முறையில் தகவல்களின் இரகசியம் பேணப்படுவதால் இப்போது பலர் இந்த சேவைகளைப் பெற்று தமது இடர்களுக்கான தீர்வுகளைப் பெறுகிறார்கள்.

**நட்பு நிலையங்களில் வழங்கப்படும் சேவைகள்**

01.பிரச்சினைகளை ஆறுதலுடன் செவிமடுத்தல் (Befriending)
02.தேவையான ஆலோசனைகளை வழங்குதல்
03 தேவையான வழி காட்டுதல்களை வழங்குதல் (Guidance)

சட்ட உதவி (Legal aid)
பொலிஸ் (Police) உதவி தேவைப்படின் அறிவித்தல்
01.மருத்துவ சேவைகள்

**நட்பு நிலையம்/யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை**

01.பழைய வெளிநோயாளர் பிரிவில் (OPD) நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கு அருகில் உள்ளது.
02.வார நாள்களில் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை.
03.சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து ந.ப12 மணிவரை.
04.தொலைபேசி இலக்கம் 2221090


**குடும்ப வன்முறை - தடுக்க என்ன செய்யலாம்?**

01. குடும்ப வன்முறை தொடர்பான விழிப்புணர்வை பாடசாலை மட்டத்தில் இருந்து தொங்க வேண்டும்.
02.ஆணும் பெண்ணும் சமமாக தம்மையும் தமது உறவுகளையும் மதிக்கத் தொடங்கும் போது அங்கே வன்முறைக்கு இடம் குறைகிறது.
03.ஒவ்வொருவரும் தனது சக மனிதனை மதிக்கும் போது அங்கே வன்முறைக்கு இடம் குறைகிறது.

மகப்பேற்றியல் பெண்
நோயியல் நிபுணர்,
யாழ்ப்பாணம் போதனா
வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-01-2017 அன்று உங்கள் கைகளில்
'பொங்கல் சிறப்பிதழ்'




வாசிப்பை
நேசிப்போம்

பக். 34

# சூரியகாந்தி

08.01.2017






பக். 33

சாணக்ய
குணவர்தனவின்
தில்லு முல்லு



அன்புள்ள சின்னம்மாவுக்கு...
எனது அன்பு கனிந்த வணக்கங்கள்!

தாங்கள் நலமே இருக்கிறீர்கள் என்பது யாவரும் அறிந்ததே!
கடந்த ஆண்டின் இறுதிப்பக்கங்களை பரபரப்பாக்கியவர்களில் நீங்கள் முதன்மையானவர். அதிலும் ஆண்டின் இறுதி நாளன்று உங்களுக்குப் பதவி ஒன்று தரப்பட்டிருக்கிறது. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள். பூவோடு சேர்ந்திருக்கின்ற நாரும் மணம் வீசும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் பதவியேற்பின் பின் பூவோடு சேர்ந்திருந்த நார் ஒன்று தனியே மணம் வீச ஆரம்பிப்பதைப் போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

# சின்னம்மாவுக்கு ஒரு பகிரங்கமடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இந்திய உபகண்டத்தில் உதித்த தமிழ் இலக்கியத்தில் தோழமைக்குப் பல உதாரணங்களை கற்றிருக்கிறேன். அவற்றில் பல காவியத்திலும் காகிதத்திலும் கண்டவை தான். ஆனால், நீங்கள் சம்பந்தப்பட்ட இந்த நட்பு, இலக்கியத்தில் பதிவு செய்யப்படாது விட்டாலும் அரசியலிலும் வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்று நிற்கிறது.

மறைந்த செல்வி ஜெயலலிதாவுக்கும் உங்களுக்குமான ஊடாட்டத்தினைத்தான் குறிப்பிடுகின்றேன். 1989ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை அ.இ.அ.தி.மு.க.வினைக் கட்டி ஆண்ட ஜெயலலிதாவுக்குத் தோழியாக வந்து வாய்த்த உங்களுக்கு, காலம் வரைந்த கோலம் ஆச்சரியத்துக் குரியதாக இருக்கிறது. பல இடங்களில் அது சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. தற்போது அது உங்களது சுயசரிதத்தையும் மாற்றியிருக்கிறது.

சிநேகிதத்தின் வழி வந்த உங்கள் இருவருக்குமான பிணைப்புத் தற்போது பிரபல்யமாகப் பேசப்பட்டதைப் போன்றே, இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த கைது விவகாரமும் அப்போது பிரபல்யமாகப் பேசப்பட்டிருந்தது. 1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடந்த அந்தச் சம்பவத்தில் உங்கள் தோழியுடன் நீங்களும்தான் சிறைக் கம்பியைக் கணக்கிட வேண்டியிருந்தது. அந்நிய செலாவணி மோசடி சம்பந்தமான வழக்கில் நீங்கள் நிகழ்த்திய நோயாளி நாடகம், அப்போது ஊடக உலகில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்று.

பின்னர், 2011 இல் நிகழ்ந்த திருப்பம், தற்போதுள்ள நிலையுடன் ஒப்பிடுமிடத்து நினைத்துப்பார்க்க முடியாதது. அந்த ஆண்டும் டிசெம்பர் மாதத்தில் தான் நீங்கள் உள்ளிட்ட உங்களின் உறவினர்கள் போயஸ் தோட்ட இல்லத்திலிருந்து அம்மாவினால் விரட்டப்பட்டிருந்தீர்கள். ஆனாலும் பின்னர் உங்கள் பக்கமிருந்த சில கறுப்பு ஆடுகளை நீங்கள் இனங்கண்ட பிறகு (?) அம்மா உங்களை ஏற்றுக்கொண்டிருந்தார்.

உங்களது அக்காவின் மகன் தினகரன் மூலமாகவே தற்போதைய தமிழக முதல்வர் ஓ.பி.எஸ்இற்கு ஜெயலலிதாவின் அறிமுகமே கிடைத்தது என்றால் கட்சிக்குள் உங்களுக்கு இருந்த செல்வாக்கு மற்றும் இருக்கும் செல்வாக்குத் தொடர்பில் மறுவாக்கு கூறத் தேவையில்லை.

ஆனாலும் அம்மாவிடம் உங்களுக்கிருந்த நெருக்கத்தினை நன்கு பயன்படுத்திக் கொண்ட உங்கள் உறவினர்கள், கட்சிக்குள்ளும் ஆட்சியிலும் பலருக்கும் தொல்லை தந்ததாக ஊடகப் பதிவுகள் இல்லாமல் இல்லை.

உங்கள் நெருங்கிய தோழியான ஜெயலலிதாவின் சாவின் பின்னால் சந்தேகம் நிலவினாலும், அதில் உங்கள் கைவரிசை இருக்கிறதோ என்ற உறுத்தல் இருந்தாலும் புறச்சூழ்நிலை உங்களுக்குச் சாதகமான போக்கினையே கொண்டிருக்கிறது.

ஜெயலலிதா -கருணாநிதி கலவை முடிந்து சசிகலா-கருணாநிதி கலவையினால் தமிழக மக்களும் அதன் பக்கத்து வீட்டுக்காரர்களாகிய நாமும் சலவை செய்யப்படுவதற்கான காலம் வர இருக்கிறது. ஏன் வந்தே விட்டது என்று கூடச் சொல்ல முடியும். அது ஸ்டாலின்-சசிகலா கலவையாக மாறும் போக்கும் தமிழக அரசியலில் தென்படவே செய்கிறது.

கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருக்கும் உங்களை முதலமைச்சர் ஆக்கிப் பார்ப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக அறியக் கிடைக்கிறது. இதற்கான முரசறைதலை விடுத்திருக்கிறார் அ.இ.அ.தி.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற துணை சபாநாயகருமான மு. தம்பித்துரை. அவர் உங்களைக் கலங்கரை விளக்கு என்று வேறு வர்ணித்திருக்கிறார். குறித்த தம்பித்துரையின் அறிக்கையை யும் அறிவிப்பினையும் கண்டித்து எதிர்த்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலினினால் மறுத்தான் அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது.

> பக்கத்துவீட்டு ஆரவாரங்களில்–களேபரங்களில்– நேரடியாகப் பங்குபற்றா மல் விட்டாலும் அங்கு என்ன நடக்கிறது? என்பதை ஆர்வத்துடன் கூர்ந்து கவனிப்பதைப் போன்றே ஈழத் தமிழரான நாங்களும் அயலகம் தமிழகத்தில் என்ன நடக்கிறது? என்பதை ஊட கங்களில் அவதானித் தபடி இருக்கின்றோம்.

நீங்கள் உத்தியோகபூர்வமாக முதலமைச்சர் பொறுப்பினை ஏற்கும் முன்பாகவே கச்சதீவு புதுக்கோயில் புகுமுக விழாவுக்குத் தமிழக பக்தர்களை அனுமதிப்பது தொடர்பில் முதல் வர் பன்னீர் செல்வத்தினைத் தவிர்த்து உங்களுக்குக் கடிதம் எழுதி தம்பித்துரைக்கு ஜாடை காட்டியிருக்கிறார் நமது ஜனாதிபதி.

பக்கத்துவீட்டு ஆரவாரங்களில்–களேபரங்களில்– நேரடியாகப் பங்குபற்றாமல் விட்டாலும் அங்கு என்ன நடக்கிறது என்பதை ஆர்வத்துடன் கூர்ந்து கவனிப்பதைப்போன்றே ஈழத் தமிழரான நாங்களும் அயலகம் தமிழகத்தில் என்ன நடக் கிறது என்பதை ஊடகங்களில் அவதானித்தபடி இருக்கின்றோம்.

அத்தகைய வகிபாகம் தமிழக மக்களிடையேயும் இருக்கின்றது. ஆனால் இத்தகைய உறவுநிலையைவாக்கு வங்கிகளைப் பத்திரப்படுத்த எடுக்கும் நிலைப்பாடுகளில் கருவேப்பிலைக்கு நிகர்த்த விதமாகவே தமிழக அரசியல்வாதிகள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற நீங்கள் ஆவன செய்ய வேண்டும். நீங்கள் கட்சியின் பொதுச்செயலாளராக விளங்கினால் என்ன, அதிலிருந்து முன்னேறித் தமிழக முதலமைச்சர் ஆகினாலென்ன, இந்திய மத்திய அரசுக்கும் கொழும்பு அரசுக்கும் ஈழத்தின் தமிழர் தாயக பிரதேச நிலைப்பாடுகள் தொடர்பில் அழுத்தம் வழங்கக் கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு இருக்கின்றது. அந்தக் காரியத்தினை அறிக்கைகளுடன் மட்டுப்படுத்திவிடாமல் ஆக்கபூர்வமானதாகத் தொடர வேண்டுகின்றேன். எல்லை தாண்டும் மீனவர் விவகாரம் பிள்ளையார் கல்யாணமாகத் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கிறது. அதில் தவறிழைப்பது தங்கள் தரப்புத் தான் என்பது கொஞ்சம் கசப்பான உண்மை தான். ஆனாலும் குறித்த மீனவர்களின் வாழ்வாதாரங்களை வேறு வேலைத்திட்டங்களூடாக மேம்படுத் துவதன் மூலம் இந்த பனிப்போருக்கு சங்கூத தாங்கள் திடசங்கற்பம் பூணவேண்டும்.

'மன்னார்குடி மாபியா' என்று வர்ணிக்கப்பட்ட தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் ஜெயா அம்மாவின் மறைவுக்குப் பின்னர் என்ன செய்தார்கள் என்ன ஆனார்கள் என்பதைப் பதிவு செய்ய வரலாறு தனது எழுது கருவிகளுடன் தயாராகவே நிற்கிறது. மக்களுக்குத் தாராள பயனைத் தந்தால் தங்களது அரசியல் பயணம் பாராட்டத்தக்க ஒன்றாக அமையும்.


வாழ்த்துக்கள் மற்றும் நன்றிகளுடன்,
ஸ்ரீ ஜோ ஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசுக்கு ஏனிந்த நிலை?

சேரலாதன்



மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலையாகியுள்ளனர். கொழும்பு நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பு உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற தமிழர்களை அதிர்ச்சி கொள்ளச் செய்து விட்டது.

சிங்களம் பேசுகின்ற ஜூரிகள் சபையின் ஏகமனதான முடிவைக் கருத்திற் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பை எவராலும் விமர்சிக்க முடியாது. ஆனால் இந்தக் கொலைவழக்கில் நீதிநிலைநாட்டப்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாகவே எழுந்துள்ளன.

கடந்த மகிந்த ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர், காணாமலாக்கப்பட்டனர், கடத்தப்பட்டனர். ஆனால் இவை தொடர்பாக உரிய நீதி விசாரணைகள் இடம் பெறவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை. ஆனால் அதே நிலை நல்லாட்சி அரசிலும் நீடிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆட்சியைக் கைப்பற்றுவதே மகிந்த தரப்பினரின் பிரதானமான நோக்கமாகக் காணப்படுகின்றது. இதனால்தான் இன்னமும் ஒரு வருட காலத்தினுள் நல்லாட்சியைக் கவிழ்ப்பேன் என மக்கள் மத்தியில் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். இதை மக்களும் நம்புவதாகத் தெரிகின்றது. பொருளாதார ரீதியில் பாதிப்பை எதிர்கொள்ளும்போது மக்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெழவே செய்வார்கள். மகிந்த தரப்பினர் இதைச் சரியாகப் பயன்படுத்துவதற்காகக் காத்திருக்கின்றனர் என்பது தான் இதன் உள்ளார்ந்தம்.

1970 இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிகளின் துணையுடன் ஆட்சியை அமைத்துக் கொண்டது. பொருளாதார ரீதியில் பல முன்னேற்றகரமான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. இறக்குமதிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. அரிசியிலான உணவுகளின் பாவனை கட்டுப்படுத்தப்பட்டது உள்ளூர் உணவுப் பொருள்களின் உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. அவ்வேளை கொழும்பு நகரின் பிரதான இடங்களில்கூட மரவள்ளிச் செடிகளைக் காணமுடிந்தது. கோதுமை இறக்குமதியிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் பாணுக்குப் பெரும் கிராக்கி நிலவியது. மக்கள் அதிகாலை வேளையிலேயே பாண் உற்பத்தி நிலையங்களுக்கு முன்பு நீண்ட வரிசையில் காத்திருந்தனர். சிலருக்கு அது கைக்கெட்டாத பொருளாகவும் மாறியது. அரச அலுவலர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடங்களில் வைத்து பாண் விநியோகம் இடம் பெற்றது. தேநீர்க்கடைகளில் பனங்கட்டியுடன் தேநீரை அருந்த வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டது. அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் மக்களிடம் பெரும் எதிர்ப்புக்களுக்கு உள்ளாகின. நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து உடம்பை வருத்தாமல் வாழப் பழகிக் கொண்ட மக்கள் அரசின் முன்னேற்றகரமான திட்டங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அவ்வேளை மக்களிடம் ஏற்பட்ட குழப்பநிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டது. 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. ஐக்கிய தேசியக் கட்சி மிக அதிகப்படியான நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்தது. மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பலம் இருந்ததால் அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. இவையெல்லாம் பழைய செய்திகள் தான். ஆனால் தற்போது மீண்டும் அதே சரித்திரம் திரும்புவதாகவே தெரிகின்றது.

கடந்தகால அரசில் இடம் பெற்ற மோசடிகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதில் தற்போதைய அரசு ஆமை வேகத்தில் செயற்படுவது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகள் இந்த அரசினால் எதுவுமே செய்யமுடியாது என்ற எண்ணத்தில் செயற்படுகின்றனர். அரசு விடுகின்ற சிறிய தவறைக்கூட மக்களிடம் பெரிதாக்கிக் காட்டுவதற்கு முனைகின்றனர். இதில் ஓரளவு வெற்றியும் அவர்களுக்குக் கிட்டுகின்றது.

தமிழர் தரப்பினர் ஏதோவொரு நம்பிக்கையில் இந்த அரசுக்கு முண்டுகொடுத்து வருகின்றனர். குறிப்பாக புதிய அரசமைப்பின் மூலமாகத் தமிழர்தரப்பின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடுமென அவர்கள் நம்புகின்றனர். ஆனால் இதை அரசினால் நிறைவேற்றமுடியுமா? என்பதில் சந்தேகங்கள் தற்போது ஏற்பட்டுள்ளன. எதிரணியின் எதிர்ப்புக்களைத் தாண்டி அரசினால் செயற்படமுடியுமா? என்பதிலும் உள்ள நம்பகத்தன்மை மெல்ல மெல்லக் குறைந்து வருகின்றது. இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, காணமலாக்கப்பட்டவர்கள் [illegible] இடம்பெற்ற குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தமிழர் தரப்பின் தீர்வுகாண முடியாத பிரச்சினைகளாக விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன. அரசு இவற்றில் போதிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆனால் வட பகுதிக்குப் பொருத்தமில்லாத பொருத்து வீடுகளை மக்களிடம் திணித்துவிடுவதில் மீள்குடியேற்ற அமைச்சர் தீவிரம் காட்டி வருகின்றார். இதற்குப் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புக் காணப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கின்றனர். ஆனால் பொருத்துவீடுகள் அமைப்பதற்கு அமைச்சரவையின் ஒப்புதலும் கிடைத்துவிட்டதாகத் தெரிகின்றது. இதுவும் தமிழர்களின் உணர்வுகளை அலட்சியம் செய்வதொரு செயலாகவே கருத முடிகின்றது. மேலும் வடமாகாணத்தில் பெரும்பான்மையின மக்களின் அத்துமீறிய குடியேற்றங்கள், தென்பகுதி மீனவர்களின் அடாவடித்தனங்கள், கட்டுப்பாடற்ற வகையில் புத்தரின் சிலைகளை அமைத்தல், புத்ததுறவிகள் சிலரின் எல்லையற்ற செயற்பாடுகள் எல்லாம் இந்த அரசின் கண்களுக்குத் தெரியவில்லை. அதே வேளை நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் வடக்குக் கிழக்கில் சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனக் கதைவிடும் நிலையும் காணப்படுகின்றது.

> தமிழர் தரப்பினர் ஏதோவொரு நம்பிக்கை யில் இந்த அரசுக்கு முண்டுகொடுத்து வருகின்றனர். குறிப்பாக புதிய அரசமைப்பின் மூலமாகத் தமிழர்தரப்பின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடுமென அவர்கள் நம்புகின்றனர்.

நல்லாட்சி அரசின் ஆயுள்காலம் கூட்டு எதிரணியினர் கூறுவது போன்று ஒருவருட காலத்தில் முடிவுக்கு வந்துவிடுமா? என மக்கள் சிந்திக்கும் நிலையொன்று உருவாகியுள்ளது. இதைப் போக்க வேண்டிய கடமை அரசிடமே உள்ளது.

மகிந்த அரசின் ஆட்சிக்காலத்தை இந்த அரசும் நினைவூட்டுமாயின் அதற்கு நல்லாட்சி என்ற பெயர் பொருந்தவே பொருந்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



"யார் யாரோ...
நான் பார்த்தேன்...
யாரும் எனக்கில்லை.
என் வழியில்
நீ வந்தாய்
நீயும் எனக்கில்லை..."

அராலியூர்
எஸ்.மல்லிகா

# வேண்டாமே மணமுறிவு

**குற்ற உணர்ச்சிகள்...**

மனதுக்கும் மனதுக்கும் முடிச்சுப் போடும் புனிதக் கயிறுதான் திருமணம். அது ஒவ்வொரு மனிதரையும் இன்னொருமுறை பிறக்க வைக்கிறது. அவர்களுக்குள் புதிய கனவுகளைப் பூக்கச் செய்கிறது. புதுப்புனலாய் உணர்ச்சிகளைப் பொங்க வைக்கிறது. இதில், பால் வேறுபாடு கிடையாது. ஆனால், இன்றைய அநேக திருமணங்கள் இவ்வாறு அமைவதில்லை.

காலையில் நடக்கும் திருமணம். மாலையில் கசக்கும் இருமனம். இருவரும் இருவேறு பாதையில் மனதால் பயணிப்பதே அதற்குக் காரணம். "மனமொத்த தம்பதியராய் நூறாண்டு காலம் வாழ்க" என்று மதகுரு முதல் பெரியவர்கள் வரை ஆசிகளை அள்ளியிறைப்பர். ஆனால், தம்பதியினருக்குள் முட்டிக்கொண்டிருக்கும் மாற்றுச் சிந்தனைகள்- குற்ற உணர்ச்சிகள் அவற்றைச் செவிமடுக்க விடுவதில்லை. உலகுக்கு கணவன்- மனைவி என்ற வேடம் போட்டால் சரி என்ற அளவுடன் நின்று விடுகிறது அவர்களின் இல்வாழ்க்கை.

சில திருமணங்கள், ஆணுக்கும் பெண்ணுக்கும் விருப்பின்றி நடக்கும். இன்னும் சில திருமணங்கள் யாராவது ஒருவருக்கு பிடிப்பின்றி நடக்கும். ஆயினும், தத்தம் உணர்ச்சிகளை அவர்கள் ஆரம்பத்தில் வெளிக்காட்டுவதில்லை. அவற்றை உள்ளடக்கிப் பொய் முகங்களைக் காட்டுகின்றனர். உறவினர் முன்னிலையில் குதூகலமாய் இருப்பது போன்று நடிக்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் திருமண மேடையில் நடிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பணத்துக்காக, வறட்டுக் கௌரவத்துக்காக, சிலரைப் பழிவாங்குவதற்காக, சிலரின் வற்புறுத்தலுக்காகப் பிடிப்பின்றித் திருமண பந்தத்தில் இணைகின்றனர். தாமும் கருத்தொருமித்த காதலர்கள் தான் என்று வேடம் தரிக்கின்றனர். இன்னும் சிலர், தமது சிறுவயதில் அல்லது வாலிப வயதில் விட்டேத்தித்தனமாக நடந்து, சுய இச்சைகள் அத்தனையும் சுகித்து முடித்தபின் தமக்கான பாதுகாப்பு அல்லது சமூக அங்கீகாரம் கிடைத்தற் பொருட்டு திருமண பந்தத்துள் விழுகின்றனர். பின்னர், தம் (ஆணோ-பெண்ணோ) தவறை உணர்ந்து அழுகின்றனர். மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தம்மை நம்பி வந்த துணையையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றனர். செந்தில் (பெயர் மாற்றப்பட்டுள்ளது), இளமை தழுவிக்கொண்ட வாலிபன். திருமணக் கனவுகள் ஆயிரம் சுமந்தான். மகிழ்ச்சி மழையில் கணமும் நனைந்தான். ஆனால்,



## யாழ்.மண்ணே வணக்கம்

மீள முயன்று வாழ்வை நட்டனர்
எம் மக்கள் ஆயினும்
மீண்டும் எழுந்தது போர்

வன்னியில் வீரம் எழுதினர்
நின் அரும் புதல்வர்
தேசம் காத்திட வேண்டி தம் தேகம்
கொன்றனர்
ஈழ விடுதலை வேண்டி
தியாக தீயில் எரிந்தனர்.

யாகம் பெரியது ஆயினும்
துரோகம் நஞ்சைக் கலந்தது

அன்னிய தேசத்து சதியும்
நம்பிய நம்மவர் தவறும்
நந்திக்கடலின் கரையில்
தனியே விட்டது தமிழை

உறவுகள் இழந்து உடைமைகள் தொலைத்து
உடலிலும் மனதிலும் காயம் சுமந்து
நொந்து வந்தவர் தன்னை
தாங்கினாய் தாயகமே

இன்று நாள் வரையும்
நிலம் பறித்தலும் குழிபறித்தலும்
தொடருமாயினும்
நீண்டதோர் சூழ்ச்சி வலையது
சூழ்ந்த போதிலும்
சோர்ந்திடா மனிதர் இருப்பதனாலே
சோகம் வென்றெழுக
தீயினின்றெழும் பீனிக்ஸ்
பறவையாய் எழுவாய் யாழ் நகரே.

கலைகளின் நிலமே கல்வியின் புலமே
எமது தாயகமே,
மேன்மைகள் பெற்று மீளவும் எழுந்து
உயர்ந்து வாழியவே.

போர் வடுக்கண்டாய் அழிந்து
சிதைந்தாய்
எம் அழகுறு யாழ்ப்பாணம்
யார் தடுத்தாலும் வேர் அழிந்திடாமல்
தளைப்பாய் தலை நகரே.

பாடிடும் பழம் பெரும் புலவர்
வாழ்ந்த கலையகமே,
பனி விழும் நாட்டிலும்
உன் தன் புதல்வர் படர்ந்தார்
புகழ் கொண்டார்,
அரசியல் ஆய்ந்து அதன் வழிநின்று
கதிரென எழு நிலமே
இனி வரும் காலங்கள் உனதே
என்றே எழுக எழில் நகரே.

வேலணையூர்- தாஸ் (முற்றும்)

## ஜாதகம்

கயிற்றின் மீது நடந்தும்
கத்தியில் தொங்கியும்
நெருப்பை உமிழ்ந்தும்
வளையத்துக்குள் தன்னை
குறுக்கியும்
நிகழ்த்திக் காட்டிய அவனின்
சாகசங்களைக் காட்டிலும்
பெரிதாகத் தெரிகிறது
சுற்றி நின்றவர்களில் ஒருவன்
அலுமினியத் தட்டில் வீசியெறிந்த
நூறுரூபாய்த் தாள்

ச. பிரியா





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்


1993 - கிளாலிப் படுகொலை:
55 பேர் உயிரிழந்தனரா? 55 பேரது சடலங்கள் கரையொதுங்கியதாகவும், மேலும் 25 பேர் உயிரிழந்தோ காணாமற் போயோ இருக்கலாம் எனவும் ஜேர்மன் வானொலி அறிவிப்பு.

1994 - கிழக்குத் தேர்தல்: போட்டியிடுமாறு தமிழர் மீது இராணுவம் நிர்ப்பந்தம். மறுக்கும் பிரமுகர்கள் கைது; பட்டியலுடன் தேடுதல் வேட்டை.

1995 - புலிகள் - படையினர் வயர் லெஸ் தொடர்பு போர் இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து.

1997 - புலிகள் மீதான தடை;
இந்தியா நீக்க வேண்டுமென பெங்களூர் ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டில் கோரிக்கை.

2009 - எஞ்சியுள்ள ஊடக சுதந்திரத்தையும் நசுக்கும் முயற்சி லசந்தவின் கொலையென இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் கழகம் கண்டனம்.





## சுசி பாப்பா

சுசி பாப்பா எதெற்கெடுத்தாலும் அடம் செய்வாள். அன்று வெள்ளிக்கிழமை. நகரில் கண்காட்சி நடப்பதாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினர். அங்கு அழைத்துச் செல்லுமாறு அவள் அடம்பிடித்தாள். அப்பா ராமு பயந்து நடுங்கினார். கண்காட்சிக்குப் போனால் அவள் கண்ணில் பட்டதையெல்லாம் கேட்பாளே? என்பதுதான் அவரது பயத்துக்குக் காரணம். வேறு வழியில்லாமல் நண்பர்களிடம் நிறையப் பணம் கடன் வாங்கிக்கொண்டு சுசி பாப்பாவைக் கண்காட்சிக்குக் கூட்டிப்போனார். அங்கு அவள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.

அவரது பணப்பை காலியானபின்தான் அவள் ஒரு பெரிய கரடிப் பொம்மையைப் பார்த்தாள். அதனை வாங்கித் தராவிட்டால், வீட்டுக்கே வரமாட்டேன் என்று தரையில் புரண்டு கத்தினாள்.

அங்கே காவலுக்கு நின்ற பொலிஸ்காரர் ஓடி வந்து ராமுவைப் பிடித்தார். "ஏய்யா! சின்னப் பாப்பாவ கடத்திக்கிட்டுப் போகலாம்னு பாக்கறியா?" என்று அடிக்கப் பாய்ந்தார். அப்போது சுசி பாப்பா, "சேர் வேண்டாம். அவரு எங்க அப்பா" என்றாள். "அப்போ எதற்கு பாப்பா அழுவுறா?" என்று அவர் கேட்டார். "எனக்கு அந்த கரடிப் பொம்மை வேணும். வாங்கித்தரச் சொல்லுங்க" என்றாள். ஏற்கனவே அவள் கை நிறைய இருந்த யானை, ஒட்டகம், மான் முதலான பொம்மைகளைப் பார்த்து, "இவ்வளவு பொம்மைகளை வைச்சிருக்கியேம்மா. அதை நாளைக்கி வாங்கிக்கலாம்" என்றார். உடனே அவள் கையிலிருந்த பொம்மைகளையெல்லாம் தூக்கி வீசினாள். "எனக்கு இதெல்லாம் வேணாம். அதுதான் வேணும்" என்று கத்தினாள். பொலிஸ்காரர் ராமுவிடம், "யோவ்! ஒன்னோட போன் நம்பரக் கொடுத்துட்டு பொம்மைய வாங்கிட்டுப் போ. நாளைக்கு வந்து காசு கொடுத்திடு" என்றார். அந்தப் பொம்மையைக் கடைக்காரரிடம் அவர் கேட்டு வாங்கிக் கொடுத்தார். அவள் வீட்டுக்கு எடுத்துச்சென்ற பொருள்களைப் பார்த்த அம்மா, "பணத்தையெல்லாம் செலவழிச்சிட்டு வந்திட்டீங்க. நாளைக்கு உணவு சமைக்கவும் காசில்லை" என்று கத்தினார்.

பொம்மைகள் புடைசூழத் தூங்கி எழும்பிய 5 வயது சுசி பாப்பாவின் மனதில் ஒரு சிந்தனை. யாருக்கும் தெரியாமல் அத்தனை பொம்மைகளையும் ஒரு பெரிய பையில் போட்டு எடுத்துக் கொண்டு போய், ஒரு கடைக்காரரிடம், சேர்! எங்க வீட்டில உணவு சமைக்கக் காசில்லை. இந்தப் பொம்மைகளை வைச்சிண்டு, காசு தாங்கோ" என்றாள். அவர் ஆச்சரியத்துடன் சுசி பாப்பாவை பார்த்தார். அவளோ, பணத்தைத் தருமாறு அடம்பிடித்தாள். வேறு வழியின்றி அவரும் பணத்தைக் கொடுத்தார். அத்துடன், "பாப்பா, இந்தப் பொம்மைகளையும் நீயே எடுத்துக் கொள்" என்றார். "அது தப்பு. யாரிடமும் பிச்சை வாங்கக்கூடாதுனு எங்கப்பா சொல்லியிருக்கார் என்றவாறு அவள் நடந்தாள்.

இதற்கிடையே சுசி பாப்பாவைக் காணவில்லை என்று பரபரத்தார் அம்மா. வீட்டைச் சுற்றிச் சுற்றித் தேடினார். அச்சமயம், வீட்டுக்கு வந்தாள் சுசி பாப்பா. "எங்கம்மா போட்டு வாறாய்?" என்று பரிவுடன் கேட்டார் அப்பா. "பொம்மைகளை எல்லாம் எடுத்திட்டுப் போய் விற்று, உணவு சமைக்கப் பணம் கொண்டு வந்திருக்கேன். இனிமேல் நான் எதற்கும் அடம்பிடிக்க மாட்டேனப்பா" என்று அவரைக் கட்டியணைத்தாள் அவள். வாயடைத்து நின்றனர் பெற்றோர்கள்.

ஆஷா

## வாத்து!

குள்ளக் குள்ள
வாத்து
குவா குவா
வாத்து
மெல்ல உடலைச்
சாய்த்து
மேலும் கீழும்
பார்த்து
செல்லமாக
நடக்கும்
சின்ன மணி
வாத்து!

சிந்தனைக்கு-
பெற்றோரைப்
புரிந்து நடக்கும்,
பிள்ளைகள்
கிடைப்பது ஒரு
வரம்..

## விடுகதை

01. இரவும் பகலும் ஓய்வில்லை. படுத்தால் எழுப்ப ஆளில்லை. அது என்ன?
02. காய்க்கும், பூக்கும், கலகலக்கும். காகம் இருக்கக் கொப்பில்லை. அது என்ன?
03. ஏற்றி வைத்து அணைத்தால், எரியும் வரை மணக்கும். அது என்ன?
04. வாயிலே தோன்றி, வாயிலே மறையும் பூ. அது என்ன?
05. ஓடுவான், ஆடுவான், ஒற்றைக்காலில் நிற்பான். அவன் யார்?

01. இருதயம், 02. நெல், 03. ஊதுபத்தி, 04. சிரிப்பு, 05.கதவு

## சிறுவர் உலகம்

### என் அம்மா

அம்மா இங்கே
வா! வா!
ஆசை முத்தம்
தா! தா!
இலையில் சோறு
போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற
நல்லார், ஊரில்
யாவர் உள்ளார்?
என்னால் உனக்குத்
தொல்லை
ஏதும் இங்கே
இல்லை
ஐயமின்றி சொல்
லுவேன்
ஒற்றுமை என்றும்
பலமாம்
ஓதும் செயலே
நலமாம்
ஔவை சொன்ன
மொழியாம்
அஃதே எனக்கு
வழியாம்



தரம் - 6A
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ச.கிருஷாந்தினி
தரம் - 4B
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ரவா இட்லி

காலை அல்லது மாலை நேரத்தில் நீங்கள் அவசரத்தில் இருக்கும் பொழுது, உங்களின் உறவினர்களுக்குத் தேவையான உணவைத் தயாரிக்க இந்த ரவா இட்லி உங்களுக்குக் கை கொடுக்கும். இது மிகவும் ஆரோக்கியமானது. சுமார் 10-12 நிமிடங்களில் இந்த இட்லியை தயாரித்துவிட முடியும்.

**தேவையான பொருள்கள்:**

1.ரவை- 1 கப்
2.தயிர் - 1 கப்
3.கொத்தமல்லி இலை- 1 தேக்கரண்டி (நறுக்கியது)
4. உப்பு- தேவையான அளவு
5.எண்ணெய்- 1 தேக்கரண்டி
6.நெய் - 1 தேக்கரண்டி
7.உளுத்தம் பருப்பு- 1 தேக்கரண்டி
8.கடுகு- ட தேக்கரண்டி
9.முந்திரி- 1 மேசைக்கரண்டி (உடைத்தது)
10.சீரகம்- சிறு சிட்டிகை
11.கறிவேப்பிலை- தேவையான அளவு
12.பச்சை மிளகாய்- 4 நறுக்கியது
13.பெருங்காயம்- ஒரு சிட்டிகை

**செயல்முறை:**

ஒரு பெரிய கிண்ணத்தை எடுத்து அதில் ரவா, தயிர் மற்றும் உப்பு சேர்க்கவும். இந்தக் கலவையுடன் தண்ணீர் சேர்த்துக் கட்டிகள் இல்லாமல் கலக்கவும். இட்லி மா பதத்துக்கு வரும் வரை பிசைய வும். அடுப்பை மூட்டிய பின் தாய்ச்சியில் எண்ணெய் மற்றும் வெண்ணெய் சேர்க்கவும். எண்ணெய் சூடான பின்னர் அதில் கடுகு, உளுந்து, கறி வேப்பிலை, முந்திரி, சீரகம் மற்றும் பெருங் காயம் சேர்க்கவும். இவை அனைத்தும் பொன்னிறமாக வரும் வரை வதக்கவும். தாளித்த பொருள்கள் அனைத்தும் தயாரான உடன், இதை மா கலவையில் சேர்த்து நன்கு கலக்கவும். பின்னர் அதில் சிறிது தண்ணீர் தெளித்துக் கலக்கவும். இப்பொழுது மா கலவை நன்கு பொங்கி வர ஆரம்பிக்கும். அதன் பின்னர் மா கலவையை நன்கு கலக்கவும். பின் இட்லி தட்டை எடுத்து அதில் எண்ணெய் தடவி, அதில் இட்லி மாவை ஊற்றி ஆவியில் வேக வைத்து எடுக்கவும். பொதுவாக ரவா இட்லி வேக சுமார் 7-8 நிமி டங்கள் பிடிக்கும். இட்லி வெந்த பின்னர், அதைக் கரண்டியால், எடுத்துத் தட்டில் வைக்கவும். இந்த இட்லியை சாம்பார் மற்றும் தேங்காய் சட்னி உடன் பரிமாறலாம்.



# தூக்கத்தை வரவழைக்க...

தூக்கம் நம் வாழ்வில் ஒரு முக்கிய அங்கம். சரியாக உறங்கவில்லையென்றால், அன்றைய நாளே பாழாகி விடும். தூக்கத்தை வரவழைக்க இதனைக் கடைப்பிடி யுங்கள். தூக்கத்துக்குச் செல்வதற்கு முன் உங்களுக்குத் தேவையான தெல்லாம், வாழைப்பழம் மட்டும்தான். வாழைப்பழத்தில் பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் அதிகளவு இருப்பதால், இவை தூக்கத்தைக் கெடுக்கும் தொந்தரவுகளைக் குறைத்து ஓய்வளிக்கும். இந்த கனிமச் சத்துக்கள் தசைகளுக்கு ஆறுதலளிக்கின்றன. இதோ தூக்கப் பானம். செய்து பருகிப் பாருங்கள்.

**தேவையானவை**

ஒரு இயற்கையாய் கனிந்த வாழைப்பழம்
ஒரு பாத்திரத்தில் தண்ணீர்
சிறிதளவு இலவங்கப் பட்டை

வாழைப்பழத்தை தோலுரித்து அதை பாத்திரத்தில் உள்ள தண் ணீரில் போட்டு பத்து நிமிடத்துக்குக் கொதிக்க விடவும். பின்னர், சிறிதளவு இலவங்கப்பட்டையை அதில் சேர்க்கவும். இதனை வடிக்கட்டி உறங்கச் செல்லும் முன் பருகவும். இது உங்களுக்கு நல்ல ஆறுதல் அளித்து ஒரு நல்ல இரவுத் தூக் கத்துக்கு உதவும்.



# கண்ணழகே கண்ணழகே...

ஒருவரது அழகை அதிகரித்துக் காட்டுவதில் கண்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அத்தகைய கண்களை ஆரோக்கியமாக வும், பிரகாசமாகவும் வைத்துக் கொண்டால் தான், அழகு மேம் பட்டு காணப்படும். கண்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும், கண்களைச் சுற்றியுள்ள அசிங்கமான கரு வளையங்களைப் போக்கவும் பல இயற்கை வழிகள் உள்ளன.

தினமும் இரவில் படுக்கும் முன் 2 துளிகள் விளக்கெண்ணெயை கண்களைச் சுற்றி சிறிது நேரம் மசாஜ் செய்து வர, கண்கள் பிரகாசமாகவும், பளிச்சென்றும் இருக்கும்.

கண்கள் நன்கு பளிச்சென்று தெரிவதற்கு, வாரத்திற்கு ஒரு முறை 2 துளிகள் சுத்தமான தேங்காய் எண்ணெயை கண் களில் விட வேண்டும்.

சிறிது பாதாமை பால் சேர்த்து அரைத்து பசை செய்து, கண்களைச் சுற்றி தடவி வர, கண்களைச் சுற்றியுள்ள அசிங்க மான கருவளையங்கள் நீங்கும். தினமும் கண் பயிற்சிகளை செய்து வருவதன் மூலம், கண் பார்வை மேம்படும்.

தினமும் வெள்ளரிக்காய் துண்டுகளை கண்களின் மீது வைத்து 10 நிமிடம் வரை வைக்க, கண்களில் உள்ள சோர்வு மற்றும் கருவளையங்கள் நீங்கும்.

உருளைக்கிழங்கை துண்டுகளாக்கி கண்களின் மீது வைத்தாலும், கருவளையங்கள் நீங்கும்.



## தேங்காய் எண்ணெய்

அனைத்து வகையான சருமத்துக்கும் தேங்காய் எண்ணெய் சிறந்தது. தோலுக்கு ஈரப்பதத்தையும், பளபளப்பையும் தரவல்லது.



## கரட்

சர்க்கரை நோயாளிகள் அளவோடு சாப்பிட வேண்டும். துருவியும் சாப்பிடலாம். வெதுவெதுப்பான நீரில் போட்டு எடுத்து அப்படியே சாப்பிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துருவங்கள் பதினாறு

இரைச்சல் நிறைந்த பேய்ப்படங்களுக்கு நடுவே ஆர்ப்பாட்டம் இல்லாமல் திகிலூட்ட வந்திருக்கிறது 'துருவங்கள் பதினாறு'. இருக்கையை விட்டுப் பார்வையாளர்கள் நகர முடியாதபடி மர்மத் திரைக்கதையைக் கச்சிதமாகப் படைத்திருக்கிறார் புதுமுக இயக்குநர் கார்த்திக் நரேன்.

தீபக் (ரஹ்மான்) முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர். ஐ.பி.எஸ். அதிகாரி ஆவதை இலட்சியமாகக் கொண்ட ஒரு இளைஞர் இவரைச் சந்திக்க வருகிறார். தான் கையாண்ட ஒரு கொலை வழக்கை அவரிடம் விவரிக்கிறார் தீபக். பின் கதையாக விரியும் கதையில் ஒரு தற்கொலை நிகழ்ந்ததாக செய்தி வருகிறது. பின்னர் விசாரணையில், அது கொலை என்பது தெரியவருகிறது. அந்தக் கொலை சம்பந்தமான விசாரணையில் அதைச் சுற்றிலும் பல குற்றங்கள் ஆங்காங்கே நடந்திருப்பதும் கட்டவிழ்கிறது. ஒவ்வொருவரும் தத்தமது பார்வையில் யார் கொலையாளி? என ஊகிக்கிறார்கள். தீபக்கும் அவரது உதவியாளர் கௌவுதமும் கிட்டத்தட்ட கொலையாளியை நெருங்கிவிடும் நேரத்தில் நடக்கும் ஒரு திருப்பம் அவர்களது வாழ்க்கையையே புரட்டிப் போடுகிறது. அது என்ன என்பதுதான் கதை.



பொதுவாக, துப்பறியும் கதை என்றாலே கதாநாயகன் அதிபுத்திசாலியாகவே செயல்படுவார். ஆனால் இங்கு முதன்மைக் கதாபாத்திரங்களான தீபக்கும் கௌதமும் ஆங்காங்கே கோட்டை விடுகின்றனர். தீபக் கைபேசியின் பற்றரிக்கு மின் ஏற்ற மறந்துவிடுவது, கௌதம் தொப்பியை மறந்துவிடுவது, தீபக் வீட்டின் முகவரி தெரியாமலேயே அவசரக்குடுக்கையாக "ஓகே, வீட்டுக்கு வந்துடுறேன் சேர்" எனச் சொல்லிக் கைபேசி அழைப்பைக் கௌதம் துண்டிப்பது போன்ற காட்சிகளில், திறமையான காவல்துறை அதிகாரிகளும் சொதப்பக்கூடியவர்களே எனக் காட்டப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் அவர்கள் இருவரும், கிடைத்த துப்புகளை புத்திசாலித்தனமாக ஒன்றோடு ஒன்று கோர்த்து கொலையாளியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள்.

ஒவ்வொரு விவரமும் முக்கியம் என்கிறது படத்தின் துணைத் தலைப்பு. அதற்கு ஏற்ப, படத்தில் விசாரணை நடத்தப்படும் விதமும் பொலிஸ் நிலையத்துக்குள் நிகழும் சின்னச் சின்னச் சம்பவங்களும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எளிமையான கதையை முன்னும் பின்னுமாகக் கலைத்துப்போட்டுப் புத்திக்கூர்மையோடு திரைக்கதையாக மாற்றியிருக்கிறார் கார்த்திக் நரேன். பாத்திரங்களின் பார்வையில் கதை விரிவதால் இது குழப்புவதற்காக மெனெக்கெட்டுச் செய்ததுபோல அல்லாமல், இயல்பாகவே இருக்கிறது. தொடக்கத்தில் இருந்து பார்த்தால் மட்டுமே கதை புரியும் எனும் அளவுக்குத் துல்லியமாக வேலைபார்த்திருக்கிறார்.

புலனாய்வாளரின் 'இன்ஸ்டிங்க்ட்' சமாச்சாரம் படம் முழுக்க உலவுவது கொஞ்சம் ஓவர். எல்லாத் துப்புகளும் அடுத்தடுத்து வரிசைகட்டுவதும் திரைக்கதை எடுத்துக்கொள்ளும் சலுகையாகவே தோன்றுகிறது. விபத்து, கொலை, தப்பி ஓட்டம் என்று பலர் நடமாடும் அந்த இரவில் யார், என்ன, ஏன் என்பதெல்லாம் தெளிவாக இல்லை.

துப்பறியும் கதை என்பதால் அனுபவமில்லாத நடிகர்களின் மிகையான நடிப்போ, அசட்டுத்தனமான ரியாக்‌ஷனோ திகிலுக்குப் பதிலாக எரிச்சல் ஏற்படுத்தி விடும். ஆனால், அனைத்துப் புதுமுகங்களும் கதைக்கு ஏற்றபடி நடித்திருப்பதும் இயக்குநர் அதைத் திறம்படக் காட்சிப்படுத்தியிருப்பதும் சிறப்பு.

கௌதமாக நடித்திருக்கும் பிரகாஷின் நடிப்பும் அவரது கதாபாத்திரமும் சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களின் மனநிலையை அழகாகப் பிரதிபலிக்கின்றன. தேர்ந்த நடிகர் என்று நிரூபித்திருக்கிறார் ரஹ்மான்.

இருளையும் ஒளியையும் அளவாகப் பாய்ச்சிப் பயமுறுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் சுஜித் சாரங். வெறும் சத்தமாகக் காதில் அறையாமல் திகிலூட்டும் ஒலிகளைக் கோர்த்திருக்கிறார் இசையமைப்பாளர் ஜேக்ஸ் பிஜாய்.

வலுவான புலனாய்வுக் கதை, கச்சிதமான திரைக்கதை, நேர்த்தியான படமாக்கம், மர்மக் கதைக்கேற்ற ஒளிப்பதிவு, இசை ஆகியவற்றுடன் மிரட்டுகிறது இளைஞர் கார்த்திக் நரேனின் 'துருவங்கள் பதினாறு'.

## பாராட்டத்தக்க படம்!

## இயற்கை எனது நண்பன்

வரமே! வரமே! தாவரமே.
நீ தருகின்றாய் நீர் வரமே!

இயற்கைத் தாயின்
கரம் பிடிக்கும்
பிள்ளை நீயே தாவரமே.

இயற்கை எனது
நண்பர் என்றார்.
இயற்கையோடு
வாழ்ந்திரு என்றார்.

இன மானத்தைக்
காத்தவரும்
வன வளத்தைக்
காத்தனரே

பட்ட மரமே
'படும்' என்பார்
படவே இங்கு மரமில்லை
மரம் வெட்டும்
மனத்தை நிறுத்தி விட்டால்
கொட்டும் மழையைக்
கூப்பிடலாம்.

வீட்டுக்கு வீடு
மரம் காப்போம்.
நாட்டுக்கு நாடு
மரம் வைப்போம்.

மரத்தை வாழ்த்தி
நிற்போமே மனிதம்
வளர்த்துக் கொள்வோமே.

-நாவண்ணா

## கானல் நினைவுகள்




நித்தம் என் கனவுகளில்
உன் நேசத் தீண்டல்களில்
சிலிர்க்கிறேன் நான்...
நெஞ்சோடு ஏக்கம் தந்து

நெற்றியில் முத்தமிட்டு
உதடுகளைச் சருகாக்கி
உள்ளத்தைப் பந்தாக்கி
காதல் கனவுகளாய்
கானல் நினைவுகளாய்
கலைந்து போகிறாய்
ஏனோ...?

எஸ்.தர்சி
சுண்டுக்குளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமின்றி



கல்வித் துறையில் நடக்கும் மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நேர்மையான அதிகாரி ஒருவர் கொல்லப்படுகிறார். தனியார் பாடசாலையைச் சேர்ந்த ஒரு மாணவனும் அவனுடைய அக்காவும் மர்மமான முறையில் சாவடைகிறார்கள். கொலைகளை ஆராயும் காவல் துறை அதிகாரி சமுத்திரக்கனிக்குக் காவல் துறையிலிருந்தே ஆபத்து வருகிறது. ஒரு வில்லனிடமிருந்து தற்செயலாக பேர்ஸைத் திருடும் விஜய் வசந்த், அதிலிருக்கும் பொருள் காரணமாக ஆபத்தில் சிக்கிக்கொள்கிறார். தனது வீட்டில் வேலை செய்யும் பெண்ணுடைய மகளின் கல்விக்கு உதவப்போய் சிருஷ்டி டாங்கே சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்.

சங்கிலித் தொடர்போல நீளும் இந்தச் சிக்கல்களுக்குக் காரணம் என்ன? இதில் கல்வித் துறைக்கும் அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் என்ன பங்கு? சமுத்திரக்கனியும் விஜய் வசந்தும் சேர்ந்து எடுக்கும் முயற்சிகளால் இந்தக் கும்பலைக் கட்டுப்படுத்த முடிந்ததா?

கல்வித் துறையில் நடக்கும் மோசடிகளையும் அவலங்களையும் மையமாகக் கொண்டு 'அச்சமின்றி' என்னும் படத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் ப.ராஜபாண்டி. தனியார் பாடசாலைகளின் பண வெறி, அரச பாடசாலைகளில் காட்டப்படும் அலட்சியம் ஆகியவற்றைத் துணிச் சலாகப் பேசுகிறார். பல்வேறு பாத்திரங்கள், கிளைக் கதைகள், திருப்பங்கள் ஆகியவற்றுடன் சுவாரஸ்யமாகப் படமாக்கியிருக்கிறார்.

கல்வித் துறை அதிகாரியின் கொலையின் மூலம் எடுத்த எடுப்பில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் இயக்குநர், கல்வி அமைச்சர் தொடர்பான காட்சிகள் மூலம் அந்த எதிர்பார்ப்பைக் கூட்டுகிறார். ஆனால், விஜய் வசந்த் தொடர்பான ஆரம்பக் காட்சிகள் நகைச்சுவை என்னும் பெயரால் பொறுமையைச் சோதித்துப் படத்தின் ஓட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றன.

ஒரு வழியாக அதிலிருந்து மீண்டு அடுத்தடுத்த கொலைகள், துரத்தல்கள், கல்வித் துறைப் பிரச்சினைகள் என்று படம் வேகமெடுக்கிறது. கொலைகளுக்கான பின்னணி குறித்த எதிர்பார்ப்புக்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் முன் வைக்கப்படும் வாதங்கள் கல்வித் துறை சார்ந்த பிரச்சினைகளின் பல்வேறு கோணங்களை எடுத்துரைக்கின்றன.

நாயகனுக்கான அறிமுகப் பாடல்கள், கதையின் ஓட்டத்தை நிறுத்தக் கூடிய டூயட் பாடல்கள் ஆகியவை படத்தைப் பலவீனப்படுத்துகின்றன. இதுவரை அப்பாவி அம்மாவாகவே திரையில் தோன்றிவந்திருந்த சரண்யாவை மிடுக்கான பாட சாலை முதல்வராகவும் ஈவிரக்கமற்ற பண முதலையாகவும் சித்திரித்திருக்கும் வித்தியாசம் கவனம் ஈர்க்கிறது. கல்வி அமைச்சரின் பாத்திரத்தின் மீது படம் முழுவதும் சந்தேகத்தின் நிழலைப் படியவிடுவது சுவாரஸ்யம் கூட்ட உதவினாலும் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை.

தனியார் பாடசாலைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் இடையே கூட்டு இருப்பதாகக் காட்டப்படுகிறது. தனியார் பாடசாலைகளின் போக்கும் பயங்கரமானதாகச் சித்திரிக்கப்படுகிறது. ஆனால், படத்தில் அது நம்பகத்தன்மை கொண்ட பக்குவமான சித்திரிப்பாக வெளிப்படவில்லை. வில்லன் கோஷ்டியைப் படுபயங்கரமாகக் காட்டும் மசாலாப் படங்களின் அணுகுமுறைதான் இங்கும் தெரிகிறது.

சரண்யாவின் நடிப்பு பாத்திரத்துக்கு மெருகேற்றுகிறது. வன்மத்தை மறைத்துக்கொண்டு இன்முகம் காட்டுவது, தேவைப்படும்போது சீறி எழுவது, நீதி மன்றத்தில் பதற்றப்படாமல் தன் நியாயத்தை முன்வைப்பது என்று சரண்யா வித்தியாசமாக முத்திரை பதிக்கிறார். ராதாரவியின் முதிர்ச்சியான நடிப்பும் அனுபவமும் அவர் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கின்றன. விறைப்பான காவல்துறை அதிகாரி என்பது சமுத்திரக்கனிக்குப் பழக்கமான வேடம் தான். அந்த விறைப்பைக் காதலில் சற்றே நெகிழவைத்து வித்தியாசம் காட்டுகிறார் இயக்குநர். நகைச்சுவை, சண்டை, காதல் எல்லாம் இருந்தாலும் விஜய் வசந்தின் பாத்திரம் ஓரளவு இயல்பானதுதான். எதிலும் மிகையாகச் செய்யாமல் அடக்கி வாசித்துப் பார்வையாளர்கள் மனதில் நிற்கிறார்.





அநாவசியமாக, வழக்கமான பெண்ணாக வந்து, பிறகு சற்றே தீவிர முகம் காட்டும் வேடத்தில் சிருஷ்டி டாங்கே கவனிக்கவைக்கிறார். பிரேம்ஜி அமரனின் பின்னணி இசை காதுகளைப் பதம்பார்க்கிறது. ஏ.வெங்கடேஷின் ஒளிப்பதிவில் துரத்தல் காட்சிகளும் சண்டைக் காட்சிகளும் நன்கு படமாக்கப்பட்டுள்ளன. சமகாலத்திலுள்ள முக்கியமானதொரு பிரச்சினையை அழுத்தமாகப் பேசு வதுடன் அதைச் சுவையான கதையாகவும் சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

கதைக்குத் தேவையற்ற காட்சிகளைத் தயக்கமின்றி நறுக்கியிருந் தால் படத்தின் வலிமை இன்னும் கூடியிருக்கும்.



# நினைந்தினி அஞ்சலிப்போம்!

உடனிருந்த உறவுகளின்
உயிர்பிரிந்த பொழுதுகளில்
உணர்வுகளின் தெப்பத்திலே
உணர்வேந்தி அஞ்சலிப்போம்!

அடிமையின் தளையறுக்க
அருமை [illegible]
கொடிய[illegible]

கொடுத்தோரை நினைத்திடுவோம்!
விடியல் வருகுதென்று
விழிகளில் விளக்குவைத்து
மடிந்திடும் பொழுதினிலும்
மறவராய் வீழ்ந்துயர்ந்தீர்!

வாக்கிலே வாழ்வமைத்த
வள்ளல்கள் பாதம் பணிவோம்!
புதைந்துமே நிமிர்ந்திருக்கும்


புரட்சியின் புதுமைகளை
நினைந்தினி அஞ்சலிப்போம்
நிதர்சனம் புரிந்திருப்போம்!

சூரியநிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குதான் போய்விடுவார்?



கண்ணுக்குள்புதைந்து,உயிருக்குள்நிறைந்து, மனதுக்குள் ஓவியம் வரைந்துகொண்டிருக்கும் அற்புத தூரிகை காதல். ஊடல்- அதன்பின் வரும் கூடல் இன்னும் இந்தக் காதலுக்கு வலுச்சேர்க்கிறது. ஆனால், பிரிவு கொடிய நோயை வரவழைக்கிறது. இத்தகைய பிரிவெனும் நோயினால் தவிக்கிறாள் இந்தத் தலைவி. தன்னைப் பிரிந்து சென்ற தலைவன், எங்குதான் போயிருப்பான் என்று அவள் ஏங்குகிறாள். அவளது ஏக்கத்தை இவ்வாறு அழகாகச் சொற்சித்திரம் ஆக்கியுள்ளது குறுந்தொகை.

நிலம்தொட்டுப் புகார் வானம் ஏறார்
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்
நாட்டின்-நாட்டின் -ஊரின்-ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநம் காத லோரே!

(குறுந்தொகை:130– வெள்ளிவீதியார்)

நிலத்தைத் தோண்டி, அதனுள் சென்றிருக்கமாட்டார். வானத்து மேலேறியும் சென்றிருக்க வாய்ப்பில்லை.

நிலத்தில் குறுக்காகக் கிடக்கும் பெரிய கடலைக் காலால் நடந்து எங்கேனும் சென்றிருக்கத்தான் முடியுமா? ஆனால், அவர் எங்கேயோ இருக்கிறார். நான், அவரைத் தேடுவேன்- உலகிலுள்ள ஒவ்வொரு நாடாக...அந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு ஊர்களாக... அவ்வூர்களில் உள்ள ஒவ்வொரு குடியாக... இப்படித் தேடினால் கிடைக்காமலா போய்விடுவார்?- என்று ஆதங்கப்படுகிறாள்.

அணுக்களுள் நுழைந்து, அண்டசராசரங்களில் புகுந்து காதலனை அல்லது காதலியைத் தேடும் சக்தி- காதலுக்குத்தான் உண்டு. அதனை காதல் நயத்துடன்- இலக்கிய நயத்துடன் கூறுகிறது இப்பாடல்.

அராலியூர் நிலா



**நூல்- தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி**

**ஆசிரியர்- ஐ.தி. சம்பந்தன்**
**வெளியீடு- சுடரொளி வெளியீட்டுக் கழகம்**
**விலை- 350 ரூபா**

**இனத்துவப் போரின் இன்னொரு ஆவணம்**

இலங்கையில் இடம்பெற்ற இனத்துவப் போரில் அரச ஊழியர்களும் பெரும் பாதிப்பைச் சந்தித்தனர் என்ற செய்தியை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துகிறது, தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எனும் புத்தகம். ஒரு காலத்தில், அரச ஊழியர்களாலேயே இன உரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது இலங்கையைத் தவிர வேறெந்த நாட்டிலும் இல்லாத சரித்திரம். 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜூலைக் கலவரம் என்பனவெல்லாம் அரச ஊழியர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கின. தமிழ் அரச ஊழியர்களின் அவலங்களையும் அவர்கள் இன ரீதியாக ஒதுக்கப்படுவதையும் எதிர்த்துப் போராடுவதற்கு மொழிவழித் தொழிற்சங்கங்களுடன் இணைந்தவர். இவரும் ஒரு அரச ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது.



**நூல்- அதிசயத் தீவினில் ஆனந்தன் (சிறுவர்களுக்கான நவீனம்)**
**ஆசிரியர்- கலாபூசணம் செல்லையா குமாரசாமி**
**வெளியீடு- கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், தென்மராட்சி.**
**விலை- 150 ரூபா**

**சிறார்களின் சிந்தனைக்கு சிறகாகும் புத்தகம்**

கதை கேட்க விரும்பாத சிறுவர்களே இல்லை. முன்பெல்லாம் அம்மா முதல் பாட்டி வரை நல்ல பல கதைகள் கூறிப் பிள்ளைகளை நெறிப்படுத்தினர். ஆனால், இன்று சொல்வோரும்-கேட்போரும் இல்லாது கதைகள் உறங்கிக் கிடக்கின்றன வீடுகளில். இந்நிலையில், பிள்ளைகள் தாமே வாசித்துப் புரிந்துகொள்ளக்கூடிய கதைகள் வெளிவருவது ஆரோக்கியம் பயக்கிறது. அந்தவரிசையில், சிறார்களின் சிந்தனைக்குச் சிறகாக அமைந்துள்ளது- அதிசயத் தீவினில் ஆனந்தன் என்ற நவீனம். கதை சொல்லியாக ஆசிரியரே இருந்து, அழகாகச் சிறார்களை அதிசயத் தீவுக்கு அழைத்துச் செல்கிறார். பொருத்தமான அட்டைப்படம். பிள்ளைகளுக்குப் புரியக்கூடிய மொழிநடை. இவையெல்லாம் நூலுக்குச் சிறப்பளிக்கின்றன. கலாபூசணம் செல்லையா குமாரசாமி, நாடறிந்த இலக்கிய கர்த்தா. நாவல்கள், நாடகங்கள், சிறுவர்களுக்கான கவிதைகள் படைத்து இலக்கிய உலகுக்கு வளம் சேர்த்தவர். அவரது எழுத்துலகம் சிறக்க வாழ்த்துக்கள்.





**நூல்- ஒருபிடி மண் (சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்- மல்லாவிக் கஜன்**
**வெளியீடு- கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், துணுக்காய்.**
**விலை- 220 ரூபா**

**ஈழத்து மண்வாசனை பேசும் கதைகள்**

போருக்குப் பின்னரான ஈழத்து இலக்கியத் தடத்தில் அளவுக்கதிகமாக வெளிவந்துகொண்டிருக்கும் கவித்தொகுப்பு நூல்களுக்கு மத்தியில், ஒருபிடி மண் சிறுகதைத் தொகுப்பு வெளியாகிப் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. புல்லாங்குழல் ஊமையானது, கூடு, தேர்வு, கனவுடனே, பெற்ற மனம் பித்து, கானல் கனவுகள், இறுதிக்கடன், ஒருபிடி மண், தொலையாத கனவுகள், தொலைவு ஆகிய 10 கதைகளைச் சுமந்துள்ளது இந்நூல். போர், அது தந்த வலிகள், வாழ்வியல் என யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன கதைகள். தலைப்புக்கேற்ற அட்டைப்படம் நூலுக்கு இன்னும் கனதி சேர்க்கிறது.

ஈழத்தின் வளர்முக எழுத்தாளர்களுள் மல்லாவிக் கஜனும் ஒருவர். இவர் அரச சேவகன். சிறந்த ஓவியன். அவரது கலையுலகம் மேலும் மலர, வாழ்த்துக்கள்.

தொகுப்பு :-
எஸ். மல்லி

அன்பார்ந்த எழுத்தா கனே! நூல் அறிமுகத்தில் உங்களின் நூல்களும் இடம்பெ வேண்டுமாயின், புத்தகத்தின் இரண்டு பிரதிகளை ஆசிரியர், நூல் அறிமுகம்,
**உதயன் பத்திரிகை,**
**இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் மு கவரிக்கு அனுப்பி வைக்கவும்.



## நூல் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோலங்கள்

அதிகாலை வேளையிலேயே பெண்கள் துயில் எழுந்து வீட்டின் வாசலில், தினமும் கோலம் போடுவதால், அந்த வீட்டில் சுபநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடப்பதற்குக் குறைவே இருக்காது. நன்மைகள் யாவும் எளிதாக அவர்களின் இல்லம் தேடி வந்தடையும். அதுவும் குறிப்பாக மார்கழி மாதத்தில் வீட்டுவாசலில் அழகழகான கோலம் போடுவதை முக்கிய கடமையாகவே நம் முன்னோர்கள் வலியுறுத்தினார்கள்.

**மருத்துவ குணமுள்ள காற்று**

மார்கழி மாதப் பனிக்காற்று உடம்பெல்லாம் குளிர்ந்தாலும், உடலுக்கு ஆரோக்கியமானது மட்டுமல்ல மருத்துவகுணமும் மிக்கது என்கிறது மருத்துவ உலகம். மார்கழி அதிகாலையில் வானமண்டலத்தில் பூமியை ஒட்டிய காற்று மண்டலத்தில் O3 என்று விஞ்ஞானிகள் குறிப்பிடும் தூய ஒட்சிசன் அடர்த்தியாக வியாபித்து இருக்கும். அந்த நேரத்தில் வீட்டு வாசலில் கோலம் போடுவதால், தூய ஒட்சிசன் நிரம்பிய காற்றை சுவாசிக்க முடிகிறது. அதனால்தான் நம் முன்னோர்கள், மார்கழி அதிகாலையில் வீட்டு வாசலில் கோலம் போடும் பழக்கத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். மார்கழி மாதத்தில் எல்லாக் கோயில்களும் அதிகாலைவேளையிலேயே திறக்கப்பட்டு, தெய்வ வழிபாடுகளும் நாம சங்கீர்த்தனங்களும் நடந்துகொண்டிருக்கும். இதேபோல் வீடுகளையும் தூய்மைப்படுத்தி, வீட்டு வாசலில் கோலமிட்டால் லட்சுமி கடாட்சம் அந்த வீட்டுக்கு தானாக வந்து விடும். மார்கழியை அடுத்து வருகிற தை மாதம், அந்தக் குடும்பத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் அப்படி சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்போது தடைகள் ஏற்படாமல் இருக்க, ஸ்ரீமகாலஷ்மி அருள்புரிவாள் என்பதும் ஐதீகம்.

**மும்மூர்த்திகளின் அருளாசி**

மார்கழி மாதம் என்று மட்டுமல்லாமல் வருடத்தின் எல்லா நாள்களிலும் கோலம் போடும் போது, மும்மூர்த்திகளின் அருளாசி அந்த இல்லத்துக்கு நிச்சயம் கிடைக்கும். கோலமாவின் நிறம் வெண்மை. இது மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவை அழைக்கிறது. கோலம் போட்டபிறகு அந்தக் கோலத்தைச் சுற்றி காவி நிறமான செம்மை நிறத்தை வரையும்போது அது சிவபெருமானை அழைக்கிறது. கோலம் போட்டு முடித்தபிறகு அந்த கோலத்துக்கு அழகு சேர்ப்பதற்காக பசுஞ்சாணத்தை வைத்து அதில் மஞ்சள் நிறத்தில் பூசணிப்பூவை வைப்பார்கள். பசுவின் சாணம் ஸ்ரீமகாலஷ்மியைக் குறிப்பிடுவதால், ஸ்ரீமகாவிஷ்ணுவையும் அந்த இல்லத்துக்கு வரவேண்டுமென அழைக்கிறது. இப்படி மும்மூர்த்திகளின் அருளாசியும் நமக்குக் கிடைக்கிறது.

**இரட்டைக்கோடுகள்**

கோலம் போடும் போது இரட்டைக்கோடுகளாகக் கோலம் போடவேண்டும். ஒரு கோடு மட்டும் வரைந்து கோலம் போடுவது அசுபகாரியங்களுக்குத்தான் என்கிறது சாஸ்திரம். தெற்குத் திசை பார்த்தபடி கோலத்தை ஆரம்பிக்கவும் கூடாது முடிக்கவும் கூடாது. பொதுவாக, தெய்வங்களின் சின்னங்களை வீட்டின் வாசலில் கோலமாகப் போடக்கூடாது. காரணம், அந்தக் கோலங்களை யாராவது தெரியாமல் மிதித்துவிட்டாலும் பாவம் சேரும். அந்த இல்லத்தில் இருப்பவர்களுக்கும் தோசம் ஏற்படும்.

இறைவனின் சக்கர சின்னங்களை பூஜைஅறையில் மட்டும்தான் கோலமாகப் போட வேண்டும். வாசலில் போடக்கூடாது. வெள்ளிகிழமையிலும் பௌர்ணமி தினங்களிலும், தாமரைப்பூ கோலம் போட்டால், ஸ்ரீலஷ்மி கடாட்சம் கிடைக்கும். 'குழந்தை பாக்கியம் இல்லாதவர்களின் வீட்டில் தினமும் அழகழகான கோலம் போடுங்கள், அந்தக் கோலத்தைக் கலைத்து விளையாட ஒரு மழலை பிறக்கும்' என்பது நம் முன்னோர் வாக்கு.

**பண்பாடு**

தமிழர்களது பண்பாட்டில் ஒன்றான கோலம் பல்வேறு வகையாக வரையப்படுகின்றது. மாக்கோலம் (அரிசி மாவு), புள்ளிக் கோலம், இழைக் கோலம், சிக்குக்கோலம், அங்கக்கோலம், மணற்கோலம், வெள்ளைக்கல் மாவுக்கோலம், பூக்கோலம், பயறுக்கோலம் மற்றும் ரங்கோலி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கோலத்தை எடுப்பாகக் காட்டுவதற்கு காவி நிறத்தையும் பயன்படுத்துவார்கள்.

# பெண் குழந்தைகளிடம் பெற்றோர் சொல்லவேண்டிய, சொல்லக்கூடாத விடயங்கள்

**சொல்லிக் கொடுக்க வேண்டிய விடயங்கள்!**

- தன்னை எல்லாச் சூழல்களிலும் தானே பார்த்துக்கொள்ள, தற்காத்துக் கொள்ளத் தேவையான அடிப்படை விடயங்களை நிச்சயம் சொல்லிக்கொடுக்க வேண்டும்.
- எடுத்த எடுப்பிலேயே ஒருவர் மீது அளவுகடந்த நம்பிக்கை காட்டுவதோ அல்லது வெறுப்பைக் காட்டுவதோ கூடாது, மற்றவர்களிடம் இருக்கும் குறைகளைவிடவும், நல்ல விடயங்களை முதன்மையாக எடுத்துக் கொண்டு, எவருடைய மனதும் புண்படும்படி நடந்துக்கொள்ளக் கூடாது என்பதைப் புரியவைக்க வேண்டும்.
- நியாயமான முறையில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான ஆற்றலும், மனநிலையும் உருவாகும் படி அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும். பெண் குழந்தையின் ஒவ்வொரு நல்ல முயற்சியையும் மனதாரப் பாராட்டி ஊக்கப்படுத்த வேண்டும்.
- பலதரப்பட்ட சூழல்களையும் சந்திக்க வேண்டிய இந்த உலகில், புதிய மனிதர்களிடம் எளிதாகப் பழகுவது, அதே சமயம் தன் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வழிமுறைகளை ஏற்படுத்திக்கொள்வது பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பள்ளி, கல்லூரி, வேலை, திருமணம் என பல புதிய சூழல்களை அடுத்தடுத்துச் சந்திக்கும் பெண்கள், அவற்றைத் தயக்கமின்றி எதிர்கொள்வதுடன், தங்கள் திறமைகளைப் பலரும் பாராட்டும் வகையிலும் வெளிப்படுத்துவார்கள்.

**சொல்லக்கூடாத விடயங்கள்!**


- பெண் குழந்தைகளுக்கு அச்சம் தரும, அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் வகையிலான செயல்களை சொல்வதோ, செய்வதோ கூடாது.
- ஆண் குழந்தைக்கு, பெண் குழந்தையைவிட அதிக முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஆண் குழந்தை பிறந்த உடன், மூத்த பெண் குழந்தை மீது கவனம் குறைந்துபோகும் சூழலுக்கு இடம் தரக் கூடாது. ஆணும் பெண்ணும் சரிசமம் என்பதை வாய் வார்த்தையாகச் சொல்லாமல், அதனை அவர்களே உணரும் வகையில் பெற்றோர்களின் வளர்ப்பு இருக்க வேண்டும். மேலும், மூத்த பெண் குழந்தை அதிக பொறுப்புடன், விட்டுக்கொடுத்துப் போகவேண்டும், வீட்டில் வேலைகள் செய்ய வேண்டும் என்றெல்லாம் கூறி, அந்தச் சிறுமிக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- "எதிர்த்துப் பேசாமல் நான் சொல்வதை மட்டும் கேள்" என்று பெண் குழந்தைகளிடம் அதிகாரம் செலுத்தாமல், ஒரு செயலால் விளையும் நன்மை, தீமைகளை அவர்களுக்கு அன்புடன் புரியும்படியாக சொல்லிக் கொடுக்க வேண்டும். மேலும், எப்போதும் பெண் குழந்தைகளைக் கண்காணித்தபடியே இருந்தால், அவர்கள் புதிய முயற்சிகளை மேற்கொள்ள மாட்டார்கள். இதனால் அவர்களின் தனித்திறமைகள் வெளியே தெரியாமலும், சுய சிந்தனை வளராமலும் போகலாம். எனவே, அவர்களை சுதந்திரமாகச் சிந்திக்க, செயற்படவிடவேண்டும்.
- ஆண் குழந்தை அழுதால் தவறு எனச் சொல்பவர்கள், பெண் குழந்தைக்கு அதையே அடையாளமாக, அவர்களின் ஆயுதமாக கைகொள்ளும்படி அவர்களை வளர்ப்பது தவறு. 'அழுகையால் எந்தக் காரியமும் முடியாது. திறமையும், தைரியமும், முயற்சியும் மட்டுமே நீ வேண்டுவதைத் பெற்றுத் தரும்' என்று சொல்லி வளர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திரை தகுமா?

மிருசுவில் தமிழ்தாசன்



"எட கனகசபை! நீயென்ன எங்கடை பெரியண்ணையை ஏதோ இலேசுப்பட்ட ஆளாயே நினைக்கிறாய். எட! அந்த மனிச்ன் மூண்டு வயதிலை உமையம்மையாரை வளைச்சுப் பிடிச்சு அவவிட்டை ஞானப்பால் வாங்கிக் குடிச்சுத் தேவாரமும் பாடினவர். திரு ஞான சம்மந்த சிவம் எண்டால் உல கத்திலை தெரியாத மனிசரேயில்லை."

"இன்னும் கொஞ்சம் குழம்பிலை ஊத்திச் சாப்பிடுங்கோ பெரியண்ணை!"

கட்டிய மனைவிக்கு நிகராக நின்று பரிவுடன் விருந்தோம்பினான் சண்முகம்.

"எட எட! போதுமடாப்பா! காணும் விடு! வயிறு முட்டச் சாப்பிட்டாச்சு. காணும் விடு!"

குழம்புக் கரண்டியுடன் நின்ற சண்முகத்தின் கையைத் தடுத்து விட்டு எழுந்து விடத் தயாரானார் பெரியண்ணை.

பெரியண்ணையின் இயற் பெயர் திருஞானசம்பந்த சிவம். ஆனால் ஊரவர்கள் இவரைப் பெரியண்ணையென்றே செல்லமாக அழைப்பர். வயதாலும், அறிவாலும், ஆற்றலினாலும் இவர் பெரியதொரு தகுதியிலேயே விளங்கினார்; அது தான் போலும் இப்படியொரு காரணப் பெயரைப் பெற்றிருந்தார்.

இன்றிரவு கொழும்புக்குப் பயணமாக இருக்கின்றார் பெரியண்ணர். அங்கே ஒரு பெரிய நிறுவனத்தில் அதிகாரம் கொண்ட மிகப் பெரிய பதவிகிடைத்திருக்கின்றது. நீண்ட நாள்களாக அவரும் அவருடைய ஊரவர்களும் எதிர்பார்த்திருந்த இந்தப் பதவி இப்போதாவது கிடைத்து விட்டதில் அனைவருக்கும் உள்ளூர மகிழ்ச்சியே. இந்தச் சந்தோசத்தைக் கொண்டாடவும் அவரை வழியனுப்பி வைப்பதற்காகவுமே இப்படியொரு தடல்புடலான விருந்தை ஊரவர்களனைவரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

நன்றாகக் கொழுத்த ஊர்ச் சேவல்! அதைப் பிடிப்பதற்கு சண்முகம் பட்ட கஷ்டம் அவனுக்குத் தான் தெரியும். வீட்டுக் கோடியைச் சுற்றிச் சுற்றி ஓடிய சேவலை அவனும் மனைவியுமாகக் கலைத்துப்பிடித்து அதை அடித்து உரித்துக் கறியாக்குவதற்குள் சண்முகத்துக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. குடத்தனைக் கடற்கரையிலிருந்து துடிக்கத்துடிக்க பொன்ராசன் கொண்டு வந்த சினை பிடித்த விளை மீன் இதனையும் குருதி சொட்டச் சொட்ட அறுத்து மிகக் காரசாரமாகவும் சுவையாகவும் அருமையானதொரு குழம்பைச் சமைத்திருந்தான். இத்தோடு விடவில்லை கந்தவனத்தாரின் தோட்டத்தில் மருந்து தெளிக்காத பாகற்காய், பயற்றங்காய், கீரை என்று அனைத்தையும் வாங்கிவந்து அருமையான சமையலொன்றைச் செய்திருந்தான் சண்முகம். சமையற்கலையில் அவனை ஒரு விற்பன்னர் என்று துணிந்து கூறலாம்.

இத்தனை சிரமப்பட்டுச் சமைத்து மிக அருமையானதொரு விருந்து பரிமாறிவிட்டதில் சண்முகம் உட்பட விருந்துக்கு வந்திருந்த அத்தனை ஊரவர்களுக்கும் பெருமையாகவும் திருப்தியாகவுமிருந்தது.

பெரியண்ணர் பதவியேற்கவிருக்கும் நிறுவனம் எவருக்கும் சொந்தமில்லாத ஒன்று. பார்க்கப் போனால் பெரியண்ணர் பகுதிக்கும் அதில் பங்குரிமை இருக்கின்றது. ஆனால் அந்த உரிமை இதுவரை கொடுபடாது இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தான் பெரியண்ணரான திருஞானசம்பந்த சிவத்தாருக்கு அங்கே மிகப் பெரிய பதவியொன்று எப்படியோ கிடைத்து விட்டது. இனி அவருடைய பங்குரிமையைக் கேட்டுப் பெற்றுக்கொள்வது அத்தனை சிரமமாகவிருக்காது என்பது ஒட்டு மொத்த ஊரவர்களின் நம்பிக்கை. நம்பிக்கைகளை வளர்த்து வளர்த்து கடந்த காலங்களில் ஏமாந்து போன கசப்பான அனுபவங்களும் இல்லாமல் இல்லை. இருந்தாலும் அவைகள் எல்லாம் அழிக்க முடியாத அனுபவங்களென்பதையும் மறக்க முடியாது என்பதும் உண்மையானதே!

ஒருகாலத்தில் அந்தப் 'பண்டாரக்' கிழவன் இந்த நிறுவனம் தங்களுக்கே சொந்தமானதென வெறியாட்டம் ஆடிவிட்டுப் போய்ச் சேர, அவரின் சம்சாரம் வந்து ஏதோ சீனடி சிலம்படி விளையாடிப் போட்டு ஒதுங்கிக் கொள்ள.. இப்பிடியே எல்லோரும் வந்து தங்கள் தங்களுடைய வீரப்பிரதாபங்களைக் காட்டி விட்டுப் போய் விட்டனர். இப்பொழுது விக்கிரமாதித்தன் வந்திருக்கின்றார். வந்த கையுடன் திருஞானசம்பந்தன் சிவத்தை அழைத்திருக்கின்றார் பதவி கொடுப்பதற்காக. அத்துடன் பங்குரிமையையும் பெற்றுக் கொள்ள வேண்டியது தான். அது இந்தப் பெரியண்ணரின் கைகளில் தானிருக்கின்றது. அதை நம்பித் தான் இத்தனை பிரமாண்டமான விருந்து உபசாரமும்.

"இஞ்சார் பெரியண்ணை! சொல்லிப் போட்டன். அங்கை போய் நிண்டு கொண்டு அவங்கள் விக்கிரமாதித்தன் ஆக்கள் சொல்லுறதுக் கெல்லாம் ஆமாம்! போட்டுத் தலையாட்டிக் கொண்டு நிண்டிடாதேங்கோ!

கடைக்காரக் கனகசபையர் கறாராகச் சொன்னார். "எட கனகசபை! நீயென்ன எங்கடை பெரியண்ணையை ஏதோ இலேசுப்பட்ட ஆளாயே நினைக்கிறாய். எட! அந்த மனிசன் மூண்டு வயதிலை உமையம்மையாரை வளைச்சுப் பிடிச்சு அவவிட்டை ஞானப்பால் வாங்கிக் குடிச்சுத் தேவாரமும் பாடினவர். திருஞான சம்பந்த சிவம் எண்டால் உலகத்திலை தெரியாத மனிசரேயில்லை."

விருந்துபசாரமும் கலந்துரையாடல்களும் களை கட்டிக் கொண்டிருந்தன. எங்கேயோ விருந்து விறுவிறென்று ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்த மாணிக்கம் வாத்தியார் வியர்வையைத் துடைத்தபடி ஒரு கதிரையில் வந்தமர்ந்து கொண்டார். பட்டுவேட்டி சால்வை,! நெற்றியில் பட்டையாக விபூதி! அதிலொரு சிறிய சந்தனப் பொட்டு! எங்கேயோ திருமணச் சடங்கிலிருந்து நேரடியாக வந்திருப்பார் போன்றிருந்தது.

"மன்னிக்க வேணும் பெரியண்ணை! ஒரு நன்மைக் காரியத்துக்குப் போன இடத்திலை கொஞ்சம் சுணங்கிப் போச்சுது."

சொல்லியபடி நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றியெடுத்தார்.

"அப்ப பெரியண்ணை! என்ன மாதிரி! இண்டைக்கு இரவு ரயிலுக்குப் போறியள் தானே!"

"பின்னையென்ன மாஸ்டர்! இரவுக்குப் போனால் தானே நாளைக்கு வேலையைப் பாரம் எடுக்கலாம்."

உற்சாகமாகச் சொல்லி விட்டுக் கடைவாய்க் கொடுப்புக்குள் சிக்கியிருந்த இறைச்சித் துகளை வெளியிலே எடுத்து விடுவதற்காகத் தீக்குச்சி யொன்றை எடுத்து வைத்து அல்லாடிக் கொண்டிருந்தார்.

"மெய்யேடாப்பா கணேசு! டேய்! உவன் பெடியன்ரை பேரையுமெல்லோ மறந்து போனன்... ஆ! இஞ்சார் சிவனேசன், பெரியண்ணைக்குச் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிப் போட்டியள் தானே! பேந்து மனிசனைப் போக விட்டிட்டுப் பங்கை, பிஞ்சையெண்டு என்னம் பொறு ஏண்டாப்புக் கதையள் கதைக்கக் கூடாது." மாணிக்கம் மாஸ்டர் ஒரு ஓய்வு நிலைத் தமிழ் ஆசிரியர். அவர் தமிழ் ஆசிரியராகவிருந்தாலும் அரசியல், சரித்திரங்களெல்லாவற்றையும் நன்றாகக் கரைத்துக் குடித்த ஓர் அனுபவசாலி. எனவே அவர் மீது ஒரு பக்தியும் பயமும் ஊரவர்கள் எல்லோருக்குமேயிருந்தது.

"இப்ப பெரியண்ணை! அந்தக் கொம்பனியிலை எங்களுக்கும் பங்கிருக்குதெண்ட கதை அயல் அட்டை எல்லாருக்கும் தெரியும் தானே! அப்ப பயப்புடாமல் நீங்கள் கதைக்கலாம். உதெல்லாம் தெரிஞ்சு தானே இப்ப விக்கிரமாதித்தன் 'பாட்டி' உங்களை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுக்கினியானை பாடுதல்

வைத்தியர்
கந்தையா நவரத்தினம்

மார்கழி மாதத்தில் பெண் கள் ஒன்று கூடி நீராடி ஆலயம் சென்று சிவனை வழிபடுவதாகவும் அப்பொழுது அவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடல் ஆகவும் அமைந்த பாடல்களே மாணிக்க வாசகரது திருவாசகத்தில் ஒன்றான திருவெம்பாவை பாடல்கள்ஆகும்.
'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்திற்கம் உருகார்' என்பதற்கேற்ப இறைவன்பெருமையையயும் அவன் மீது கொண்ட மாறா அன்பினையும். அழகு தமிழிலே தருபவை திருவெம்பாவைப்பாடல்கள் .

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ...

"தொடக்கமும் இறுதியும் இல்லாத சோதி வடிவானவரை நாங்கள் பாடுகின்றோம். அதைக் கேட்டும் வாள் போன்ற அழகிய கண்களை உடைய நீ தூங்குகின்றாயே என்று ஆரம்பமே இறைவனுடைய அனாதி தன்மையை விளக்குவதோடு அவனைப் பாடுவோர் அன்பினையும் சொல்கிறார் மணி வாசகர் .
அடுத்த பாடலில் விண்ணவர்களும் வணங்கக் கூசுகின்ற மலர் போன்ற பாதங்களை நமக்குத் தந்தருள் செய்ய வரும் ஒளியே உருவான, சிவலோகனான, தில்லைச் சிற்றம்பலத்து இறைவனுக்கு அன்பர்கள் நாங்கள் என்று இறைவன் புகழ் பேசுகிறது பின்வரும் பாடல்வரிகள்.

"விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம்"

விண்ணுலகும் போற்றும் ஒரே மருந்தை , வேதத்தால் மேன்மையாக உணரப்படும் பொருளை, காண இனிய சிவபெருமானை நெக்குருகக் கசிந்து பாட வந்துள்ளோம் என்று மாறா அன்பை பேசுகிறது இன்னோர் பாடல்.


இவ்வுலகமும், விண்ணுலகமும், பிறவுலகங்களும் அறிவதற்கு அரிய பெருமானுடைய திருக்கோலத்தையும், அவர் நம்மை ஆட்கொண்டு குற்றங்களை நீக்கும் பெருமையையும் பாடி சிவனே! சிவனே! என்று நாங்கள் ஓலமிட்ட போதும், சற்றும் உணர்ச்சியில்லாமல் இருக்கிறாயே ! என்று தோழி கூற்றாக வரும் பாடல் பத்தியின் வாய் மொழியாகி நம்மை பரவசப்பட வைக் கிறது.

"ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்"

மேலும்
பழைமையான பொருள்களுக்கெல்லாம் பழைமையான முதல்வே- என்றும் இப்போது தோன்றிய புதுமையானவற்றுக்கும் புதுமையானவனே என்றும் அவனுடைய பாதமாகிய மலர்கள் பாதாளங்கள் ஏழிற்குக் கீழும் சென்று சொல்லுதற்கும் எட்டா வகை உள்ளன என்றும் அவன் பெண்ணை ஒருபாகம் உடையவன் என்றும் ; வேதங்கள் முதலாக விண்ணோரும், மண்ணோரும் துதிக்கின்ற போதும் ஒருவராலும் இவ்வாறு எனச் சொல்லப்பட முடியாதவன் என்றும் பல இடங்களில் இறைவன் புகழ் பேசுகிறார் மணிவாசகர்
இறை அன்பிலே உருகிக்கரைந்து ஞானம் பெற்ற மணிவாசகர் இறுதியாகவரும் போற்றிப்பாடலில்
சிவபெருமான் பாதங்களின் பெருமையை அழகாகப் பேசுகிறார்

"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

இறைனின் பாதங்களே உயிர்களின் தொடக்கமும் முடிவும். பாதகாப்பாகவும் அமைகின்றன. திருமாலும் அயனும் காணாமுடியாத அந்தப் பாதங்களை போற்றி துதிப்போம் என்பதே அப்பாடலின் விளக்கம். இவ்வாறு மார்கழி குளிரில் இறைவன் புகழ் பேசி இதயத்தையும் குளிர்விக்கின்றன திருவெம்பாவைப் பாடல் கள்.





## திருவெம்பாவைப் பாடல்களில் இறைவன் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாணக்ய குணவர்தனவின் தில்லுமுல்லு

தவபாரதி

இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல்கள் தன்னிடம் உள்ளது என நீதிமன்றத்தில் கூறியிருந்த முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர், அண்மையில் நடைபெற்ற அந்த வழக்கு விசாரணையில் அதுபற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்று தெரிவித்திருக்கிறார். அவர் வேறு யாருமல்ல. 58ஆவது படைப்பிரிவின் முன்னாள் கட்டளை அதிகாரியாகவிருந்த மேஜர் ஜெனரல் சாணக்ய குணரத்னாவே. அதாவது கடந்த ஊழல்அரச அங்கத்தவர்களில் ஒருவர்.

**முழுப்பூசணிக்காயும் தன்னிடமுள்ளதாம்!**

கடந்த அரச ஆட்சிப்பீடத்தினரால் பதவிக்கு அமர்த்தப்பட்டவர்களில் ஒருவரான சாணக்ய குணரத்ன, 2009இல் இடம்பெற்ற இறுதிப் போரின்போது முல்லைத்தீவு மாவட் டத்துக்குரிய 58 ஆவது கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்தவர்.

இறுதிப் போரின்போது காணமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுவில் இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் கையளித்த தமது உறவினர்களைமீட்டுத் தருமாறு கோரப்பட்டிருந்தது. இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியதன் பிரகாரம் பிரதிவாதியான சாணக்ய குணரத்ன முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். 2015டிசம்பர்10ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையில் இவர் 58ஆவது படையணியிடம் சரணடைந்தவர்களின் விவரங்கள் எதுவும் தன்னிடம் இல்லை என்று தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அதற்கு அடுத்த மாதம் நடைபெற்ற அதே வழக்கு விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணியின் குறுக்கு விசாரணைக்குப் பதில் அளித்தவர், "ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்தவர்கள் குறிப்பிடுபவர்களின் விவரங்கள் உங்களிடம் இல்லை என்பதை எதைவைத்துக் கூறுகிறீர்கள்" என்ற சட்டத்தரணியின் கேள்விக்குச் சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் தன்னிடமுள்ளது எனவும் அதில் ஆராய்ந்ததில் மனுதாரர்கள் குறிப்பிடுபவர்களின் பெயர்கள் இல்லை என்றும் பதிலளித்தார். அதனால் அவர் கூறியதன் பொருட்டு அவரிடமுள்ள சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் நீதிமன்றத்தால் கோரப்பட்டது.

**சோற்றில் மறைக்க முயற்சி**

தான் குறிப்பிட்டதும் நீதிமன்றம் கோரியிருந்த இறுதிப் போரின்போது அதாவது 2009மே மாதம் 17, 18, 19ஆம் திகதிகளில் இராணுவத்தில் சரணடைந்ததாகக் குறிப்பிடப்பட்டவர்களின் விபரங்களுக்குப் பதிலாக புனர்வாழ்வு ஆணையாளரால் வெளியிடப்பட்ட சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்களின் விவரங்களையே நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருந்தார். அது ஏலவே தன்னிடம் இருப்பதாகக் கூறிய, நீதிமன்றம் கோரிய அறிக்கை அல்ல. இந்த விவரங்களை எந்தவொரு நபரும் புனர்வாழ்வு ஆணையகத்தினூடாகப் பெறமுடியும். நீங்கள் உங்களிடம் இருப்பதாகக் கூறிய இறுதிப்போரில் சரணடைந்தவர்களின் விவரங்களைச் சமர்ப்பியுங்கள் என்று மீளவும் நீதிமன்று பணித்திருந்தது.

ஆனாலும் அதன் பின்னரும் அந்த விவரங்களையே கையிலெடுத்துக் கொண்டு நீதிமன்றம் வந்திருந்த சாணக்ய குணரத்ன அதைத் தவிர வேறு எந்த ஆவணமும் தன்னிடம் இல்லை. என்றும் இதற்குப் பிறகும் சட்டத்தரணி கேட்ட கேள்விகளுக்கு நாசூக்காகத் தப்பித்து அது பற்றித் தெரியாது என்றும் கையை விரித்துப் பொறுப்பான பதவி வகித்த தனது நிலையைப் பறைசாற்றியிருந்தார்.

**பதமான ஒருசோறு!**

சாணக்ய குணரத்னாவின் மேற்படி தில்லு முல்லுகள் இறுதிப்போரின் போதான போர்க்குற்றங்களைத் திறம்படத் தெளிவுபடுத்தியிருந்தாலும். தொடர்ந்த இந்த வழக்கு விசாரணையின் முடிவுகளிலிருந்து மற்றுமொரு தெளிவும் ஏற்படவிருக்கின்றது. தினந் தினம் புதுக்கதையுரைக்கும் சாணக்ய குணரத்ன உள்ளிட்ட இராணுவத் தலைமைகளும் கடந்து சென்ற அரசியல் தலைமைகளும் உள்நாட்டு நீதித் துறைக்கு வாலாட்டக்கூடிய ந பிக்கையிலயே உலாவுகிறார்கள். இது போன்ற தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தொடரப்பட்ட வழக்குகளிலிருந்து உள்நாட்டு நீதித் துறையின் பலவீனத்தால் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதை உணர்த்துகின்றன அண்மையில் வெளியான ஜூரிகள் சபையினரின் தீர்ப்புக்கள். அவை போன்ற உள்நாட்டு நீதித் துறையின் மற்றுமொரு பலவீனமாகத்தான் இந்த வழக்கு மீதான தீர்ப்பும் அமையும். ஆகவே மாற்றுக்கருத்துக்கள் பற்றி எண்ணத் தேவையில்லை. இவை தான் தமிழர்கள் பன்னாட்டு நீதித் துறை தான் வேண்டும் என்பதில் உறுதியாகவி நப்பதற்கு உதாரணம் கூறுகின்ற பதமான ஒருபானைச் சோறுகள்.


> சாணக்ய குணரத்ணாவின் மேற்படித் தில்லு முல்லுகள் இறுதிப்போரின் போதான போர்க்குற்றங்களை திறம்படத் தெளிவுபடுத்தியிருந்தாலும். தொடர்ந்த இந்த வழக்கு விசாரணையின் முடிவுகளிலிருந்து மற்றுமொரு தெளிவும் ஏற்படவிருக்கின்றது. தினந் தினம் புதுக்கதையுரைக்கும் சாணக்ய குணரத்ன உள்ளிட்ட இராணுவத் தலைமைகளும் கடந்து சென்ற அரசியல் தலைமைகளும் உள்நாட்டு நீதித்துறைக்கு வாலாட்டக்கூடிய நம்பிக்கை யிலேயே உலாவுகிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசிப்போம்

நிஷா



தற்காலத்தில் சிறுவர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் அருகி வரும் வாசிப்புப் பழக்கம் மரபுவழிச் சொல்லாற்றல்களிலும் இலக்கணக் கட்டமைப்புக்களிலும் வழுக்களை ஏற்படுத்தி விடுவதுடன் அவர்களின் எழுத்தாற்றலில் வறட்சித்தன்மையையும் ஏற்படுத்தி விடுகின்றது. தற்போதெல்லாம் இலக்கிய வாதிகள் ஒன்றுகூடும் கூட்டங்கள் அதிகமாக நடக்கின்றன. அதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட தனித் தனி அமைப்புக்களும் ஏராளமுள்ளன. எழுத்துத் துறையினரின் ஆரோக்கியமான இந்தப் போக்கினூடே சில புதிய அம்சங்களையும் கவனிக்க முடிகிறது.

கூட்டங்களுக்கு வருபவர்களில் பல புதிய முகங்களைக் காண முடிகிறது. இவர்களில் சிலர் தமது எழுத்துக்களை அச்சேற்றிப் புத்தகங்களையும் எழுதுகிறார்கள். அதிகளவானோர் எழுத்துத் துறை தவிர்ந்த வெவ்வேறு துறைகளில் பணிபுரியும் இளைஞர்கள் என்பதுதான் நம்மை ஆச்சரியப் படுத்துகிறது. இவர்களது இலக்கியச் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியவை. ஆங்கில வழிக் கல்வி பயின்ற பலர் தமிழ் வாசிப்பிலிருந்தும் தமிழ் இலக்கியத்திலிருந்தும் கடந்த பல தசாப்தங்களாகவே ஒதுங்கியிருக்கிறார்கள். 1970கள்வரை பலருக்கும் தமிழை வாசிப்பதிலும் படைப்புக்களை வெளியிடுவதிலும் பலருக்கும் எந்தத் தயக்கமும் இருந்ததில்லை. ஆனால், அதற்குப் பிந்திய காலகட்டத்தில் இவர்கள் தமிழ்ப் புலமையில் பின்தங்கத் தொடங்கினார்கள். தமிழ் எழுத்துப் பரப்பை விட்டு இவர்கள் பெருமளவில் விலகினார்கள். காரணம் இலக்கண விதிகளையும் இலக்கிய அறிவினையும் கிரகித்துக் கொள்வதில் ஏற்பட்ட குறையே. அத்தோடு ஆங்கில மொழியின் தாக்கமும் மரபுகளையும் இலக்கணவரம்புகளையும் மீறிக் கவிதை செய்ய இடமளித்த நவீன எழுத்துப் போக்குகளுமே. ஆனாலும் இந்தக் காலகட்டத்தில் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து படைப்பாளிகளும் எழுத்தாளர்களும் மரபுவழி மற்றும் இலக்கணப் பாண்டித்தியங்களுடன் எழுத ஆரம்பித்து தமிழ் எழுத்துப் பரப்பின் வளத்தைக் கூட்டினார்கள்.

இப்போது, ஆங்கில வழிக் கல்வி மூலம் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த பலரும் தமிழ் எழுத்துலகுக்கு நெருக்கமாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய பல மொழி ஆற்றல்கள் மொழிபெயர்ப்புப் படைப்புக்களைத் தமிழுக்குப் புதிதாகத் தந்துள்ளன. படைப்புலகிலும்; இவற்றின் பங்கு இன்று அளப்பரியதாகியிருக்கின்றது. இவ்வாறு பலமொழிகள் மூலம் ஏற்பட்ட ஆர்வத்தால் சமகாலத் தமிழ் எழுத்துக்களில் வாசகர்களும் எழுத்தாளர்களும் அதிகரிக்கின்றனர்.

இதனால் தமிழ் வாசகப் பரப்பு விரிவடைந்துவருவதும் ஆரோக்கியமான விடயம்.

ஆனாலும் இவ்வாறு வாசகப் பரப்பு விரிவடையும் அதே நேரத்தில் இவர்களது வாசிப்பின் ஆழம் குறித்த சந்தேகமும் ஏற்படுகிறது.

தீவிர இலக்கியத் தளத்திலும் நுனிப்புல் மேய்பவர்களாகப் பலரும் மாறிவருகிறார்கள். இந்தப் போக்கு களையப்பட வேண்டியது.

தகவல் தொழில்நுட்ப யுகத்தில், வணிகமயமான இன்றைய சூழலில், தமிழுக்கு எதிர்காலம் இருக்காது என்னும் அச்சத்தை ஆரூடமாகப் பலர் முன்வைத்தார்கள்.

இதே தகவல் தொழில்நுட்ப யுகம்தான் இத்தகைய மாற்றத்தையும் சாத்தியப்படுத்தியிருக்கிறது.

இணையத்தையும் சமூக வலைத்தளங்களையும் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் கூர்மையும் படைப்பூக்கமும் தொலைநோக்கும் கொண்டு செயற்பட்டால் இன்னும் பல தமிழர்களைத் தமிழ் வாசிப்பின் பக்கம் ஈர்க்க முடியும். கடந்த சில ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இந்த ஆரோக்கியமான சலனத்தின் தெளிவான அடையாளங்களைக் கடந்த ஆண்டில் பார்க்க முடிந்தது. வரும் ஆண்டுக்கான நம்பிக்கை விதையாக இதை எடுத்துக்கொண்டு இந்தப் போக்கை முன்னெடுத்துச் செல்வது தமிழ் மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் ஆர்வமுள்ளவர்களின் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வியலில் பனை

கே.எஸ்.சிவஞானராஜா

பூர்வீக வரலாற்றை மூலதனமாகக் கொண்டு தமிழர்தம் வாழ்வுக்கு வரமளித்து இன்று மட்டுமல்ல, என்றுமே நீடித்த ஆயுளையும் ஆரோக்கிய வாழ்வினையும் தந்துகொண்டிருக்கும் பனை வளம்- ஒவ்வொரு தமிழனையும் நூறு வயது வரை சிரஞ்சீவியாகவும், பெண்களைச் சுமங்கலிகளாகவும் பேறாக்கும் என்பது அனுபவ வரலாறாகும்.

**பனையே மனை**

எமது மூதாதையர்களின் வீடு தொடக்கம், காடு வரையான அவர்களது ஒவ்வொரு அசைவும் பனையின் மூலப் பொருள்களாலேயே அமைந்தன. ஒவ்வொரு வீடும்- மரம், சலாகை, ஓலை, நார், ஈர்க்கு, மட்டை, மூரி, குருத்தோலை யாவற்றினாலும் முழுமை பெற்றிருக்கும்.

இதன் பேறாக, பௌதிகச் சூழலால் எந்த மனிதனும் பாதிக்கப்பட்டதேயில்லை. மண்ணும் பனையும் வளமும் சேர்ந்த போது, மனிதனை வெப்பமோ, குளிரோ எதுவும் வதைக்கவில்லை. நோயும் அணுகவில்லை. மூளையும் வரளவில்லை உடம்பும் தேய்மானம் அடையவில்லை. உறவுகளும் விலகவில்லை. உறவும் கசக்கவில்லை. குருதிப்பிடிப்பும் குறையவில்லை. உடம்பும் சூட்டால் தவிக்கவில்லை. காரணம், பனைவளம் வீட்டை மனைவளம் ஆக்கிற்று. மூளை சங்கடமில்லாது பயணித்ததால் அவர்கள் எண்ணியது, முயன்றது, விளைவித்தது யாவும் நிறைவான பேறளித்தன. மனித வாழ்வு ஒவ்வொரு மனையின் வெற்றியிலேயே தங்கியிருந்தது. மனையின் வெற்றி பனையிலே தங்கியிருந்தது. பனை எந்தவித தோசத்தையும் அடியோடு நீக்கவல்லது. வாஸ்துசாஸ்திர அமைப்புக்களுக்கு விதிவிலக்காகப் பனை விலகுவதில்லை. எனவே, மனை பனையாகிற்று. பனை மனையாகிற்று. இன்றோ அத்தகைய நிலை ஈவினை போலாகிற்று.

நுங்கு, பனம்பழம், பழச்சாறு, பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், பதனீர், பனங்கற்கண்டு, பனங்கள், பனங்கட்டி, கல்லாக்காரம் ஆகிய உணவுப் பதார்த்த ஆகாரங்களும் மற்றும் சார்வோலை, சுவட்டோலை, குருத்தோலை, பாயோலை, பனையோலை, தடிப்போலை வரங்களால்- பெட்டி, குஞ்சுப்பெட்டி, கடகம், பின்னல் பெட்டி, சுளகு, பாய், பொலிப்பாய், திருகணி, குட்டான், கூடை, கொட்டைப் பெட்டி, பிளாத்தட்டு, தடுக்கு, சீலாப்பட்டை, கிணற்றுப்பட்டை, பீலிப்பட்டை, எத்தல் பட்டை, விளக்குமாறு, உறி எனப் பலப்பல உபகார உபகரணங் களும் மானிட வாழ்வை மேம்படுத்திய வரலாறு இப்பொழுதும் இந்த மண்ணில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.



> அன்று- ஒரு கோடிக்கும் மேலாக இருந்த பனைகள் இன்று சோபை இழந்து, சில பல இலட்சங்களோடு மண்வாசனை மறந்து, மக்களாலும் அநாதர வாக்கப்பட்டு, போர்ச்சூழலின் தாக்கத்திலிருந்து விடுபடாத விதவைகள் போல வாழ்கின்றன.

செல்வர், வறியவர், உயர்ந்தோர், பயந்தோர், சின்னக் குழந்தைகள், சிறியர், பெரியர், வெறிதயர் யாவர்க்குமாகப் பனம் பதார்த்தங்கள் பரிபூரண வாழ்வை அன்று குறைவின்றி நல்கின. நோயெதிர்ப்புச் சக்தியை வாரி வழங்கின. அல்லாமலும், பின்வரும் நோய்களை அறவே நீக்க வழிகோலின். பதமான பதனீரைப் பருகிடப் பசிதீரும். பாண்டு, இருமல், காய்ச்சல், குன்மம். இதமான மிளகு, சிரகம், இஞ்சியை இதிலிட்டு எரித்து உண்ண இலகுவில் நீங்கும்.

மிதமான கொதியில் நல்
லெண்ணெய் போல்
புதுமுட்டிபுகுந்து கற்காரமாகும்.
அதிலுமதிகங்
கொதித்தால் பாணி
பனங்கட்டியாகும்
அழிவேதுமில்லை
சீனி கற்காரம்
வெல்லமொடு சர்க்கரை
செய்திடலாம் இந்த
வையகத்தே
திவ்ய விஞ்ஞான
முணர்ந்தோ ரெழுந்திடில்
தேசமெங்கும் சென்று
தித்திப்பேனே.

மேலும், அன்றைய ஒடியல்மாவைப் பெறுமதியாக்கும் ஒரு நாட்டுப்பாடல் இதுவாகும்.

ஒடியலில் மாச்சத்துடன், புரதச்சத்தும் கனிமங்களும் மிகுதியாக இருப்பதனால் உடலை ஒடியாமல் ஒடியல் பாதுகாக்கும். கோதுமைமா இடையிலே நம்நாட்டில் புகுந்து எல்லா வீட்டிலும் அடுக்களையை ஆக்கிரமித்துவிட்டது. பனைதரு பானம், பண்டம், பருப்பு இனத்தோடு- சாமி, தினை, எள்ளு, வரகு, கீரை, தினிசு, காய்கறி, குரக்கன் தனை மனைதனிலே மாறிச் சமைத்து நாம் உண்போமானால், வினைமிகு ரோகமெல்லாம் விலகிடும் தானாக என்ற மூத்தோர் மொழிக்கேற்ப அன்றைய மனிதன் திடகாத்திரமான ஒரு சந்ததியைப் படைத்தான்.

முழுக்க முழுக்கத் தமிழர் வாழ்வினை ஆட்சிசெய்த பனைகள் வடமாகாணத்தைப் பொறுத்த வரை இறைவன் தந்த வரமாகப் போற்றப்பட்டு வருகின்றன.

அன்று- நாளாந்தம் பனம்பழம் கிடைக்காவிட்டாலும் பனாட்டு பானையில் எப்போதும் எவருக்கும் சாப்பிடத் தயாராக இருக்கும். மிளகு, சீரகம், தூள் வாசனைத் திரவியங்கள் பனாட்டில் சேரும் வண்ணம் நல்லெண்ணெயில் வதக்கி அது குடும்ப உணவாகப் பேணப்படும்.

இரவு வேளையில், ஒடியல் பிட்டும் ஒடியல் கூழும் பனங்கிழங்குத் துவையலும் உணவாக உண்டு மகிந்துள்ளார்கள்.

புழுக்கொடியல் இடைவேளைகளில் கொறிப்புச் சாப்பாடாகவும் ஜனரஞ்சக உணவாகவும் பகிரப்பட்டுக் குடும்ப சகவாழ்வை மேம்படுத்தியுள்ளது. அன்னியோன்னியத்தை வளர்த்துள்ளது. யாழ்ப்பாணத்தைத் தங்க நகரம் ஆக்கியுள்ளது.

அன்று- ஒரு கோடிக்கும் மேலாக இருந்த பனைகள் இன்று சோபை இழந்து, சில பல இலட்சங்களோடு மண்வாசனை மறந்து, மக்களாலும் அநாதரவாக்கப்பட்டு, போர்ச்சூழலின் தாக்கத்திலிருந்து விடுபடாத விதவைகள் போல வாழ்கின்றன. கள்ளின் மகிமை கருதிப் பல வாடிக்கையாளர்கள் பனைகளைத் தெய்வமாகக் கருதி வாழ்கின்றனர்.

எது எவ்வாறு இருந்த போதும், பனை வளம் இன்னும் மக்களால் பேறாக்கப்படவில்லையே என்று இந்த மண் கலங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைச் சவப்பெட்டியில் அடைத்த பெண்மணி!





என்.நிவின்

இரினா சென்ட்லர் எனும் பெண் மணி, ஆயிரக்கணக்கான குழந்தைகளை உயிருடன் சவப்பெட்டியில் அடைத்து வைத்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அவர் ஏன், எதற்காக அந்தக் குழந்தைகளை அவ்வாறு சவப்பெட்டியில் அடைத்து வைத்தார் என்பது பற்றி இங்கு நோக்குவோம்.

போலந்தில் பெப்ரவரி 15, 1910இல் பிறந்தவர் இரினா சென்ட்லர். இவரது தந்தை இவருக்குப் பலவற்றைக் கற்றுத்தந்தார். அதில் ஒரு பாடத்தை இவர் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்து வந்தார். அதாவது, ஏழைகளுக்கு உதவி செய்தல் என்பதே அது.

இரினாவின் ஏழாவது வயதில் அவரது தந்தை இறந்துவிட்டார். ஆனால், தந்தையுடன் வாழ்ந்த அந்த ஏழு வருடங்கள் தான் இரினாவின் வாழ்வில் பெரும் தாக்கத்தையும் தூண்டுதலையும் ஏற்படுத்தின. தந்தையின் கால்தடத்தைப் பின்பற்றிய இரினா, தந்தையை (மருத்துவர்) பின்பற்றி, மருத்துவத்துறையில் (தாதியாக) கால் பதித்தார். பின்னர் சமூக சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சமூக நல்வாழ்வு அமைப்பு மூலம் உணவு, உடைகள் அளித்து நிர்க்கதியானவர்களுக்கு உதவி வந்தார்.

**இரண்டாம் உலகப் போர்**

இரண்டாம் உலகப் போரின்போது யூதர்கள் மற்றும் நாசிப் படைகளுக்கு மத்தியில் பெரும் பகை இருந்தது. ஏறத்தாழ நான்கு இலட்சத்துக்கும் மேலான யூதர்களை நாசிகள் கெட்டோ எனும் சிறிய பகுதியில் சிறைப்பிடித்து வைத்திருந்தனர். அந்தச் சிறிய பகுதியில் அளவுக்கு அதிகமான மக்களை அடைத்து வைத்ததால் அங்கு பசி, பட்டினி, துன்பம், வாழ்க்கை நிச்சயமின்மை, நோய்த் தொற்றுக்கள் போன்றவை அதிகரிக்க ஆரம்பித்தன. அப்போது ஜேர்மனி ஆக்கிரமிப்புச் செய்திருந்த போலந்து பகுதியில் யூதர்களுக்கு உதவி செய்யப் புறப்பட்டார் இரினா. அங்கு தனது உயிரைப் பணயம் வைத்து உதவி செய்ய வேண்டியுள்ளது என்பதை அவர் உணர்ந்தார். தன்னுடன் உதவி செய்ய வந்தவர்களுடன் சேர்ந்து கெட்டோவில் இருந்த யூதக் குழந்தைகளை வெளியேற்ற இரகசியமாக உதவினார்.


இரினா பல யூதர்களை, யூதக் குடும்பங்களை நேரடியாகச் சென்று பார்த்துக் குழந்தைகளைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்க அணுகினார்.

ஆனால், பல தாய்மார்கள் அதற்கு ஒப்புதல் அளிக்க வில்லை. அவர்கள் யாரோ பெயர் தெரியாத ஒருவருடன் தமது குழந்தைகளை அனுப்பத் தயங்கினர்.

அவ்வேளை நாசியின் கண்காணிப்பு கெட்டோ பகுதியில் கடுமையாகவும், விரிவாகவும் இருந்தது. இரினா ஒரு நல்ல மாற்று வழியைத் தெரிந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். குழந்தைகள் நோய் வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயை நெருங்கிக்கொண்டிருந்தனர். அவர்களைக் கெட்டோவில் இருந்து மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல குப்பைப் பைகள், ஆடைப் பொதிகள், சவப்பெட்டிகள் போன்றவற்றில் அடைத்து மீட்க முயன்றார்.







**2500 குழந்தைகள்!**

இந்த வகையில் மட்டும் 2500 குழந்தைகள் இரினாவால் காப்பாற்றப்பட்டனர். இவ்வாறு இரினா யூதக் குழந்தைகளைப் பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயர வைக்கிறார் என்பதை நாசிப் படையினர் அறிந்து அவரைக் கைது செய்தனர். சிறையில் அடைத்து அவரைச் சித்திரவதை செய்து, கைகளை உடைத்துக் கொடுமைகள் செய்தனர். இவ்வளவு கொடுமைகள் நடந்தும், தான் வெளியேற்றிய அந்தக் குழந்தைகள் பற்றி ஒரு தகவலும் கொடுக்காமல் அவர்களைக் காப்பாற்றினார் இரினா.

நாசிப் படைகளின் பிடியிலிருந்து ஒருவாறு தப்பித்த இரினா. அன்றிலிருந்து போலியான அடையாளத்தில் வாழ்ந்து வந்தார். போர் முடிவு பெற்றவுடன் குழந்தைகள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் பெற்றோருக்குக் கொடுத்தார். இதன் பிறகு இவர் திருமணம் செய்து மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

இவ்வாறு சமூக சேவையில் மின்னும் தாரகையாகத் திகழ்ந்த இரினா, தனது 98ஆவது வயதில் சாவடைந்தார். 1997ஆம் ஆண்டு நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் அது அவருக்குக் கிடைக்கவில்லை. இப்போது புரிகிறதா ஏன் குழந்தைகளைச் சவப்பெட்டிக்குள் அடைத்தார் என்று?



## காணவில்லை

என் பள்ளி வாழ்க்கையில் -
நான் தொலைத்தவை ஏராளம்
வகுப்பறையில் அவற்றை
மறந்து விட்டு வருவது
என் பழக்கம்
பேருந்துப் படியை மிதித்ததும்
மறந்தது எல்லாம் ஞாபகத்தில்
மிதந்தெழும்.
செம்பருத்திப் புத்தகம்,
அண்ணா தந்த ஆசைப் பேனா,
விரும்பி வாங்கிய
பூக் கைக்குட்டை,
ஆச்சி தந்த ஓலைத்தொப்பி
இப்படியாக எல்லாமே
மறந்து விட்டு வந்தவை தான்

இன்று பள்ளி வாழ்வின்
கடைசி நாள்
பஸ் படியை மிதிக்கையில்
எதையோ,
மறந்ததைப் போல் உணர்வு
தேடிப் பார்த்தேன்
என்னவென்று - என்
இதயத்தைக் காணவில்லை

பா. பாலாஜினி, பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஜெகான் பெரேரா

# சாத்தியமானதைச் சாதிக்கும் கலையாகக் கூட்டாட்சி அரசியல் தொடரும்



புது வருடத்தில் அரசு கவிழும் என்றும் மீண்டும் தான் அதிகாரத்துக்கு வரப்போகிறார் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வு கூறியிருக்கிறார். நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கு முன்னதாக நீண்டகால அரசியலில் அவருக்குப் பயன்தந்த அதே உறுதியை இப்போதும் அவர் வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார். கட்சித் தலைவர்களினால் அழுத்தி அமர்த்தி வைக்கப்பட்ட அவர் இறுதியில் மேலோங்கினார். தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்கள் முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை 2015 ஜனவரியில் நடத்திய அவர் அதில் எதிர்பாராத விதமாகத் தோல்வியைத் தழுவினார். ஆனால், அதற்குப் பின்னரும் கூட, விடா முயற்சியுடன் போராட்டத்தை நடத்திக்கொண்டு அரசியல் அதிகாரத்தின் மைய அரங்கிற்குத் திரும்பி வந்திருக்கிறார். கூட்டு எதிரணியில் உள்ள தனது ஆதரவாளர்களுடன் சேர்ந்து மக்களில் ஒரு பிரிவினர் மத்தியில் தனக்கு இருக்கின்ற பெரும் ஆதரவை அவர் பல சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டக் கூடியதாக இருந்திருக்கின்றது. ஆனால், அந்த ஆதரவை அவரால் உண்மையான அதிகாரமாக மாற்றிக் காட்ட முடிந்ததில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டாட்சி அரசியலில் தொடர்ந்து ஈடுபடும் வரை முன்னாள் ஜனாதிபதி தனக்கிருக்கக்கூடிய மக்கள் ஆதரவை அரசியல் அதிகாரமாக மாற்றிக்காட்ட முடியாமல் இந்தப் பிரச்சினைக்குத் தொடர்ந்தும் முகம்கொடுக்க வேண்டியிருக்கும். தற்போதைய ஜனாதிபதியினதும் பிரதமரினதும் தலைமையிலான அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கிறது. கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் அதன் சகல நிலைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்தும் இதைக் காணக்கூடியதாக இருந்தது. அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில்தான் அதிகாரம் தங்கியிருக்கிறது.



“ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டாட்சி அரசியலில் தொடர்ந்து ஈடுபடும் வரை முன்னாள் ஜனாதிபதி தனக்கிருக்கக் கூடிய மக்கள் ஆதரவை அரசியல் அதிகாரமாக மாற்றிக்காட்ட முடியாமல் இந்தப் பிரச்சினைக்குத் தொடர்ந்தும் முகம்கொடுக்க வேண்டியிருக்கும்.

அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் மூன்று வருடங்கள் இருக்கின்றன. அதுவரை அதிகாரத்தில் தொடருவதற்குத் தாங்கள் இருவரும் ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக இருக்கவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொண்டவர்களாக ஜனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து செயற்படுவதில் காண்பிக்கக்கூடிய தொடர்ச்சியான விருப்பத்திலேயே அரசின் உறுதிப்பாடும் பலமும் தங்கியிருக்கின்றன.

சேர்ந்து செயற்படவேண்டிய தேவை பற்றி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருக்கின்ற புரிந்துணர்வு அவர்களது கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதை விடுத்து தாங்கள் தனியாக நாட்டை ஆட்சிசெய்வதற்கே ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் பல உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

தனியாக ஆட்சிசெய்தால் கூடுதலான வளங்களைத் தங்களால் கையாளக் கூடியதாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கூட்டரசாங்கத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகள் தாமதமடைகின்றன என்று கருதுவதுடன் அவர்கள் தனியாக ஆட்சிசெய்தால் தீர்மானங்களைத் துரிதமாக மேற்கொள்ள முடியுமென்றும் எண்ணுகிறார்கள். இரண்டு கட்சிகளினதும் உறுப்பினர்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் அடிக்கடி வெளியிடுகின்ற ஆவேசமான கருத்துக்கள் தனியாக ஆட்சிசெய்வதில் அவர்களுக்கு இருக்கின்ற விருப்பத்தைத் தெளிவாக வெளிக்காட்டி நிற்கின்றன. இந்தக் கருத்துக்களே அரசு உறுதிப்பாடற்றதாக இருக்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. இதிலேயே முன்னாள் ஜனாதிபதியும் தனது கவனத்தைச் செலுத்துகிறார்.

## மூன்று யதார்த்தங்கள்

கூட்டாட்சி அரசியலில் மூன்று யதார்த்தங்கள் இருக்கின்றன. முதலாவது, தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் தர்க்கங்கள் ஏற்படும். அதனால், அந்தச் செயன்முறைகள் இயல்பாகவே தாமதமடையும். ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இரு வேறுபட்ட அரசியல் கோட்பாடுகளைக் கொண்டவை. ஒன்று வர்த்தகத் துறையினருக்குக் கூடுதலான அளவுக்கு ஆதரவானது என்பதுடன் பன்னாட்டுப் போக்குடையது. மற்றையது வளங்களைப் பகிர்ந்தளித்து மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதில் அக்கறைகொண்டது என்பதுடன் தேசியவாதப் போக்குமுடையதாகும். வழமையான சூழ்நிலைகளில் ஒன்றுக்கொன்று எதிரானதாக இருக்கக்கூடிய இவ்விரு பண்புமுறைமைகளை ஜனாதிபதியும் பிரதமரும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இறுதியில் இரு அரசியல் கட்சிகளினதும் அக்கறைகளை கவனத்தில் எடுத்தவையாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதில் காண்பிக்கப்படுகின்ற நாட்டமே ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கூட்டை பயனுறுதியுடையதாக வைத்திருக்கின்றது. அத்தகைய தீர்மானங்கள் பெருமளவு அரசியல் ஏற்புடைமையைக் கொண்டிருக்க முடியும். அரசமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் முதலில் முரண்பட்ட நிலைப்பாடுகளின் விளைவாக பதற்றம் நிலவியபோதிலும், இறுதியில் நிலைபேறானதாக அமையக்கூடிய விளைவுகளுடன் அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஆட்சி முறை தொடருவதற்கு இடமளிக்கப்பட்டமையும் பிணைமுறி ஊழல் விவகாரத்துக்குப் பிறகு மத்திய வங்கி ஆளுநர் மாற்றம் செய்யப்பட்டமையும் இதற்கான உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இரண்டாவது அம்சம், கூட்டாட்சி அரசியலில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதேவை இருக்கிறது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் பூர்வாங்கமாக நிராகரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டாட்சி அரசியலின் பங்காளிகள் தங்களுக்கு இடையிலான போட்டியை ஒத்திவைத்தலாகும். உள்ளூராட்சித் தேர்தல்கள் திரும்பத் திரும்ப ஒத்திவைக்கப்படுவதை இந்தப் பின்புலத்திலேயே நோக்கவேண்டும். இந்தத் தேர்தல்கள் இப்போது சுமார் இருவருடங்களாக ஒத்திவைக்கப்பட் டிருக்கின்றன.



கப்பட்ட செயலின் மூலம் இதைக் காணமுடியும். முதலீட்டாளர்கள் பொருளாதாரத் திட்டங்களை ஆரம்பிப்பதை இலகுவாக்குவதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கமாகும்.

தற்போது முதலீட்டாளர்கள் தங்களது திட்டங்களைத் தொடங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பல்வேறு அரச நிறுவனங்களை நாடவேண்டியிருக்கிறது. திட்டம் செயற்படுத்தப்படவிருக்கும் பகுதியில் உள்ள உள்ளூராட்சி சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருக்கலாம். முதலீட்டுச் சபை, மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை மற்றும் பல நிறுவனங்களை நாடவேண்டியிருக்கலாம். இந்த அங்கீகாரங்களை எல்லாம் பெற்று முடிப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படும். முதலீட்டாளர்களின் உற்சாகத்தைக் குறைக்கக்கூடிய நடைமுறைகளாக இவை இருக்கும். தாமதங்களைச் சாத்தியமானளவு குறைப்பதற்கு ஏதுவாக ஒரே இடத்திலேயே அங்கீகாரம் பெறும் செயன்முறைகளைக் கையாளுவதை நோக்கமாகக் கொண்டதே புதிய சட்டமூலமாகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதே அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தின் நோக்கம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். ஆனால், 'சூப்பர் அமைச்சு' ஒன்றை உருவாக்குவதற்கான அரசின் முயற்சிகளை தாங்கள் எதிர்ப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த சூப்பர் அமைச்சு தனியொரு அமைச்சரிடம் அதிகாரங்களைக் குவிப்பதை நோக்கமாகக் கொண்டது என்று அவர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். பல்வேறு ஒழுங்கமைப்பு நிறுவனங்களைத் தங்களது நிர்வாகத்தின் மூலம் கொண்டிருக்கும் அமைச்சர்களினதும் மாகாண சபைகளினதும் அதிகாரங்களை இந்தப் புதிய சட்டமூலம் அபகரித்துவிடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாண சபைகள் சட்டமூலத்தை நிராகரித்துவிட்டன. ஒரே இடத்திலேயே செயன்முறைகளைக் கையாளும் ஏற்பாடொன்று முக்கியமானதாகும்.

தொழில் வாய்ப்புக்களையும் செல்வத்தையும் பெருக்குகின்ற முதலீடுகளுக்கு அனுசரணையாக வேறு பல நாடுகள் இத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. எனவே, இத்தகைய சூழ்நிலையில் இது விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதே முன்னோக்கிய அணுகுமுறையாக இருக்கும்.

### போட்டியை ஒத்திவைத்தல்

மூன்றாவது அம்சம், கூட்டாட்சி அரசியலின் பங்காளிகள் தங்களுக்கு இடையிலான போட்டியை ஒத்திவைத்தலாகும். உள்ளூராட்சித் தேர்தல்கள் திரும்பத் திரும்ப ஒத்திவைக்கப்படுவதை இந்தப் பின்புலத்திலேயே நோக்கவேண்டும். இந்தத் தேர்தல்கள் இருவருடங்களாக ஒத்திவைக்கப்பட் டிருக்கின்றன. அதற்குப் பல்வேறு நடைமுறை ரீதியான காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதைய தருணத்தில் தேர்தலுக்குப் போவதை விரும்பாது என்பதே அரசியல் யதார்த்தமாகும்.

தேர்தலொன்றுக்கு போகும்பட்சத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதன் உறுப்பினர்களில் பலர் பங் கேற்கின்றதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை கொடுக்கின் றதுமான கூட்டு எதிரணியுடன் மோத வேண்டிருக்கும். தேர்தலுக்குப் போவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி காட்டுகின்ற தயக்கம் இந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உகந்ததாக இருக்கிறது. முன் னைய அரசினால் பெறப்பட்ட பெருமளவு கடன்கள் காரணமாகப் பாரதூரமான நெருக்குதலுக்கு உள்ளாகியி ருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரானதொரு நிலைக்கு கொண்டுவர வேண்டிய பொறுப்பை (அரசை உண் மையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கட்சி என்ற வகையில்) ஐக்கிய தேசியக் கட்சியே சுமக்கிறது. அரசு புதிய வருடத்தில் அதன் பொருளாதாரச் செயற்திட்டங் களை வலுப்படுத்த விரும்பும். வாக்காளர் களின் ஆதரவே அரசைத் தொடர்ந்தும் வைத்திருக்க முடியுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கப்போகின்ற முக்கியமான காரணி அதுவேயாகும்.

இத்தகையதொரு பின்புலத்திலே, அரசமைப்பு மாற்றம் தொடர்பில் பொது வாக்கெடுப்பொன்றை நடத்துவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய தேவை அரசுக்கு இருக்கும் என்பது புதிதில்லை. புதிய அரசமைப்பு ஒன்று தொடர்பான பொது வாக்கெடுப்பில் வெற்றியைச் சுலபமாகப் பெற முடியாது என்று தேசிய மொழிகள், சக வாழ்வு அமைச்சர் மனோ கணேசன் எச்சரிக்கை செய்திருக்கிறார். அரசு பாதுகாக்கப்பட வேண்டியது முதன்மை முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். பொது வாக்கெடுப்பொன்றில் நிராகரிக்கப்படாத வகையிலான அரசமைப்புத் திருத்தங்களை முன்வைக்கவேண்டிய தேவையை அவர் முன்னிலைப்படுத்தியிருக்கிறார்.

"தற்போதைக்கு பொது வாக்கெடுப்பொன்றைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளையே நாம் செய்ய வேண்டியிருக்கிறது. பொது வாக்கெடுப்பொன்றுக்கு நாம் போவதானால் அதில் வெற்றிபெறக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். அதற்காக, முற்றிலும் புதிய அரசமைப்பொன்றுக்குப் பதிலாக, மிகவும் முக்கியமான விடங்களில் திருத்தங்களைக் கொண்டுவருவது குறித்து நாம் சிந்திக்க வேண்டியிருக் கிறது" என்று மனோ கணேசன் கூறியிருக்கிறார். மத்திய அரசுக்கும்பிராந்தியங்களுக்கும் இடையிலான வரவுகள் குறித்து ஆராய்ந்த உபகுழுவினால் முன்வைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட்ட அதிகாரப்பகிர்வு யோசனைகளைத் தீவிரவாத சக்திகள் கர்ண கொடூரமாக எதிர்க்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். பொது வாக்கெடுப்பொன்றுக்கு நாடாளு மன்றத்தில் கூட்டாட்சிக்கு இருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத் தைப் பயன்படுத்தி சாத்தியமானளவுக்கு அரச மைப்பு மாற்றச் செயன்முறைகளை முன் னெடுப்பதே 2017இல் பெரும்பாலும் இடம் பெறக் கூடிய நிகழ்வுப்போக்காக இருக்கக்கூடும்.

கொலம்பியாவில் அரசுக்கும் மார்க்சியக் கிளர்ச்சிக் குழுவான எவ்.ஏ.ஆர்.சியுக்கும் இடையிலானசமாதானமுயற்சிகளைவலுப்படுத்துவதற்கு அங்கு பின்பற்றப்பட்ட வகைமாதிரி இதுவேயாகும். கிளர்ச்சியாளர்களுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக கடந்த ஒக்ரோபரில் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் கொலம்பிய அரசு தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி அந்த அரசுக்கு மாத்திரமல்ல, சமாதான உடன்படிக்கையின் சிற்பிகளுக்கு நோபல் சமாதானப் பரிசை வழங்கிய பன்னாட்டுச் சமூகத்துக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால், டிசம்பரில் அதே சமாதான உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் ஏகமனதான வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டு இப்போதுநடைமுறைக்கு வந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உடன்படிக்கைக்கு எதிராகப் பரப்புரை செய்த அரசியல் குழுக்களின் அக்கறைகளைக் கருத்தில் எடுத்து மூல உடன்படிக்கையின் இரு அம்சங்களில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன. நிலைமாற்றுக் கால நீதி முறைமை, கிளர்ச்சியாளர்களின் தலைவர்களை அரசியலில் பங்கேற்பதற்கு அனுமதிப்பதற்கான பொறிமுறை ஆகியவை தொடர்பிலேயே அந்த மாற்றங்கள் செய்யப்பட்டன. கொலம்பியாவில் செய்யப்பட்டதைப் போன்றதன் வகைமாதிரி அணுகுமுறை இலங்கையிலும் கடைப்பிடிக்கப்படுமானால் மாற்றங்கள் எந்தவிதத்திலும் முக்கியத்துவம் குறைந்தவையாகவோ அல்லது பரந்த விளைவுகளைத் தரமுடியாதவையாகவோ இருக்கப்போவதில்லை என்பது நிச்சயமானது. அரசியல், அது கூட்டாட்சி அரசியலோ இல்லையோ எதுவாக இருந்தாலும் அது சாத்தியமானதைச் சாதிக்கின்ற கலையாகவே நிலைமாறாமல் இருக்கிறது.



தேர்தலொன்றுக்கு போகும்பட்சத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதன் உறுப்பினர்களில் பலர் பங் கேற்கின்றதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை கொடுக்கின் றதுமான கூட்டு எதிரணியுடன் மோத வேண்டிருக்கும்.

## அன்புக்கு அன்னை...



தாய் என்ற ஜீவனைக் கண்டபின் நானும் கோயிலை மறந்தேனே
அவள் காட்டும் அன்பில் கோயிலில் வாழும் தெய்வத்தைக் கண்டேனே
கட்டடம் கட்டிச் சாமியாய் வைத்துக் கும்பிட வேணுமடா
பூமியாய் இருந்து தாங்கிடும் அவள் எங்கள் குலச் சாமியடா.

நாட்டை ஆளும் ராஜாவும் காட்டை ஆளும் துறவியும்
பாசமாய் சொல்லும் வார்த்தை தாய் என்ற திருவார்த்தை
நேற்றைய இன்பம் பொய்யடா நாளைய இன்பமும் பொய்யடா
தாய் தரும் இன்பமே மெய்யடா அதை உணர்ந்து கொள்ளு நீயடா

வேல் கொண்ட முருகன் வேலிலும் சம்பந்தன் உண்ட பாலிலும்
தாய் அன்பை [illegible] அதுவே தரணியை ஆளும் தாயடா.
அபிராமிபட்டர் அன்புக்கு முழுநிலவு காட்டிய அன்னை
பன்றியின் வடிவில் தோன்றிப் பசி தீர்த்த பரமன் அவளிலும் பாதியடா.

த.விமலசிங்கம்
வீமன்காமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக வலுவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு



தேவி பரமலிங்கம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 19ஆம் நூற்றாண்டிலேயே பெண்கள் விடுதலை பற்றிப் பாடிப் போந்தார். 20ஆம் நூற்றாண்டைத் தாண்டிய 'மிலேனியம்' என்று வர்ணிக்கப்படுகின்ற சமகாலகட்டத்தில்- கல்வி, வேலை வாய்ப்பு, நிர்வாகம் போன்ற இன்னோரன்ன சமூகமட்ட வலுவாக்கத்தில் பெண்கள் வளர்ந்துள்ளமை கண்கூடு. அதேசமயம், பெண்ணியம் என்னும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளமையும் சமூக வலுவாக்க வளர்ச்சி நிலையின் அறிகுறியாகவே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகவுள்ளது.

### தொழில்வலு முன்னோடிகள்

'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று பாரதி பாடியது போன்று - பெண்கள் இன்று கடினமாக உழைக்கின்றனர். இதிலும், ஆண்களால் இன்று மேற்கொள்ளப்படும் அனைத்துத் தொழில்களையும் முன்னர் பெண்களே செய்து வந்தனர் என்ற தரவுகள் கிடைத்து எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. ஆண்களே மிகக் கடினப்பட்டு உழைக்கும் கடற்றொழில், விவசாயம், தோட்டம் வீடமைத்தல் நகை செய்தல், உடுபுடைவை நெய்தல் ஆகிய தொழில்களின் ஆரம்ப சூத்திரதாரிகள் பெண்களாக இருந்துள்ளமை இந்தக் காலங்களில் புதுமையாகக் கருதப்படலாம். அதுபோலவே கற்பித்தல், கவி புனைதல், கதை கூறல், நாடகம், நடனம், கணக்கியல், சாத்திரம், இத்தியாதிகளின் தோற்றுவாய்களாகப் பெண்கள் இருந்தமை பற்றி வரலாறுகள் கூறும்.

பெண் தலையெடுத்த சமுதாயம் அழிவுற்று, ஆண் தலையெடுத்த சமுதாயம் தோன்றியதன் காரணமாகப் பெண்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதாவது, அல்லி இராஜ்ஜியம் என்றழைக்கப்பட்ட பெண் தலையெடுத்த சமுதாயத்தில், ஆண்கள் பெண்களால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதற்குப் பழிதீர்க்கும் பாங்கிலே ஆண் தலையெடுத்த சமுதாயம் உருவானதும், பெண்களை ஒடுக்கும் சகல கட்டமைப்புக்களும் தோற்றம் பெற்றன.

அதனூடாகவே பெண்கள் சமையல் பட்டறைக்குத் தள்ளப்பட்டனர். கல்வி, சமூக அந்தஸ்துக்களில் இருந்தும் சுத்தமாகத் துடைத்தெறியப்பட்டனர். இந்தக் கொடுமைகளைக் கண்ணுற்ற பாரதியார் போன்ற மனிதநேயப் பிறவிகள் பெண்களுக்காகப் போராடியதன் விளைவாகவே பெண்கள் மீண்டும் சிறுகச் சிறுகத் தலையெடுக்கத் தொடங்கினர்.

### பெண் தலைமைத்துவம்

கீழைத் தேசங்களைவிட, மேலைத் தேசங்களில் பெண்களுக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு, நிர்வாக அலகுகளில் முன்பாகவே இடமளிக்கப்பட்டன. பின்பாக மேற்கூறிய அந்தஸ்துக்களைப் பெண் களுக்கு வழங்கிய கீழைத் தேசங்களான இலங்கை, இந்தியாவே பெண்கள் தலைமைத்துவத்தைக் கொண்ட நாட்டரசு உரிமத்தை அவர்களுக்கு முதலில் வழங்கிக் கௌரவித்தன.

அந்தவகையில், இலங்கையின் முதல் பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவே உலகின் முதல் பெண் பிரதமராகவும் திகழ்ந்தார். அடுத்து இந்தியப் பிரதமராக இந்திரா காந்தி வந்ததன் பின்பே - மார்க்கிரட் தாட்சர் என்னும் ஆங்கிலேயப் பெண்மணி பிரிட்டிஷ் பிரதமராகப் பதவி ஏற்றார். இவை யாவும் வரலாற்றுப் பதிவுகளாயின.

இன்றுவரை பொதுநிர்வாக உயர் கல்வித் துறைகளில் தேறி விஞ்ஞானம், தொழில்நுட்பத்துறைகளிலும் பெண்கள் சமூக வலுவாக்கத்தில் கணிசமான பங்களிப்பை வழங்க முன்வந்து, எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்னும் மகாகவி பாரதியின் கூற்றை நிரூபித்தனர். சமூக வலுவாக்கம் எனும்போது, கல்வி மற்றும் நிர்வாகம் மட்டுமன்றி கலை, இலக்கியத்துறைகளையும் எடுத்துப் பார்க்கலாம். பெண்கள் நடிகையாகப் பாத்திரம் ஏற்று நடித்து விட்டால் அவளது கற்பு இழக்கப்பட்டதாகவே சமூக மட்டத்தில் கணிக்கப்படுகின்றது. இதனை நம்நாட்டு மூத்த கலைஞரொருவர் நேர்காணலில் பகிரங்கமாகத் தெரிவித்தும் இருந்தார்.

### பின்னடைவுச் சவால்கள்

சினிமா, நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பெண்களை- இராமன், சீதையைத் தீக்குளிக்க வைக்கும் சவால், நெருடல்கள், சமூக வலுவாக்கப் பணிகளில் ஈடுபடும் பெண்களைப் பின்னடையச் செய்கின்றன. பெண் எந்தவொரு ஆணின் ஆதிக்கத்துக்குள்ளும் உட்படாது தனியே இலக்கியப் படைப்புக்களில் ஈடுபட்டாலும், சவால்களை எதிர்கொள்ளவே நேர்கிறாள். பெண்கள் கவிதைகள், கதைகளையோ எழுத முற்படுகையிலும் சமூக வரம்புகளை மீறிச் சென்றிடவும் முடியாது.

முஸ்லிம் பெண்ணொருவர் எழுதிய குறுநாவல் ஒன்று சமீபத்தில் வாசிக்கக் கிடைத்தது. ஐந்து பெண் சகோதரிகளில், ஒருத்தியை ஒருவர் திருமணம் செய்கிறார். முதலிரவன்று அந்தப் பெண்ணுடைய ஏனைய சகோதரிகள் மைத்துனரைக் கிண்டல்செய்து வருகின்றனர். அதை அறிந்த அவள், சகோதரிகளை நெருங்கவிடாமல் கதவைச் சாத்தி அனுப்பிவிடுகிறாள். ஆயினும் மாப்பிள்ளை அந்தப் பெண்ணிடம், 'மூத்த தங்கச்சி நல்ல வடிவா இருக்கிறாள்' என்று வழிகிறார். இதனை அந்தப் பெண் செய்வதாகக் கதை எழுத முடிந்திடுமா? நாவலாசிரியர் இன்னும் கொஞ்சம் சிருங்காரரசத்தைச் சேர்த்திருந்தால், நாவல் ஒருபடி உயர்வாக அமைந்திருக்கும் என விமர்சகர் கூறியிருந்தார். அவரால் ஏன் அவ்வாறு எழுத முடியாமல் போனது? அவருடைய கணவன் அக்கதையை வாசித்தால், அவருக்கு இவையெல்லாம் எப்படித் தெரியவந்தது என்று சந்தேகப்படுவார். இறுதியில் குடும்பம் குலையும் சூழ்நிலை வருமென்னும் கட்டுப்பாடே அவரை எழுத விடாமல் தடுத்திருக்க வேண்டும்.

### பாலியல் உடல்வலுச் சவால்கள்

பெண்களைப் பாலியல் ரீதியான சவால்களுக்கு உள்ளாக்குவதைவிட அவளது மிருதுவான உடலியலைப் பயன்படுத்தியும் மிரட்டி, வாழும் இடத்தையோ செய்யும் தொழிலைக் கைப்பற்றும் அட்டகாசங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சவால்கள் சமூக வலுவாக்கத்தில் பெண்களைப் புறக்கணிப்பதும் ஈண்டு குறிப்பிடக்கூடியன. 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது எனும் சினிமாப் பாடல், சமூகத் தளத்தில் ஆணும் பெண்ணும் மூலப் பொருள்களாக அமைகின்றனர் என்பதைக் கூறுகின்றது.

இந்த நிலையில், சமூக வலுவாக்கத்தில் பெண்களின் பங்கு மிகப் பிரதானமாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 1950களில் யாழ். குடாநாட்டுச் சமூகத்தால் பெண்கள் போகப்பொருளாகப் பார்க்கப்பட்டமை குறைவெனக்கூறலாம். ஏறத்தாழ 50 வருட கால இடைவெளியில் எல்லாமே தலைகீழாக மாறிப் போகக் காரணம் என்ன? வெளிநாட்டுப் பணம், அதனைத் தொடர்ந்து வெளிநாட்டு மோகம் அந்நியப் பண்பாடு, கலாசார நடைமுறைகளால் குறிப்பாக, பெண்கள் மத்தியில் வளர்ந்த ஆடை அணிகலன் ஊடான சீரழிவுகள் அவர்களை முற்று முழுதாகவே இழக்கச் செய்துவிட்டன.



### பெண்களின் வலுவாக்கப் பங்களிப்பு

சமூக வலுவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பும் இன்றியமையாதது. சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு, தமது எண்ணங்களை ஈடேற்றிய பெண்கள் வரிசையில்- சமூகத் தொண்டில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அன்னை தெரேசா, தாதியச் சேவைக்கு வித்திட்ட புளோரன்ஸ் நைட்டிங்கேள், சமர்க்களத்தில் தனித்து நின்று சமராடிய ஜான்சி ராணி உள்ளிட்ட பலபெண்கள் மனித சமுதாயத்தில் உருவானமை, சமூக வலுவாக்கத்தில் பெண்களின் பங்களிப்புக்குச் சான்று பகர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரங்கள் பறிக்கப்படும் மாகாண சபைகள்

சந்திரசேகரஆசாத்

அண்மையில் இடம்பெற்ற மாகாண முதலமைச்சர்கள் கூட்டத்தின்போது மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவது தொடர்பில் மாகாண முதலமைச்சர்களால் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஊவா மாகாண முதலமைச்சர் மட்டும் தனது எதிர்ப்பை வெளியிடாத போதும் அவர் தனது மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து விட்டுத் தன் முடிவை அறிவிப்பதாகக் கூறியிருந்தார்.

மாகாணங்களில் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கையாள்வதற்குத் தேசிய அபிவிருத்தி அமைச்சு ஒன்று அமைக்கப்பட்டு சில மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அவற்றுக்குப் பொறுப்பாக அதிகாரிகள் குழுக்கள் அமைக்கப்படவும் சட்டம்கொண்டுவரப்படவுள்ளதாகவும் அதற்கு ஒரு தேசிய அபிவிருத்தி அமைச்சர் நியமிக்கப்படுவார் எனவும் அவரின் பொறுப்பிலேயே அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. அதாவது அபிவிருத்தி தொடர்பாக மாகாண சபைகளில் அதிகாரம் ஓர் அமைச்சரின் கைக்கு மாற்றப்படவுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மிகக் குறைந்த அதிகாரங்களில் ஒருபகுதி பறிக்கப்படுவதற்கு எதிராகவே முதலமைச்சர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். சில மாதங்களுக்கு முன்பும் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு நிர்வாகங்களில் ஆளுநர்களின் தலையீடு தவிர்க்கப்படவேண்டும் என முதலமைச்சர்கள் மாநாட்டில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் அது கிடப்பில் போடப்பட்டு விட்டது. அதேவேளையில் வடமாகாண சபை ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணசபைகளின் தலைவர்கள் ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியையோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள்கட்சிகளின்தலைமைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். அப்படியான நிலையில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளில் உறுதியாக நிற்பார்களா என்பது சந்தேகமே! அவர்கள்கடைசியில் கட்சித் தலைமைகளின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலையே ஏற்படும். இப்படியான நிலையில் உறுதியாக நிற்கவேண்டியவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணசபைகளும் அந்தப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுமேயாவர்.

கடந்த அரசின் காலத்தில் மாகாண சபைகளின் உள்ளூராட்சி சபை மீதான அதிகாரத்தை மத்திய அரசின் கீழ்க் கொண்டுவரும் வகையிலான சட்டவரைவின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படவிருந்தன. ஆனால் வடமாகாண சபையின் கடும் எதிர்ப்பின் காரணமாக அது நிறைவேறவில்லை.

அதேபோன்று திவிநெகும சட்டத்தின் மூலம் மாகாணசபைகளின் 12 இற்கு மேற்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் உயர் நீதிமன்றம் அதை அனுமதிக்காத நிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க பதவியிறக்கப்பட்டு பின் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்பு உயர்நீதிமன்றத்தினால் மீண்டும் பதவி வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி திவிநெகும சட்டவரைவு வாபஸ் பெறப்படவில்லை என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும். அதாவது கடந்தகாலத்தில் ஆட்சியில் இருந்த மகிந்த அரசு என்றாலென்ன அல்லது இன்று அரசு கட்டிலிலிருக்கும் கூட்டாட்சி அரசு என்றாலென்ன மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பதில் ஒரே இலக்கை நோக்கிப் பயணிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் மகிந்த அரசு மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தபோதெல்லாம் வடமாகாணசபையைத் தவிர்ந்த ஏனைய சகல மாகாண சபைகளும் அரசுக்கு ஆதரவை வழங்கின. ஆனால் தற்சமயம் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய அபிவிருத்திக்கான அமைச்சு உருவாக்கும் சட்டவரைவுக்கு எதிராக ஏழு மாகாண சபைகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சர்களை அழைத்து விளக்கக் கூட்டத்தை நடத்தியபோதும் எந்த ஒரு மாகாண சபையையும் சட்டவரைவை ஆதரிக்க வைக்க முடியவில்லை. மேலோட்டமாகப் பார்க்கும்போது இது ஓர் ஆரோக்கியமான அரசியல் நகர்வாகவே தோன்றும். அதாவது மாகாண

> திவிநெகும சட்டத்தின் மூலம் மாகாணசபைகளின் 12 இற்கு மேற்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் உயர் நீதிமன்றம் அதை அனுமதிக்காத நிலையில் உயர்நீதிமன்ற நீதிஅரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க பதவியிறக்கப்பட்டு பின் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சபைகளுக்குரியஅதிகாரங்களைப் பறிக்கும் தொடர்முயற்சிகளின் ஒரு பகுதியை எதிர்க்கும் ஒரு நியாயபூர்வமான முயற்சியென்றே கருதத் தோன்றும்.

ஆனாலும் சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன. கடந்த ஆட்சியின் போது மாகாணசபையின் அதிகாரங்களைப் பறிக்கும் சட்டவரைவு கொண்டுவரப்பட்டபோது எட்டு மாகாண சபைகளும் எவ்வித நிபந்தனையும் இன்றி ஏற்றுக் கொண்டன. இன்று அதே மாகாணசபைகள் மாகாணங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இந்த நிலமை ஏன் ஏற்பட்டது என்ற கேள்விக்கு நாம் விடையைக் கண்டுபிடிப்பதன் மூலம் சில அடிப்படைப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள முடியும். கடந்த ஆட்சிக் காலத்தின் போது மத்திய அரசிலும் மாகாண அதிகாரங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரே ஆட்சியிலிருந்தனர். வடக்கு மாகாணசபை மட்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தில் இருந்தது. எனவே மத்திய அரசின் திட்டங்களை ஏனைய எட்டு மாகாண சபைகளும் கேள்விக்கு இடமின்றி ஏற்றுக்கொண்டன. இன்று மத்திய ஆட்சி தேசிய நல்லிணக்க அரசின் அதிகாரத்திலுள்ளது.

அதிலும் அமைச்சரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் மாகாண அரசுகளோ ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் கைகளில் உள்ளன.

எனவே மேற்படி சட்ட வரைவுகளை மாகாணசபைகள் நிராகரித்தமையானது மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கு எதிரான நடவடிக்கையா அல்லது மத்திய ஆட்சிக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இது மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கெதிரான போர்க்குரல் என்றால் கடந்த ஆட்சிக் காலத்தில் மாகாணசபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட போது தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டும் அப்போது அவற்றை ஆதரித்த இந்தச் சபைகளின் இப்போதைய எதிர்ப்பு, அதிகாரப் பறிப்புக்கெதிரான உண்மையான எதிர்ப்பு என்று சொல்லிவிட முடியாது.

இப்படியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2017இல்தான் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தப் போகிறார் எனச் சவால் விட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச எப்போதுமே அதிகாரப் பரவலாக்கத்துக்கு விரோதமானவர் என்பது உலகறிந்த உண்மை. அண்மையில்கூட அவர் சீனாவில் வைத்து மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வதன் மூலம் நாடு ஒன்பது துண்டுகளாகப் பிரிந்து விடும் எனக் குறிப்பிட்டதை மறந்து விட முடியாது.

அது மட்டுமன்றி ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய பங்காளிகளான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்படுவதற்கு தீவிர எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் என்பதுடன் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை மூட்டி அணையவிடாமல் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருபவர்கள்.

எனவே இன்று தேசிய அபிவிருத்திச் சட்டத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அதிகாரத்திலுள்ள மாகாண சபைகள் எடுத்த தீர்மானங்கள் மாகாணசபைக்கு தற்சமயம் உள்ள அதிகாரங்களை காப்பாற்றும் நோக்குடன் எடுகப்பட்டவையயன நம்பமுடியுமா?

அடிப்படையில் இது ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் அதன் அமைச்சரவைக்கும் எதிராக எடுக்கப்பட்ட தீர்மானமேயொழிய மாகாணங்களுக்கான அதிகாரங்களைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டவையல்ல.

இன்னொருபுறம் புதிய அரசமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசால் முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைகளும் விவாதங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கலாநிதி ஜெயவிக்கிரமபாகு தலைமையிலான குழுவினர் மேற்படி ஆலோசனைகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கத் தயாராகி வருகின்றனர்.

இந்தப் புதிய அரசமைப்பின் மூலம் ஒன்றிணைந்த நாட்டில் வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான அதிகாரப்பரவலை உள்ளடக்கியதான இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வு முன்வைக்கப்படுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இப்படியான ஒரு தீர்வை எதிர்த்த போதிலும் கூட அரசின் தரப்பில் இது தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இப்படியான ஒரு சூழ்நிலையில் ஏற்கனவே இருக்கும் குறைந்த பட்ச அதிகாரங்களையும் பறிக்கும் வகையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசால் தேசிய அபிவிருத்திச் சட்ட வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

எந்த அரசிடம் தமிழ்த் தலைமை அதிகாரப் பகிர்வைக் கோரி நிற்கிறதோ அந்த அரசு அதிகாரப்பறிப்புக்கான சட்டவரைபை முன் வைத்துள்ளது.

இவற்றிலிருந்து நாம் தெளிவாகவே ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். ஐக்கிய தேசிய முன்னணியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ மனப்பூர்வமாக அதிகாரப்பகிர்வை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழ் மக் களுக்கு அதிகாரம் பகிரப்படுவதை இனவாதக்கண் கொண்டு எதிர்க்கிறார்கள் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் திவிநெகும, உள்ளூராட்சி சபைகள் சட்டவரைவு, தேசிய அபிவிருத்திச் சட்டவரைவு என்பவற்றின் மூலம் சிங்கள மக்களிடம் அதிகாரம் பரவலாக்கப்படுவதையும் எதிர்க்கின்றனர் என்பது நிரூபணமாகியுள்ளது. ஆனால் சிங்கள மக்கள் அதை உணர விடாது இனவாதம் பூசப்பட்டு அதிகாரப்பரவலாக்கத்தின் மூலம் நாடு இரண்டாகப் பிளவுபட்டு விடும் என்ற பரப்புரையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்கள் அவர்கள் எந்த இனமாக இருந்தாலும் அவர்களின் மொழி தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றைப்பேணிப்பாது காக்கவும் தமது தேவைகள் வளங்கள் சுற்றுச்சூழல் என்பவற்றுக்கு அமைவாகப் பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் அவர்களின் கையில் அதிகாரங்கள் தேவை.

ஆனால் அதிகாரபீடங்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை. எல்லா இனங்களையும் எல்லாப் பிரதேசங்களையும் அவர்கள் தங்கள் கையில் வைத்துக் கொண்டு பெருங்கொள்ளை லாபமீட்டும் கைத்தொழிலாளர்களுக்கும் வர்த்தக முதலைகளுக்கும் சாதகமான முறையில் முழு பிரதேசங்களையும் பிரதேச மக்களையும் தேசிய இனங்களையும் வடிவமைக்க முயல்கின்றனர். எனவே அவர்கள் வாயளவில் அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசிக் கொண்டாலும் நடைமுறையில் அதை ஏற்படுத்துவதில்லை. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தால் சூழல் மாசடைவது பற்றியோ, மீன்பிடியில் பாதிப்பு ஏற்படுவது பற்றியோ சம்பூர் அனல் மின் நிலையத்தால் அந்தப் பகுதியே சுடுகாடாகும் அபாயம் பற்றியோ வெலிவேரியாவில் இறப்பர் தொழிற்சாலையால் குடிதண்ணீர் மாசடைவது பற்றியோ, உமா ஓயா திட்டத்தால் நிலம் தாழிறங்குவதும் கட்டடங்கள் இடிவதும் பற்றியோ, கொத்மலை திட்டத்தால் மண்சரிவுகள் ஏற்படுவது பற்றியோ அவர்கள் கவலைப்படுவது கிடையாது.

அவர்களின் தேவையெல்லாம் கைத்தொழிலதிபர்களினதும் வர்த்தக முதலைகளினதும் நலன்கள் தான்.

அதிகாரம் பிரதேசங்களுக்கோ மகாணங்ககளுக்கோ பகிர்ந்தளிக்கப்படுமானால் அவர்கள் தமது மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்போவதில்லை. அவர்கள் அபிவிருத்தித் திட்டங்களை தமது மக்களைப் பாதிக்காத வகையில் அனுமதிப்பார்கள்.

அதன் காரணமாகவே அதிகாரபீடங்கள் அதிகாரம் பரவலாக்கப்படுவதை முறியடிக்க பல விதங்களிலும் முயன்று வருகின்றன.

இப்படியான சதிகளை சிங்கள அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவதாகத் தெரியவில்லை. புரிந்து கொண்டாலும் இன வாத மகுடியை ஊதியவுடன் அதற்கேற்ற வகையில் ஆடத்தொடங்கி விடுகின்றனர்.

உள்நோக்கம் எப்படி இருந்த போதிலும் ஏழு மாகாண சபைகள் மாகாணங்களின் அதிகாரங்களை பறிப்பதற்கு எதிராக தீர்மானங்களை எடுத்தது ஒரு முற்போக்கான தொடக்கமாகும். எனவே இப்படியான ஒரு தொடக்கத்திலிருந்து அவர்கள் மேலும் முன்செல்லும் வகையில் தமிழ்த் தலைமைகள் நமது அரசியல் நகர்வுகளை மேற்கொள் வது ஒரு முக்கிய தேவையாகும். எனவே மாகாணங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கெதிரான போராட்டத்தில் சிங்கள முஸ்லிம் சக்திகளுடன் ஐக்கியப்பட்டு முன் செல்வது தமிழ்த் தலைமைகளின் கடமை என்றே தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

> **ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்கள் அவர்கள் எந்த இனமாக இருந்தாலும் அவர்களின் மொழி தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றைப்பேணிப்பாது காக்கவும் தமது தேவைகள் வளங்கள் சுற்றுச்சூழல் என்பவற்றுக்கு அமைவாகப் பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் அவர்களின் கையில் அதிகாரங்கள் தேவை.**

# ஊற்று நீர் விழியில் கொண்டோம்

கார்த்திகை மாதம் கருமுகில் தோன்றிப்
பார்த்திருக்க மண்ணில் பெருமாரி பொழியும்
வார்த்தைகளில் தோன்றா வடிவங்களை எண்ணி
ஆர்த்துவிழும் அலைபோல் எம் விழிநீர் சொரியும்
சேர்த்து வைத்த சோகம் சொல்வது போல் உமக்காய்
ஆண்டிலொரு முறைதான் கார்த்திகைப் பூ விரியும்
கோர்த்து மல ரெடுத்து உம்பாதத்தில்சூட
உள்ளொளிதான் பெருகி நெஞ்சமது எரியும்

காற்றினில் கரைந்த போதும்
கடலினில்அணைந்தபோதும்
ஊற்றுநிர் விழியில் கொண்டோம்
உலையிட்ட மெழுகு ஆனோம்
ஏற்றுதல் கொண்டே உம்மை
எழுச்சியாய் இந்த நாளில்
போற்றுவோம் புகழ் விண்ணோரே
பொய்மை வாழ்வறுத்துப் போனீர்
மானத்தைப் பெரிதென்றெண்ணி
மலை நிகர் தடை வந்தாலும்

வானத்தை நிமிர வைத்து வல்லமை புரிந்து எங்கள்
ஊனத்தை உருகச் செய்த உணர்வுசால் உரவோர் நீரே
ஈனத்தை இழிதாய் ஆக்கி இறுமாப்பு அடையவைத்தீர்

நிலமெனும் வயிற்றைக் கீறி உங்களை நட்டுவைத்தோம்
வலி மிகு நெஞ்சம் கொண்டே
வன்மை யோடிவற்றைச் செய்தோம்
பொலிவுறும் தேகம் மூடிப்
பொன்னென மண்ணைப் போட்டோம் - இன்று
நலிவுறும் எம்மைக் காக்க யாருளார் பூமி மீதில்


உங்கள் பேரிலே அரசியல் செயும்
பொய்மை வாதிகள் அகன்று போகவே
கங்குலாகிய எங்கள் வாழ்வது
இனியென்றாகிலும் தொலைந்து போகவே
தங்கள் மீதொரு கவிதை பாடவே
மாண்ட கவிஞர்கள் மீண்டும் எழுகவே
பொங்கு தமிழினால் புன்மை சாகவே
பனியினில் புதுப் பரணி எழுகவே

வி.யாசகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## உலக அளவில் வசூல் சாதனை படைத்த தங்கல்

நிதேஷ் திவாரி இயக்கத்தில் ஆமீர் கான் மல்யுத்த வீரராக நடித்த தங்கல் படம் கடந்த மாதம் 23ஆம் திகதி வெளியானது.

படம் வெளியான இரண்டே நாள்களில் 100 கோடி வசூல் செய்தது. தங்கல் படம் இதுவரை இந்தியாவில் 426 கோடியும், வெளிநாடுகளில் 158.7 கோடியும் வசூல் செய்துள்ளது. ஆகமொத்தம் ஆமீர் கானின் தங்கல் படம் உலக அளவில் 585 கோடி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது.

சல்மான் கான் மல்யுத்த வீரராக நடித்த சுல்தான் படம், மொத்தமாக 572 கோடி வசூலித்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மல்யுத்த வீரரான மகாவீர் சிங் போகத் தனது மகள்கள் கீதா குமாரி மற்றும் பபிதாவை மல்யுத்த வீராங்கனைகளாக்கி அழகு பார்த்த உண்மை கதைதான் தங்கல் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 1 | 5 | 8 | 2 | 6 | 9 |
| 5 | 6 | 1 | 2 | 9 | 3 | 7 | 8 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 |
| 6 | 9 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 8 |
| 4 | 1 | 2 | 8 | 3 | 9 | 6 | 7 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 3 |
| 7 | 3 | 9 | 5 | 6 | 4 | 8 | 1 | 2 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 1 | 3 | 4 | 7 |
| 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உற்சாக பானம்




அண்ணே ஆடு, மாடெல்லாம் இலைதழையெல்லாம்தானே சாப்பிடுது? ஆமாண்டா...



அப்போ அது சைவம்தானே? அதை சாப்பிட்டா நாமும் சைவம்தானே? இதைச் சொன்னா தப்பாண்ணே!

காசு இல்லாமல் காசோலை திரும்பி வந்தால் கடும் தண்டனை: புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரத் திட்டம்




அப்ப பேங்ல காசு இல்லன்னா யாருக்கு தண்டனை குடுப்பிங்க ஆபிசர்...

வயசுப் பொண்ணு ஒன்று நம்ம தமிழில 'மாமா'ன்னு கூப்பிட்டா எவ்வளவு சந்தோசமா இருக்கு. அதே ஆங்கிலத்தில அங்கிள் என்று கூப்பிட்டா எவ்வளவு கடுப்பு வருகுது. இதைத்தான் பாரதி "யாமறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று சொல்லி யிருப்பாரோ?

**கோழியின் கிறுக்கல்!**

உருப்படியாய் எதுவும் செய்யவில்லை என்ற எண்ணம் மட்டும் வருடா வருடம் மிச்சமாக இருக்கின்றது!



**மேடம்:** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். முன்பின் தெரியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபம்:** திட்டமிட்டவை தாமதமாகும். மறைமுக விமர்சனங்களும், தாழ்வு மனப்பான்மையும் வந்துச் செல்லும். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பாமல் நீங்களே முடிவெடுக்கப்பாருங்கள்.

**மிதுனம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவுப் பெருகும். வைபவங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**கடகம்:** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள்.

**சிங்கம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் தொடர்வதால் சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்.

**துலாம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். [illegible] நன்மை உண்டு. [illegible] சுமுகமாக முடியும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். விசேட வைபவங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத் தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**மீனம்:** கடந்த இரண்டு நாள்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் விலகும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பழுதான மின்னணு சாதனங்களை மாற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திரை தகுமோ?

(31 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரச் சொல்லியிருக்கினம்"

பேக்கரிப் பேரம்பலத்தார் தன் பங்கிற்கு இப்படி ஏதேதோ சொல்லி முடித்து விட்டார்.

"கேட்டுதே பெரியண்ணை! அவன் பாவி விக்கிர மாதித்தனும் சும்மா இலேசுப்பட்ட ஆளெண்டு மட்டும் விளங்கிக் கொள்ளாதேங்கோ! அவன் ஊசியுக்கிளாலை போய், உலக்கை யுக்கி ளாலை வருவன். ஏய்ச்சுப் போடுவாங்கள் கவனமாயிருக்க வேணும்."

சொல்லிவிட்டுக் காதிற்குள் சுட்டு விரலை விட்டுத் துளாவிக் கொண்டிருந்தான் மூர்த்தி.

"எட உதெல்லாம் தெரிஞ்ச விடயம்தான். இப்ப என்னெண்டால் அவசரமான விடயங்களைச் சொல்லி விடுங்கோ. என்ன எண்டு சொல் லுங்கோ பாப்பம்!"

"நீங்கள் தான் சொல்லுங்கோ வாத்தியார்."

சரி! அதுவும் நான் தான் சொல்ல வேணுமே! சொல்லுறன். எடே மொக்கங்களே! இப்பத்தை நிலைமையிலை அவசரமான விடயமென்ன வெண்டால், உவங்கள் விக்கிரமாதித்தன்ரை ஆக்கள். எங்கடை ஊருக்கை வந்து எங்கடை சனங்களெல்லாத்தையும் அடிச்சது அழிச்சது, பெண் பிரசுகளைக் கெடுத்தது எல்லாத்துக்கும் பதில் சொல்லவேணும் - நியாயம் கிடைக்க வேணும், தண்டனை பெற வேணும்."

"ஆர்வாத்தியார் விக்கிரமாதித்தன் தானே!"

அப்பாவித்தனமாகக் கேட்டார் வெள்ளை வேட்டி வேலுப்பிள்ளையர். "இஞ்சை வேலாத்தையர்! விக்கிரமாதித்தனோ மேத்திரியார் பொன்னுத்துரையரோ! ஆரெண்டாலும் இதுக்குப் பதில் சொல்லித் தான் ஆக வேணும்.

"அது என்ணெண்டு வாத்தியார்! கோவிக்காதையுங்கோ! தெரியாமல்தான் கேக்கிறன். எங்களுக்கு உதைப்பற்றியொண்டும் தெரியாது. இராச குமாரன் ஆக்கள் கொம்பனி நடத்தையுக்கை நடந்த விடயத்தை அவங்களிட்டையே போய்க் கேளுங்கோ எண்டு சொல்லிப் போட்டால்...!"

"அப்பிடியொண்டும் சொல்லேலாது சிவகுருவர்! ஆர் கொம்பனி நடத்துகினமோ அவை தான் பொறுப்புச் சொல்ல வேணும். எப்படிப் பார்த்தாலும் அவங்கடை ஆக்கள் செய்த குற்றத்துக்கு அவங்கள் தான் மறுமொழி சொல்ல வேணும்."

மாணிக்கம் வாத்தியாரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. கண்களிரண்டும் கொவ்வைப் பழங்களாகச் சிவந்திருந்தன. நறநறவெனப் பற்களைக் கடித்தார்.

"என்ன வல்லிபுரத்தார் வெத்திலைச் சரையோ! எனக்குமொருக்கால்த் தா! ஒரு பிளகுபொல் லமெடுத்துப் போட்டிட்டுத் தெல்லாம். இண்டைக்கு என்ரை சரையை மறந்து போய்விட்டிட்டு வந்திட்டன்."

"மறந்து போனியோ! உண்ணாணைக் கேக்கிறன். நீ எப்ப எண்டாலும் காசுக்கு வாங்கி வெத்திலை போட்டிருக்கிறியே! கேவலம் கெட்ட பிழைப்பு! இந்தா பிடி. கொண்டு போய்ப் போடு!"

ஆத்திரத்துடன் வெற்றிலைச் சரையை எறிந்தார் வல்லிபுரத்தார்.

"டேய் டேய்! கொஞ்சம் சும்மாயிருங்கோடாப்பா! மனிசர் படுற பாட்டுக்கை இதுகள் ஆட்டுக்கை மாட்டை விட்டுக்கொண்டு....!

"இப்ப வாத்தியார்! எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லு றன். அவங்கள் தாங்கள் செய்ததெல்லாம் பிழையெண்டு சொல்லிப் போட்டாங்கள் தானே!"

குழந்தை வேலர் குழைந்தார்.

"அது சரி குழந்தையர்! அதுக்கு விசாரணை வேணும். அடாவடி செய்த அவையின்ரை ஆக்களைப் பிடிச்சு விசாரிச்சுத் தண்டனை குடுக்க வேணும். அதைத் தான் நாங்களிப்ப கேட்க வேணும்." "அதுக்குத் தானே அதைத் தாங்கள் விசாரிக்கிறமெண்டு விக்கிரமாதித்தன் ஆக்கள் சொல்லுகினமாம்"

"அவையின்ரை ஆக்களை அவையே விசாரிக்கிறது! வேலிக்கு ஓணான் சாட்சி. உது நல்லகதை. இஞ்சார்! உந்த என்னம் பொரு சீலம்பாய்க்கதையள் ஒண்டும் சரிவராது. அயல் அட்டையிலை நாலு விடயம் தெரிஞ்ச நியாயமான மனிசர் இருக்கிறாங்கள் தானே! அவங்களைக் கொண்டு சரியாய் விசாரிச்சு உவைக்கு நல்ல தண்டனை வாங்கிக் குடுக்க வேணும்"

"வாத்தியார்! எப்படிச் சொன்னியள்! அப்பத்தான் உவையின்ரை வண்டவாளமெல் லாம் வெளியிலை வரும். பாக்கியநாதனும் சுருதி தப்பாது வாத்தியாருக்குப் பக்கவாத்தியம் வாசித்தார். "அப்ப வாத்தியார்! அடைச்சு வைச்சிருக்கிற எங்கடை ஆக்களை எப்ப விடுறியள் எண்டு கேக்கிறதில்லையோ!"

"பொறப்பா வேலாத்தை! ஆடறுக்க முந்தி என்னவோ எண்ட மாதிரி... நீ இதுக்கை! இப்ப உதுகளை விட்டிட்டு வாத்தியார் சொல் லுறதுகளைக் கதைக்கட்டும். அதுக்குப்பிறகு படிப்படியாய் எல்லாம் சரி வரும். அதுதானே நிறுவனத்தில எங்கடை ஆக்களுக்கும் உரிமை யிருக்குதெண்டு சொல்லிப் போட்டினம் தானே! இனிப் பம்மாத்து விடேலாது."

சொல்லியபடி வாய்க்குள்ளிருந்த வெற்றிலைச் சாற்றை வெளியில் போய்த்துப்பி 'லோட்'டைக் குறைத்து விட்டு அமர்ந்து கொண்டார் சிவப்பிரகாசம்.

'உதொண்டும் வந்திருக்காது. அந்த நேரம் உந்தக் நிறுவனத்தின்ரை லைசென்சை வெள்ளையண்ணை ஆக்களிட்டை நாங்களே நேரடியாய் வாங்கியிருந்தால் இப்ப உவை ஒருத்தரையும் கெஞ்ச வேண்டிவந்திருக்காது."

எப்பிடிச் சொன்னிர் செல்லப்பர்! உவர் பொன்னப்பா, இராமுக்கிழவன் ஆக்கள் நம்பிக் கெட்டவை. அது தான் வந்த பிரச்சினை!".

"அதுவும் போகட்டும். எங்கடை வேலாத்தையின்ரை குண்டுப் பெடியன் ஆக்கள் இப்பவும் இருப்பங்களெண்டால் உவை உப்பிடி ஏய்க்க ஏலுமே! அவங்கள் வாய்திறக்க இவைக்குப் பயத்திலை ஒண்டுக்குப் போகிடும்."

"டேய் டேய்! முடிஞ்சதுகளை விட்டிட்டு நடக்கப் போறதைக் கவனியுங்கோ!"

நேரம் மாலை மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. திருஞானசம்பந்த சிவத்தா ருக்குச் சற்று உறங்க வேண்டும் போன்றி ருந்தது. அவரையுமறியாது தூங்கி வழிந்து கொண்டிருந்தார். உண்ட களை தொண்ட னுக்கு முண்டு. நித்திரை ஒருபுறம் சுழற்றிய டித்தது. மறுபுறம் சிந்தனைகள் மழை காலத்து ஈசல்களாகப் பறந்தலைந்து கொண்டிருந்தன.

"கடவுளே! உந்தப் பெரிய பொறுப்பை என்னட்டை நம்பித் தந்திருக்கிறாங்கள். உங்கை விக்கிரமாதித்தனையோ மேத்திரி பொன்னுத்துரையையோ எப்பிடி வளை ச் செடுக்கப் போறனோ! ஏதேனும் பிசகினால் என்னை மலைமாதிரி நம்பியிருக்கிற இந்தச் சனங்களுக்கு என்ன பதில் சொல்லுறது!"

மண்டையைப் பிய்த்துக் கொண்டார்.

மாணிக்கம் வாத்தியார் சொல்லி விட்டுக் கதி ரையிலிருந்து எழுந்தார். காத்திருந்தது போலப் பெரியண்ணரும் ஆவலுடன் எழுந்து கொள்ள எல்லோரும் களையத் தொடங்கினர்.

"பெரியண்ணை! கதையொண்டு. நித்திரை கொள்ளுறதெண்டால் இஞ்சையே நல்லாய் நித்திரை கொண்டுட்டுப் போங்கோ. பேந்து அங்கை போய் நித்திரை கொள்ளக் கூடாது. உங்களை நம்பித் தான் அனுப்புறம். அங்கைபோய் நீங்கள் நித்திரை கொண்டியல் எண்டால் இஞ்சை உங்களை நம்பி இருக்கிற நாங்கள் இனிமேல் வாழ்க்கையிலை நித்திரை கொள்ளேலாமல்ப் போயிடும். கவனம்!"

மாணிக்க வாத்தியாரின் இந்தக் கூற்றுக்குப் பதிலேதும் கூறாது மௌனமாகக் காரில் ஏறிக் கையை அசைத்துப் பிரியாவிடை பெற்றுக் கொண்டார் பெரியண்ணர்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 454

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | ■ | 4 | 5 |
| 6 | | ■ | | ■ | 7 | | |
| | ■ | 8 | | 9 | ■ | 10 | |
| ■ | 11 | | ■ | 12 | 13 | | ■ |
| 14 | | ■ | 15 | | | ■ | 16 |
| | ■ | 17 | | ■ | | ■ | |
| 18 | | | ■ | 19 | ■ | 20 | |
| | ■ | 21 | | | ■ | | ■ |

அனுப்புபவர் பெயர்:.......................................................

முழுமையான தபால் விலாசம்: ...................................

.......................................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. அந்தஸ்து. வயதுப்படி வேறுபாட்டுக்குக் காரணமான தகுதி
4. பங்கிடு
6. பிரி
7. சூரியன்
8. பறக்கும் பூச்சி இனம். இதில் பொன் நிறமும் உண்டு.
10. கடலுக்கு எதிரான சொல்
11. பசளை
12. அழிக்க காரணமாக இரு
14. போதை தரும் பானம்
15. வெறுமை என்ற பொருள்பட வரும் பெயரெச்சம்
17. துறவி
18. சுவிஷேசம் எழுதியவர்களுள் ஒருவர்
2. வனம்
21. வரவழை (பொருளை)

### மேலிருந்து கீழ்

1. தப்பு
2. சோதிடம் சார்ந்த கால வேளை
3. அரசர்கள் பயணம் செய்யப் பயன்படுத்திய வண்டி
4. வருந்தித் தவி
5. ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுத்தப்படும் ஒரு மிருகம்
8. இரும்பில் பிடிப்பது
9. ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவது
11. சிறு தானியம்
13. பெண்
14. உயர்கல்வி பெறக்கூடிய தரமான பாடசாலை
15. இதுவும் வாதும் வேதனை செய்யும்
16. தண்டனைகளில் ஒன்று
17. இறக்காத
19. பாடல் யாப்பவன்
20. மழை முகில்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 452 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) சிகரம் (3) மாளிகை (5) உடு (6) மது (7) பறி (9) புண் (10) உதவி (12) மகுடம் (13) வைரி (14) கற (15) காலை (16) சவால் (18) விருது (19) அதிதி

**மேலிருந்து கீழ்**

(1) சிம்மம் (2) ரவை (3) மாடு (4) கைலி (5) உறி (7) பண்டகசாலை (8) விதவை (09) புகு (11) விரிசல் (12) மற (14) கருவி (15) காது (16) சதி (17) வாதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 452 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

க.விஜயாகாந்தி,
அம்பலம்வளவு, கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

**2 ஆம் பரிசு**

செல்வன் செல்வராசா மிதுனன்,
இல.6 - 8/AC, கரப்புக்குத்தி, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா.

**3 ஆம் பரிசு**

ஹ.நிருஸன்,
இல.11- 2/2 மூர்வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06

**4 ஆம் பரிசு**

திருமதி இன்பராணி செல்வராஜா,
இல.57, ஆனந்தன் வடலி
மூன்றாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

செல்வி ய.அக்சயா,
மீனபவனம், நெல்லியடி,
கரவெட்டி.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.செல்லம்மா,
மே/பா வே.இராசநாயகம்,
சோறன்பற்று, பளை.

அ.அமிர்தநாயகம்,
சாந்தசோலை, அல்வாய்.

பா.கபிலன்,
இல.10, சுதுமலை வீதி, மானிப்பாய்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இல.454 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (18.01.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.454இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.01.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலம்பம் போட்டி 452 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

08.01.2017 முதல் 14.01.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

புதன், கேது, சுக்கிரன், செவ்வாய் நன்மை வழங்குவர். பேச்சு, செயலில் நிதானம் நிறைந்திருக்கும். சகோதரர் வழியில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும். புத்திரரின் செயற்பாடு பெருமை சேர்க்கும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள், உழைப்பால் முன்னேற்றம் அடைவர். மாணவர்கள், படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

## இடபம்

குரு,சந்திரனால்நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரர் தகுதி திறமைகளை வளர்த்துக் கொண்டு முன்னேறுவர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனையை ஏற்று முன்னேறுவீர்கள். உறவினர் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் லாபம்உயரும்.பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

## மிதுனம்

ராகு, சனி, புதன், சுக்கிரன் அனுகூலமாக உள்ளனர். நேர்மை எண்ணம் மேலோங்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். வீடு, வாகனத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள். புத்திரர், படிப்பு வேலையில் முன்னேற்றம் பெறுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்குவர்.

## கடகம்

சூரியன், சுக்கிரன் நற்பலனை வாரி வழங்குவர். தடைகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். வாகனப் பயன்பாட்டால் நன்மை சேரும். புத்திரரின் பிடிவாத செயலை இதமான அணுகுமுறையால் சரி செய்வது நல்லது. வீட்டுத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமைசேர்க்கும். தொழில்வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள், போட்டியில் பங்கேற்று பரிசு வாங்குவர்.

## சிங்கம்

குரு, புதன், சந்திரனால் நன்மை அதிகரிக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகன வகையில் திடீர் செலவு ஏற்படும். புத்திரர் உங்கள் கருத்துக்கு மதிப்பு கொடுப்பர். குடும்பத்தினரின் ஆதரவால் ஒற்றுமை மேலோங்கும். அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாகலாம். தொழில், வியா பாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## கன்னி

சனீஸ்வரர், செவ்வாய், கேதுவால் நன்மை மேலோங்கும். மனதில் இருந்த குழப்பம் விலகும். உடன்பிறந்தவர் வகையில் சுபவிடயம் பற்றிய பேச்சு நடக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரரின் அறிவுத்திறன் மேம்படும். கல்வி, வேலைவாய்ப்பில் வளர்ச்சியடைவர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். வழக்கு, விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில் வியாபாரத்தில் போட்டி இருந்தாலும் லாபம் குறையாத. பணியாளர்கள், நிலுவைப் பணிகளை விரைந்து முடிப்பர். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சூரியன் அனுகூல அமர்வில் அமர்ந்துள்ளனர். திட்டமிட்ட பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பெண்களால் பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும். குடும்பத்தினரின் தேவை தாராள பணச் செலவில் நிறைவேறும். தம்பி தங்கைக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். புத்திரர்கள் நற்செயலில் ஈடுபட்டு பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். மனைவி வழி உறவினர்களின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணியிடத்தில் செல்வாக்குடன் இருப்பர். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். சுறுசுறுப்புடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தம்பி, தங்கைக்கு ஓரளவு உதவுவீர்கள். வாகனப் பயணத்தில் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். சமயோசித புத்தியால் எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். மனைவி பாச உணர்வுடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் குறைகளை சரி செய்வீர்கள். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

## தனுசு

சுக்கிரன், கேது, செவ்வாய் நற்பலன் தருவர். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்துவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர் நுட்பமாகச் செயற்பட்டு கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். உடல்நிலை பலம் பெறும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும்.. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள், விடாமுயற்சியால்கல்விவளர்ச்சி காண்பர். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

## மகரம்

குரு, புதன், சுக்கிரனால் நற்பலன் கிடைக்கும். அக்கம் பக்கத்தவரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். நிலுவைப் பணிகள் விரைவாக நிறைவேறும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர் படிப்பில் சிறந்து விளங்குவர். மறைமுக எதிரி கூட மனம் திருந்தி நட்பு பாராட்டுவர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பெண்கள், உறவினர்களின் மத்தியில் நற்பெயர் பெறுவர். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.


## கும்பம்

சூரியன், புதன், சுக்கிரனால் நன்மை உண்டாகும். வசீகர பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். வாகனப் பயணம் பாதுகாப்பாக அமையும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மனைவியின் அன்பைப் பெற்று மனம் நெகிழ்வீர்கள். தொழில் வளர்ச்சியால் அமோக லாபம் கிடைக்கும். தொழில் ரீதியான பயணம் வெற்றி பெறும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர். மாணவர்கள், படிக்கும் நேரத்தை அதிகப் படுத்துவர்.

## மீனம்

குரு, சூரியன், சுக்கிர[illegible] நற்பலன் வழங்குவர். மனதில் புத்து[illegible]ர்வு பிறக்[illegible]. குறுக்கிடும் தடைகளை ச[illegible]யோசிதமாக சரி செய்வீர்கள். வாகனத்தில் [illegible]ராமரிப்புச் செலவு உண்டாகும். புத்திரரின் தே[illegible]வையறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள். அதி[illegible] நிர்ப்பந்தத்துடன் கடன் வாங்குவதை தவிர்க்கவும். மனைவியின் நற்செயல் பெரு[illegible] தேடித் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை தவறாமல் பயன்[illegible]டுத்துவீர்கள். பணியாளர்கள், பணிச்சு[illegible]யில் இருந்து விடுபடுவர். பெண்கள், [illegible]ழ்ச்சிகரமான வாழ்வு நடத்து[illegible]. மாணவர்கள், வி[illegible]யற்சியால் தேர்ச்[illegible]று வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிப்வைத்த ஓலைப் பைகள் அறிமுகமாகியுள்ளன. துணி, பனை ஓலையால் இவை உருவாக்கப்பட் டுள்ளன. பல வர்ணங்களில் அழகிய வடிவமைப்பில் விற்பனை செய்யப்படுகின்றன. இயற்கைப்பொருளாலான இந்தக் கைப்பை 350 ரூபா விலிருந்து விற்பனை செய்யப்படுகிறது.

# பிரச்சினைகளை எதிர்கொள்ள குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பது எப்படி?

பெற்றோர்களில் இருவிதம் உண்டு. தங்கள் குழந்தைகளுக்கு எல்லாம் செய்து கொடுத்து மகிழ்ச் சியாக வைத் திருக்கும் பெற்றோர் முதலாவது வகை. முடிந்ததை செய்வோம்,
மற்றதை அவர்களாகவே அடைய வேண்டியது என்பதை கொள்கை யாக வைத்துக் கொண்டு குழந் தைகளை இயன்ற வரை காப் பாற்றும் பெற்றோர் இரண்டாவது வகை.
இதில் எது சரி என கேட்டால் இரண் டுமே தவறு என்றுதான் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் செய்து கொடுத்து பாதுகாப்பாகவே வளர்த்தால் பின்னர் குழந்தைகள் தானாக எதையுமே செய்யும் திறமை இல்லாதவர்களாக வளர்ந்து விடுவர். எதையுமே கண்டு கொள்ளாமல் தானாகவே தெரிந்து கொள்ளட்டும் என விட் டால் எல்லாவற்றிற்கும் பயந்து கொள்பவர்களாக குழந்தைகள் வளர்வர். அதிலும் பிரச்சினை களை எதிர்கொண்டு தீர்ப்பதில் திறமை இல்லாமல் வளர்வர்.
பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை வாய்ப்பது அரிது. எல்லோர் வாழ்க்கையுமே பிரச்சினைகளைக் கொண்டது தான். ஒரு பிரச்சினை தீர்வதற்குள்ளாகவே இன்னொரு பிரச்சினை தோன்றிவிடும். யார் தனக்கு ஏற்படும் பிரச்சினைகளை திறமையாகக் கையாண்டு அதைத் தீர்த்து விடுகிறார்களோ அவர்களே வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வதாகக் கொள்ளப்படுகிறது. எனவே நம் குழந்தைகளுக்கு பிரச்சினை தீர்க்கும் திறனை கற்றுக் கொடுப்பது அவசியம்.
சிக்கலைத் தீர்க்கும் திறன் ஒருநாளில் உருவாவதில்லை. வாழ்க்கையின் போக்கில் பல ஆண்டுகள் அனுபவத்தின் காரண மாகவே சிக்கலைத் தீர்க்கும் திறன் வளர்ச்சியடைகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது இது போன்று பத்து நாள்கள் பயிற்சி செய்தால் சிக்கலைத் தீர்க்கும் திறன் வளர்ச்சி அடைந்து விடும் என்பது போன்ற பயிற்சிகள் உளவியலலில் எதுவுமே இல்லை. எதைக் கற்றுக் கொடுக்கிறோம் என்பதைச் சொல்லாமல் மறைநிலையில் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க முடியும்.
பெற்றோர்கள் தங்களுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்க்க முனையும் போது குழந்தைகளை அருகில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தங்கள் பெற்றோர் எவ்வாறு பிரச்சினைகளை அணுகுகிறார் கள், என்னென்ன உத்திகளை பயன்படுத்துகிறார்கள், பிரச்சினை களைத் தீர்க்க முடியா விட்டால் என்ன செய்கிறார்கள்.
தேவைப்படும் போது உதவி கேட்டு பிறரை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பனவற்றை குழந்தைகள் பார்த்தும், அருகிலிருந்து கேட்டும் தெரிந்து கொள்வார்கள்.
இது அவர்கள் படிக்கும் செயல் முறைப் பாடம். வளர வளர பல பிரச்சினைகளைப் பெற்றோர் தீர்ப்பதைப் பார்க்கும் குழந்தைகள் ஒரு கட்டத்தில் வாழ்க்கையின் எல் லாப் பிரச்சினைகளையும் எவ்வாறு தீர்ப்பது என்பதை தெரிந்து கொள்வார்கள். ஆனால் பல பெற்றோர்கள், தங்களுக்கு பிரச்சினை ஏற்படும் போது குழந் தைகள் அருகில் இல்லாதவாறு பார்த்துக் கொள்கிறார்கள்.
பிரச்சினைகளினால் குழந்தைகளின் மனம் பாதிக் கப்படக் கூடாது என்ற எண்ணமே இதற்குக் காரணம். இவ்வாறு குழந்தைகளை பிரச்சினைக்குரிய சூழ்நிலைகளில் இருந்து அப்புறப் படுத்துவது அவர்கள் பிற்காலத் தில் பிரச்சினைகளைக் கண்டாலே ஓடி ஒளியும் நிலைக்கு அடி கோலும்.
ஒருசில குழந்தைகள் எவ்வளவு கற்றுக் கொண்டாலும் தனியாக ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் நிலை ஏற்பட்டால் தவிப்பிற் குள்ளாகிவிடுவர். அது போன்ற நிலை தங்கள் குழந் தைகளிடம் நிலவுவதாக பெற்றோர் நினைத் தால் அந்தக் குழந்தைக்கு அரு கிலேயே இருந்து பிரச்சினை களைத் தீர்க்குமாறு தைரியம் அளிக்க வேண்டும்.
அந்தச் சமயத்தில் எல்லா உதவி களையும், மனரீதியான ஆதர வையும் அளிக்க வேண்டும். ஓரிரு முறை பெற்றோரின் உதவியோடு சிக்கலைத் தீர்ப்பதில் வெற்றி காணும் குழந்தை தன்னால் சிக்கலைத் தீர்த்து விட முடியும் என்ற மனத் தைரியத்தை வளர்த்துக் கொள்ளும்.
விரைவிலேயே தனியாக பிரச்சினைகளை எதிர் கொள்ளும் திறமை அந்தக் குழந்தையிடம் தோன்றி விடும்.



# நுரையீரல் பாதையில் அடைத்திருக்கும் சளியை நீக்க



**தேவையான பொருள்கள்**
தேன் - ஒரு தேக்கரண்டி
தேங்காய் எண்ணெய் - ஒரு தேக்கரண்டி
அப்பிள் சிடர் வினிகர் - ஒரு தேக்கரண்டி
இஞ்சி - தேவையான அளவு

1.சிறிதளவு புதிய இளம் இஞ்சியை நன்கு கழுவி எடுத்துக் கொள்ளுங்கள். மேல் தோலை சீவிய பிறகு துண்டு துண்டாக நறுக்கிக் கொள்ள வேண்டும்.

2 .நறுக்கிய இஞ்சியுடன் ஒரு கப் நீர் சேர்த்து நன்கு கொதிக்க வையுங்கள். நல்ல கொதிநிலை அடைந்த பிறகு 15 நிமிடங்கள் ஆற வைக்க வேண்டும். ஆறிய பிறகு, அதை ஒரு கிளாஸ் டம்ளர் அல்லது போத்தலில் ஊற்றி குளிரூட்டியில் வைத்துவிடுங்கள்.

3. எப்போதெல்லாம் சளித் தொல்லை அதிகமாக உணர்கிறீர்களோ அப்போது அதனுடன் ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி அப்பிள் சிடர் வினீகர் மற்றும் ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் சேர்த்துக் குடிக்கவும்!

4. இது உடலில் அளவுக்கு அதிகமாக சேர்ந்துள்ள சளியை இரண்டு மணி நேரத்திலேயே வெளியேற்று வதற்காக செயற்படத் தொடங்கிகிவிடும். நல்ல பலனளிக்கும்.

## நாளை

**மார்கழி-25**
திங்கட்கிழமை -09.01.2017
திதி: துவாதசி பி.இ.12.23
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப.08.24
ராகுகாலம்:08.02-09.32 வரை
சுபநேரம்:12.32-02.02 வரை
வைஷ்ணவ
சுவர்க்கவாயிலேகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017ஆம் ஆண்டு புனித யோசவ் வாஸ் ஆண்டாக இலங்கை ஆயர் பேரவையால் பிரகடனம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது 2017ஆம் ஆண்டை புனித யோசவ் வாஸ் ஆண்டாக பிரகடனம்செய்து இலங்கை கத்தோலிக்க மறை மாவட்டங்கள் தோறும் அனுசரிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. யோசவ்வாஸ் அடி களாரின் திருவிழா ஜனவரி 16ஆம் திகதி 2017இல் கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

**புனித யோசவ் வாஸ் ஆண்டு 2017 -2018**

2017 ஜனவரி மாதம் 16ஆம் திகதி புனித யோசவ் வாஸ் அடிகளின் திருநாள் தினம் முதல் 2018 ஜனவரி மாதம் 16ஆம் திகதி புனித யோசப்வாஸ் அடிகளின் திருநாள்தினம் வரையிலான காலப்பகுதியை யோசவாஸ் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது 2017 ஆம் ஆண்டை யோசவ்வாஸ் ஆண் டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையை வரவேற்கிறோம். புனித யோசவ் வாஸ் ஆண்டையொட்டி இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலும் சிறப்பு நிகழ்வு கள் ஒழுங்குசெய்யப்படவுள்ளன. புனி தர் இலங்கையில் தடம் பதித்த முக்கிய தலங்களை உள்ளடக்கும் திருயாத்தி ரைகளும் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

**சின்ன உறோம் சில்லாலையில் யாழ். மறைமாவட்ட யாத்திரைத்தலம்**

இலங்கையின் முதல் புனிதர் – இந்தியா கோவா மண்ணின் மைந்தர் யோசவ் வாஸ் அடிகளாரை பாதுகாத்த சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லா லையில் யாழ் மறைமாவட்ட யாத்திரைத் தலம் அமைக்கப்படவுள்ளது. சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லா லைப் பங்கில் அமைந்துள்ள கதிரை மாதா ஆலயம் இலங்கையில் உள்ள ஒரேயொரு ஆலயமாகும். இந்தப் பெய ரில் இலங்கையில் வேறெங்கும் ஆல யங்கள் இல்லை. 400 ஆண்டுகால விசுவாச வாழ்வு வாழ்ந்த சில்லாலைக் கிராமத்தின் கதிரைமாதா ஆலயப் பங்கு மக்கள் – கதிரைச்செல்வியே, எம் ஊர் இன் பத்தாய் நீயே, உம்மையே நம்பி இன்னி லம் வாழும் உம் மக்களைப் பாராயோ சீரிய கதிரைச்செல்வியே – என்று நம் பிக்கையோடு தினமும் பாடி சாட்சிய வாழ்வு வாழ்ந்து சரித்திரத்தில் இடம் பிடித்துள்ளார்கள். யோசவ்வாஸ் அடி களார் தமது பணிக்காலத்தில் (1687 - 1711) மூன்று ஆண்டுகள் தமது இருப் பிடத்தை சில்லாலையில் அமைத்துக் கொண்டார் எனச்சரித்திரச்சான்றுகள் தெரிவிக்கின்றன.


ஏற்கனவே தமது கிறிஸ்தவ முன்மாதி ரியான வாழ்வால் சின்ன உறோம் எனப்புகழ் பெற்றிருந்த இவ்வூர் மக்கள் யோசவ்வாஸ் முனீந்திரருக்கு புகலிடம் கொடுத்து பாதுகாத்து பராமரித்தமை யால் இன்றும் வரலாற்றில் பேசப்படு கிறார்கள். இவர்களின் இந்தப் பணிக்கு கௌரவம் கொடுப்பது போல் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் யாழ். மறை மாவட்ட யாத்திரைத்தலம் சில்லாலை யில் அமைக்கப்படுகிறது.

இது பற்றி சில்லாலைப் பங்குத்தந்தை ஏ. அகஸ்ரின் அடிகளாரிடம் கேட்ட போது இது உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தியாகும். ஏற்கனவே கொட்டடியில் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்த யோசவ்வாஸ் அடிகளாரின் யாத்தி ரைத்தலம் காணி உரிமை தொடர்பாக கைவிடப்படவேண்டிய நிலை ஏற்பட்ட மையால் யாழ். மறைமாவட்டத்தில் யோசவ் வாஸ் அடிகளாருக்கு புதிய யாத் திரைத்தலம் ஒன்றை அமைக்க வேண் டிய தேவை ஏற்பட்டது. எனவே சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லா லைப் பதியில் புனித யோசவ்வாஸ் அடிகளாருக்கு சிறந்த யாத்திரைத்தலம் அமைப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது என்றார்.

**சில்லாலையில் யோசவ்வாஸ் அடிகளார்**

1687 ஆம் ஆண்டு யோசவ்வாஸ் அடி களார் சில்லாலைக்கு வரும் போது கொலரா நோயினால் பாதிக்கப்பட்டி ருந் தார். மூப்பனாரின் மனைவி அடிகளா ரைப் பராமரித்தார். குணமடைந்த பின் யோசவ் வாஸ் அடிகளார் ஆரோக்கிய மாதா என சில்லாலை கதிரை மாதா வைப் புகழ்ந்ததோடு அவரை மருந்து மாதா எனவும் அழைத்தார். யோசவ் வாஸ் அடிகளாரை வருத்தத்தில் பாது காத்து பராமரித்தமையால் சில்லாலை வைத்தியம் புகழ்பெற்று விளங்குகிறது என ஊர் மக்கள் நம்புகின்றனர். – எல் லோரும் கைவிட்டால் சில்லாலை வைத் தியம் – என்று கூறப்படுகின்ற வைத்தியம் சில்லாலை கதிரை மாதாவின் அருள் ஆசியே என்று கூறப்படுகின்றது. மூதா தையரான காயர் பிரான்சிஸ் பிள்ளை வேத விதிகளை மதிக்காது – ஞாயிறு திருப் பலிக்குச் செல்லாது – வீட்டை ஓலையால் மேய்ந்துகொண்டிருந்த போது வீட்டு வேலையை விட்டு விட்டு பூசைக்கு வருமாறு யோசவ்வாஸ் அடிகளார் ஆள் அனுப் பியும் அவர் செவிசாய்க்காமை யால் காயர் வீடு தீப்பற்றி எரியட்டும் என்று யோசவ்வாஸ் அடிகளார் கூற – வீடு தீப்பற்றி எரிந்தது. தன் குற்றத் தையும் தண்டனையையும் உணர்ந்த காயர் ஓடிச்சென்று யோசவ்வாஸ் அடி களாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார். யோசவ்வாஸ் அடிகளார் அவரை மன்னித்து தன்னிடமிருந்த சிலுவையைக் கழற்றி இச்சிலுவை உன்னிடம் உள்ளளவும் குறைவிலாச் சோறும் புத்திர பாக்கியமும் உண்டு என வழங்கியதாக அறியவருகின்றது. சிலு வையோடு பெரிய மட்பாண்டத் தையும் ஆசீர்வதித்து இக்கிராமத்தில் இறை அழைத்தல்களும் இறை ஆசீரும் என் றும் நிலைக்கும் எனக்கூறியுள்ளார் என வும் தெரியவருகிறது. அந்த மட் பாண்டத் திற்கு என்ன நடந்தது என்பது தெரியாது. சில்லாலை பங்கு யோசவ்வாஸ் அடிக ளரின் வாழ்த்துதலுடன் யாழ். மறை மாவட்டத்திலேயே அதிக தேவ அழைத் தல்களின் விளை நிலமாக விளங்கு கிறது. ஏறக்குறைய 39 குருக்களும் 43 கன்னியர்களும் இறை பணிக்கு தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

யோசவ்வாஸ் அடிகளாரால் 400 வரு டங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட திருச் சிலுவை காயர் குடும்ப இனத்தவராகிய மடுத் திருப்பதியில் பணியாற்றும்



மரியநாயகம் மனோகரி குடும்பத்தின் பாதுகாப்பில் இன்றும் உள்ளதாக தெரி விக்கப்படுகிறது. யோசவ்வாஸ் அடி களாரின் பணியினை நினைவுகூரும் விதமாக அவர் நாற்சதுரக் கட்டடம் அமைத்து பணியாற்றியதாக சொல்லப் படும் இடத்தில் (முன்னர் திருக்குடும்பக் கன்னியர்களின் மடம் அமைந்திருந்த இடம்) யோசவ்வாஸ் அடிகளாரின் விண் ணகப் பிறப்பின் 300 ஆவது ஆண்டு நினைவாக அருளாளர் யோசவ்வாஸ் நினைவாலயம் எஸ்.நேசநாயகம் அடி களாரின் பணிக்காலத்தில் (2010 - 2014) யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந் தரநாயகம் ஆண்டகையால் 16-01-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**இலங்கையில் யோசவ்வாஸ் அடிகளார்**

இந்தியா கோவாவில் பிறந்த (21 ஏப்ரல் 1651) யோசவ்வாஸ் அடிகளார்-1676 குருவாகி – 1685இல் ஒற்றோரியன் சபை யினை நிறுவி – 1686இல் யோசவ் என் கின்ற துணையாளருடன் இலங்கைக்குப் பயணமாகி – 1687இல் யாழ்நகரை வந் தடைந்தார். 1691இல் ஒல்லாந்தர் வட பகுதியை முழுமையாக தமது ஆதிக் கத்தில் கொண்டுவந்தமையால் – கண்டி மாநகருக்கு பயணமாகி பௌத்த அரசர் 2ஆம் விமலதர்ம சூரியவினால் போர்த் துக்கேய ஒற்றர் எனக்கருதி 2 ஆண்டு கள் சிறைவாசம் அனுபவித்து– 1693இல் அதிசய மழை பெய்யச் செய்த புதுமை யால் விடுதலைபெற்று மறைபரப்புப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார். கிறிஸ் தவமதத்தை சேராத ஆழ்ந்த பௌத்த ரான 2ஆம் விமலதர்ம சூரிய அரசரிடம் பாதுகாப்புப் பெற்று மறைபரப்புப் பணி யாற்ற அனுமதிபெற்றமை இறைவனின் அரும் செயலே. 1705ஆம் ஆண்டு மடுப் பதியை அர்ப்பணம் செய்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய தகவலாகும். தனது 59 வருட வாழ்வை இலங்கை கண்டியில் (16 ஜனவரி 1711) முடித்துக் கொண்டார். தனது 59 வருட வாழ்வில் 35வருட குருத்துவப் பணியைப் புரிந்த இவர் அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றியுள்ளர்.

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கல்வினிசம் வளர்ந்திருந்தமையால் அழிக்கப்பட்டு வந்த கத்தோலிக்கத் திற்கு உயிர் கொடுக்க பிச்சைக்கார வேடத் தில் இலங்கை வந்து (1687) சின்ன உறோம் என அழைக்கப்பட்ட சில்லா லைக் கிராமத்தில் புகலிடம் பெற்றார். சில்லாலையைச் சுற்றி உள்ள கிராமங் களில் பணியாற்றிய பின்னர் 24 ஆண் டுகள் மாறு வேடத்தில் கால்நடையாக வன்னி – பூநகரி – மன்னார் – புத்தளம் ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளார். கண்டி மாநகரில் (1692) பணியாற்றிய போது 2 ஆண்டுகள் சிறைவாசம் அனு பவித்தார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங்கையின் தலை மைப் போதகர் பதவியை (1696) பெற்ற பின்னர் மட்டக்களப்பு தாண்டவன் வெளிப் பங்கில் ஓலைக்கொட்டில் கட்டி பலி ஒப்புக்கொடுக்கும் போது (1710) காட்டிக் கொடுக்கப்பட்டு, மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்பட்ட பின்னர் கண்டி யில் (1711) இறந்தார்.

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டம்**

அருளாளர் பட்டத்தை இலங்கை கொழும்பு மாநகரில் (21 ஜனவரி 1995) திருத் தந்தை புனிதர் 2ஆம் அருள் சின்னப்பர் இடமிருந்தும் புனிதர் பட்டத்தை திரும்ப வும் இலங்கை கொழும்பு மாநகரில் (14 ஜனவரி 2015) திருத்தந்தை பிரான்சிஸ் இடமிருந்தும் பெற்றுக் கொண்டார். புனிதர் பட்டம் பெறுவதற்குத் தேவை யான இரண்டாவது புதுமை தேவை இல்லை எனப் மாக்சி மில்லியன் கொல்பேக்கு விதிவிலக்கு கொடுத்த அதே விதத்தில் இவருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விதிவிலக்கு கொடுத்தது இங்கு குறிப்பிடத்தக்க தாகும். யோசவ்வாஸ் அடிகளார் இலங் கையின் முதற் புனிதராவார்.

**இலங்கையின் அப்போஸ்தலர்**

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிபோது யோசவ்வாஸ் முனீந்திரர் என அழைக் கப்பட்ட இவர் இலங்கை முழுவதிலும் பணியாற்றி இலங்கையின் அப்போஸ் தலர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளார். மூன்றாம் உலக நாடு ஒன் றில் ஒறற்றொரியன் துறவறசபையை நிறுவி திருச்சபையை உருவாக்கிய ஐரோப்பியரல்லாத முதல்வர் ஆவார். இவரின் ஒறற்றொறியன் துறவற சபை யானது காலனித்துவ காலத்தில் ஐரோப் பியர் யாருமல்லாத முழுமையான சுதேச சபையாகும். இலங்கையில் தமிழ் மக் கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தி யிலும் பணியாற்றிய இவர் திருவிவி லியத்தை தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் மொழி பெயர்த்தவர் என் பது விசேட முக்கியத்துவத்துடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங் கையின் கலாசார பண்பாட்டை மதித்து பண்பாட்டு மயமாக்கலை மேற்கொண்டு – இன மொழி வேறுபாடுகளைக் கடந்து இலங்கை மக்கள் சத்தியவேத விசு வாசத்தில் வளர வேண்டும் என்பதில் கவ னம் கொண்டு பணியாற்றியவர் என்பது இவரின் பணிக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். சில்லாலை கதிரைமாதா ஆலயவளாகத்தில் யோசவ்வாஸ் அடி களாரின் திருச்சொரூபத்தை மறைந்த சில் லலைப் பங்குத் தந்தையாக இருந்த ம.இ. பயஸ் அடிகளார் தமிழ்ப்பண்பாட்டு முறையில் அமைத்திருந்தது குறிப் பிடத்தக்கது.

சில்லாலையில் புகலிடம் பெற்று இன்று அங்கேயே யாழ். மறைமாவட்ட யாத்தி ரைத்தலம் அமைத்து அருள்மழை பொழியவுள்ள புனித யோசவ்வாஸ் அடிகளார் அனைவர்க்கும் அருளும் பாதுகாப்பும் வழங்குவாராக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயனில்லா ஆடுகளாக ஆகுமா இந்தியா!



# டோனியின் விலகலும் சில பின்னணிகளும்

பிரகாஸ்

இந்திய கிரிக்கெட் ரசிகர்களை மட்டுமன்றி உலகில் உள்ள கிரிக்கெட் ரசிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய முடிவொன்று கடந்த புதன்கிழமை இரவு வெளியானது. அதுதான் கப்டன் கூல் என்று அழைக்கப்படும் டோனியின் பதவி விலகல்.

2007 ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைமைப் பொறுப்பைக் கையிலெடுத்த டோனி, அந்த வருடத்திலேயே ரி-20 உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தார். அதன் பின்னர் சிலபல கிண்ணங்களை வென்றிருந்தாலும் டோனியின் தலைமைத்துவத்தைப் பற்றி பேசவைத்தது 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற தருணமே. ஒரு தலைவராக மட்டுமல்லாமல் ஒரு வீரராகவும் டோனி சிறந்தவர் என்பதை வெளிப்படுத்திய ஆட்டமது.

2011 ஆம் ஆண்டின் பின்னர் உலகிலுள்ள கிரிக்கெட் ரசிகர்களில் பெரும்பான்மையானோரின் விருப்பத்துக்கு உரியவராக டோனி மாறினார். 2013 ஆம் ஆண்டு மினி உலகக்கிண்ணம் என்று அழைக்கப்படும் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்றதன் பின்னர் மூன்று வகை உலகக்கிண்ணங்களையும் வென்ற ஒரே தலைவர் என்று முத்திரை பதித்தார். தலைவரென்றால் அது டோனிதான் என்று பேசும்படியாக அவரது தலைமைத்துவம் மிளிர்ந்தது.

2013 ஆம் ஆண்டின் பின்னர் டோனி பெரியளவில் சாதிக்கவில்லை. இதனால் அவர் மீது பல அழுத்தங்கள் ஏற்பட்டன. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா தனது நடப்புச் சம்பியன் இடத்தைத் தக்க வைக்கத் தவறியது. இதுவே டோனி மீது அழுத்தங்கள் வந்து குவிய ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. ஆனால் அடுத்த வருடம் அதாவது கடந்த வருடம் நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரைக் கைப்பற்றி தனது தலைமையை மீண்டும் டோனி நிரூபித்தார். அதேநேரம் கடந்த வருடம் சொந்த மண்ணில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத் தொடரை இந்தியா தவறவிட்டது. டோனி, பதவி விலகவேண்டும் என்ற குரல்கள் வலுக்க ஆரம்பித்தன. ஆனால் 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை அவர் வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் கருதினர். அன்று முதல் தனதும் அணியினதும் எதிர்காலத்தைப் பரிசீலித்துப் பார்த்த டோனி, பதவியிலிருந்து விலகும் முடிவை கடந்த புதன்கிழமை இரவு அறிவித்தார்.

தலைமைத்துவத்தின் ஓர் அடையாளமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த டோனியின் பதவி விலகலுக்குப் பின்னாலும் இங்கிலாந்துக்கு எதிராக எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான அணித்தெரிவையும் கருத்தில் கொண்டால் டோனியின் விலகலுக்கு அவரைச் சுற்றியிருந்த சிலபல அழுத்தங்கள் காரணம் என்று எண்ணத் தோன்றுவதைத் தவிர்க்க இயலாதுள்ளது.

**அணித் தெரிவில் அஸ்வின், ஜடேயா**

இந்தியாவுக்கு ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து அணி அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்தத் தொடரைக் கருத்தில் கொண்டு முன்னதாக முடிவடைந்த நியூசிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் கொண்ட தொடரில் அஸ்வின், ஜடேயா களமிறக்கப்படவில்லை. அடுத்ததாக ஆஸ்திரேலியா அணி அடுத்த மாதம் நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. இந்தத் தொடரைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இங்கிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் கொண்ட தொடரில் அஸ்வின், ஜடேயா இருவரும் களமிறங்கமாட்டார்கள் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. டோனி பதவி விலகியதன் பின்னர் கோக்லியின் தலைமையில் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான அணியில் அஸ்வின், ஜடேயா இருவரும் இடம்பிடித்துள்ளார்கள்.

எனின் தற்போது மட்டும் ஆஸ்திரேலியத்தொடர் கருத்தில்கொள்ளப்படவில்லையா. சுழல்பந்துவீச்சுக்கு சாதகமான இந்திய ஆடுகளங்களில் சுழல் பந்துவீச்சாளர்களான அஸ்வின், ஜடேயா இருவரும் இல்லாமல் பாரபட்சமான அணியொன்று டோனிக்கு வழங்கப்படவிருந்தது ஏன்?

**கோக்லியின் எழுச்சி**

டோனியின் கிரிக்கெட் வாழ்வைப் பொறுத்தமட்டில் அவருக்கு மிகுந்த சங்கடமான வருடங்களாக கடந்த வருடமும் அதற்கு முன்னைய வருடமும் அமைந்திருந்தன. ஆனால் கோக்லியின் கிரிக்கெட் வாழ்வில் அவருக்கு ஆகச் சிறந்த அடைவுகளைக் கொடுத்த வருடங்களாக இந்த இரு வருடங்களும் பதிவாகின. தொடர்ச்சியான சதங்கள், டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியான வெற்றிகள் என்று அசத்தியுள்ளார் கோக்லி. இதனால் தலைமைத்துவத்தை கோக்லிக்கு வழங்க வேண்டிய தருணமாக இதை டோனி கருத்தில் கொண்டிருக்கலாம்.

**கங்குலி, கும்ளேயின் பதவிகள்**

இந்திய அணியிலிருந்து கங்குலியையும் கும்ளேயையும் ஓரங்கட்டியவர் டோனி என்று குற்றச்சாட்டுக்கள் உள்ளன. டோனியின் சுயசரிதையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி திரைப்படத்திலும் இவ்வாறான காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. தற்போது இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக கும்ளே உள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக கங்குலி வரலாம் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

அவ்வாறு டோனியால்தான் கும்ளேயும் கங்குலியும் ஓரங்கட்டப்பட்டனர் என்பது உண்மையானால் மீண்டும் அவர்களுடன் கூட்டணி அமைப்பதில் சில சங்கடங்களை டோனி எதிர்கொள்வார் இதனாலும் அவர் பதவியிலிருந்து விலகியிருக்கலாம்.

**கோக்லியின் தலைமையில்**



டோனி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தபோது, அவர் கோக்லியின் தலைமையின் கீழ் விளையாடத் தயாராக இல்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. ஒரு வீரராக அணியில் தொடர்வதை தரக்குறைவாகக் கருதுகிறார் என்றும் குறிப்பிடப்பட்டது. தற்போது கோக்லியின் தலைமையின் கீழ் விளையாடத் தயாரானதன் மூலம் இவ்வாறான கருத்துக்களுக்கு டோனி முற்றுப்புள்ளி வைத்துள்ளார். எதுஎப்படியோ ஒரு சிறந்த தலைவரை இந்தியா இழந்துள்ளோம். அவரது தலைமைத்துவத்தைப் பார்க்க இயலாதது வருத்தத்துக்குரியது. இருப்பினும் இருக்கவே இருக்கிறது ஐ.பி.எல். தொடர். ரைசிங் புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் அணியில் டோனியைத் தலைவராகப் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வவுனியா, நெளுக்குளம், ஸ்ரார் போய்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தனது 2016இற்கான நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்களை அமைச்சரின் வவுனியா இணைப்பு அலுவலகத்தில் வைத்து அமைச்சரின் செயலர் ப.சத்தியசீலன் மற்றும் அமைச்சரின் இணைப்பாளர் பா. சிந்துஜன் ஆகியோரினால் விளையாட்டுக் கழகத்தினரிடம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (10)



தென்னிந்திய திருச்சபை முறிகண்டி புனிதபவுல் ஆலயத்தின் நத்தார் இன்னிசை வழிபாடும், பிள்ளைகள் ஒளிவிழாவும் அண்மையில் இடம்பெற்றது. குறித்த வழிபாட்டில் நத்தார் இன்னிசை வழிபாடு இடம்பெற்றதைத் தொடர்ந்து, ஓய்வுநாள் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10, 6)



வவுனியா பிரதேச கலை இலக்கிய விழாவில் வவுனியா மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமாரும் வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் 'இலங்கை வேந்தனின் புகழ் கூறுவதில் விஞ்சிநிற்பது, இராமாயணமா, திருமுறைகளா?' என்ற பட்டிமண்டபத்தில் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் எஸ்.எஸ்.வாசன், அ.லோகேஸ்வரன், ல.சதீஸ்குமார், திருமதி.கி.லிஷாந்தினி ஆகியோர் உரையாற்றுவதையும் வவுனியா தமிழ் மாமன்றத்தின் சுழலும் சொற்போர் நிகழ்வையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (10)



கலைஞர்களுக்கான கலாபூஷண அரசவிருது கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது. நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு "கான கதா வாரிதி" பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவுக்கு இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் "கலாபூஷணம்" அரச விருது வழங்கிக் கௌரவித்தார். (10)





வவுனியா சகாயமாதா புர சண் இளைஞர் கழக மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம்(மோகன்) அனுசரணையில், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில் அண்மையில் வழங்கப்பட்டது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியி லிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேசத்தில் தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி நகர், பத்தமேனி, கதிரிப்பாய், இடைக்காடு, தம்பாலை, செல்வ நாயகபுரம் ஆகிய இடங்களிலும்- ஆஸ் பத்திரி வீதியில் வேம்படி சந்தியிலிருந்து சத்திரச் சந்திவரை, கந்தப்ப சேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலிருந்து வின்சர் சந்திவரை, மின்சார நிலைய வீதி, பெரிய கடை வீதி, தலங்காவில், திருநெல்வேலி பிர தேசம், கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி, பருத் தித்துறை வீதியில் பாரதியார் வீதி சந்தியிலிருந்து நாகவிகாரை வரை, அன்னசத்திர வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதியின் ஒரு பகுதி, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம் முதலாம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருக்கள், புகையிரத நிலையப் பிரதேசம், மருத்துவர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, ஊரி, களபூமி, காரை நகர் இ.போ.சபை பிரதேசம், தோப் புக்காடு, காரை நகர் கடற்படை முகாம், காரை நகர் ஜெற்றி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானம் பீடம், றக்கா வீதி பிரிட்டிஷ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலை யம், நொதேர்ண் சென் றல் ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, பீப்பிள்ஸ் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, அவ் நோர் பிறைவேட் லிமிட்டெட், மக்கள் வங்கி, கிறீன்கிறாஸ் விடுதி, மொபிற்றல் பிறைவேட் லிமிட் டெட், லிங்கம் கிறீம் கவுஸ், லங்கா ஒறிஸ் லீசிங் கம்பனி, பல்கலைக்கழக நான்கு மாடிகளைக் கொண்ட தங்கு விடுதி, புகையிரத நிலையம், யாழ் பாணம் சிறி நதியா நகை மாளிகை, ராஜா ரில்கீஸ் டொபிசாட், கரண வாய், இலகாமம், நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அர சடி, விக்னேஸ்வரா சம் மந்தர்கடை, கிழவிதோட்டம், காளி கோயிலடி, யாக்கரு, கலிகை, அரசடி, வலிக்கந் தோட்டம், துன்னாலை, தாமரைக் குளத்தடி, இந்திர அம்மன் கோயிலடி, காளிகோயி லடி வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர், முடக்காடு, மாலு சந்தி, அல்வாய் பாரதிதாசன், முத்துமாரி அம்மன் கோயிலடி, நாவலடி அல்வாய், அல்வாய் சிறி லங்கா பாடசாலை, வியாபாரிமூலை, இன்பர் சிட்டி பிள்ளையார் கோயிலடி, இன்பர்சிட்டி, இலகடி, அல்வாய், காந்தியூர், மந்திகை, கப்பூது, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை, நெல்லியடி கார்கில்ஸ் பி.எல்.சி, கரவெட்டி சிறி லங்கா ரெலிக்கொம், சுப்பர்மடம் மரின் வெலத் ஐஸ்தொழிற்சாலை,நெல்லியடி இலங்கை வங்கி, றூபின்ஸ் வைத்திய சாலை, நெல்லியடி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த-10)

# கொழும்பு வந்தார் சந்திரபாபு நாயுடு



கொழும்பு, ஜன. 8

நிலைபேறான யுகத்துக்கான தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்பநிகழ்வுகளில் பங்கு கொள்வதற்காக இந்தியாவின் ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இலங்கைக்கு நேற்று வருகை தந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடை பெற்று இரண்டு ஆண்டுகள் இன்றுடன் பூத்தியாகின்றன. ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதன் இரண்டாவது ஆண்டு வைபவம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

நிலைபேறான யுகத்துக்கான தேசிய அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இந்த நிகழ்வுகள் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பண்ணாட்டு மாநாட்டு மண்டபத் தில் ஜனாதிபதி மைத்திரி பால தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த வைபவத்தின் முக்கிய விருந்தினராகவே ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுகலந்துகொள்ளவுள்ளார்.

நேற்று மாலை இலங்கை வந்த அவர், இன்றைய வைபவத்தை தொடர்ந்து ஹோமகம பிட்டிபன பசுமை பல்கலைக்கழகத்துக்கு செல்லவுள்ளதோடு, மாலை கொழும்பில் இடம்பெறும் செய்தியாளர் மாநாட்டிலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-5)

# பஜனை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன. 8

திருவெம்பாவை நிகழ்வையொட்டி மாதகல் சம்பில்துறையிலிருந்து பஜனை ஊர்வலம் ஆரம்பமாகி பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை சென்றடையவுள்ளது.

இதன்போது பொன்னாலைச் சந்தியில் அமைந்துள்ள ஸ்ரீ நாராயணன் தாகசாந்தி நிலையத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று அறிவிக்கபட்டுள்ளது. (த-29)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 8

சங்கானை மாவடி வைரவர் ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு திருவாசகம் முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (த-8)

# மகிந்த சிறை செல்வதை விரும்பும் நாட்டு மக்கள்

கொழும்பு, ஜன. 8

கடந்த ஆட்சியில் கொள்ளையடித்து நாட்டைக் கடன் சுமைக்குக்குத் தள்ளிய மகிந்த குடும்பத்தினரைச் சிறைக்கு அனுப்பவேண்டும் என்பதே நாட்டு மக்களின் அவாவாக இருக்கிறது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டங்களை நாட்டு மக்கள் எதிர்க்கவில்லை. மகிந்தவின் ஆதரவாளர்களே எதிர்க்கின்றனர். மகிந்தவின் குடும்பத்தைச்சிறைஅனுப்பாமையே மக்களுக்குள்ள ஒரேயொரு மன வலியாக இருக்கின்றது. மகிந்த குடும்பத்தினரைச் சிறைக்கு அனுப்பவேண்டும் என்பதே அவர்களின் அவாவாகவும் இருக்கின்றது - என்றார் ராஜித. (த-5)

# சிறுவர் வைத்தியசாலைக்கான காணியில் பௌத்த மத நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினால் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்குக் கோரப்பட்ட காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமை நோக்கி, பெரும் எடுப்பில் பௌத்த மத ஊர்வலம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இருந்து ஆரம்பித்த இந்த ஊர்வலம், இராணுவமுகாமினுள் சென்றடைந்தது.

விகாரைகளில் நடைபெறும் பூசை வழிபாடுகளுக்காகவே இவ்வாறான பௌத்த மத ஊர்வலம் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5-37)

## நீ உருப்படமாட்டாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட் சியம் எனக் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாண வன் மகேந்திரன் தார்த்திகரன் தெரிவித்தார்.

உயிரியல் வளத் தொழில்நுட்பப் பிரிவில் ஏ,2பி சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றார் தார்த்திகரன்.

அவர் தெரிவித்ததாவது:

கஷ்டத்தின் மத்தியில் தான் படித்தேன். அப்பா மேசன் வேலை செய்பவர். சாதாரண தரம் வரை படித்த பாடசாலையை விட்டுவெளியேறிய போது பாடசாலையின் அதிபர், நீ உருப்படமாட்டாய் எனச் சொல்லியே அனுப்பி வைத்தார். எள்ளுக்காடு என்றால் படிக்காதவர்கள்- உருப்படாதவர்கள் எனச் சிலர் நினைக்கின்றனர். நான் படிப்பதற்குப் புத்தகத்தைத் திறக் கும்போதெல்லாம் அந்த அதிபர் கூறிய சொல் என் காதில் கேட்கும். அதனை நினைத்துப் படித்தேன்-என்றார். (த-21-6)

# தீர்வை வழங்கும் பரிந்துரைகள் புதிய அரசமைப்பில் வேண்டும்

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கு டக்ளஸ் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

புதிய அரசமைப்பு மீது தமிழ் மக்கள் இன்னமும் நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் பரிந்துரைகளை அரசமைப்பில் உள்ளடக்க வேண்டும் என்பது எமது விருப்பம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கு, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துச் சொல்லியிருப்பதாக, அந்தக் கட்சி அனுப்பியுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் தற்போதைய செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கெடுத்திருந்தனர்.

'தமிழ் மக்கள் புதிய அரசமைப்பு ஊடாகத் தமக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றார்கள். தமிழ் மக்களின் அரசியல் வேணாவாக்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படைகளைக் கொண்டதாகவே அரசியல் தீர்வு அமைய வேண்டும். தென் இலங்கையில் தற்போது தலைதூக்கியுள்ள அரசியல் தடுமாற்றங்களால், புதிய அரசமைப்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புத் தவறவிடப்பட்டுவிடக் கூடாது.

தென் இலங்கை அரசியல் குழப்பங்கள், ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரை அக்கறைக்குரியவை அல்ல என்றபோதும், தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிடைக்கப்பெறுகின்ற சூழலைப் பாதுகாப்பதற்கு எமது பங்களிப்பை நாம் பூரணமாக வழங்குவோம்' என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

32வது அகவையில் தடம் பதிக்கும்

கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 15.01.2017 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 16.01.2017 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனால் 2016 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் ஒதுக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கோழிக்கூடுகளும் கோழிக்குஞ்சுகளும் தீவன உபகரணங்களும் பயனாளிகளுக்கு சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன. (10, 9)



வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தினை முன்னிட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் இயங்கும் சமுதாயஞ் சார் சீர் திருத்தக் காரியாலயத்தின் ஏற்பாட்டில், "ஆளுக்கொரு மரம் நடுவோம்" என்ற தொனிப்பொருளில் தவறாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் நீதிமன்ற உத்தியோகத்தர் வ.ஸ்ரீகுமார் உரையாற்றுவதையும், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மரக்கன்றுகளுடன் தவறாளர்கள் மற்றும் வலி. மேற்கு- சங்கானை பிரதேச செயலக சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மல்லிகா, நீதிமன்ற உத்தியோகத்தர் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.





கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நத்தார் இன்னிசை வழிபாட்டில் வன்னி திருச்சபைகள் பங்கு கொண்டிருந்தன. இரணைமடு சந்தியில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. கத்தோலிக்க திருச்சபையின் யாழ். மறைமாவட்ட ஆயர் முதன்மை விருந்தினராக பங்கு கொண்ட இந்த நிகழ்வில் இராணுவ உயரதிகாரிகள் பலரும் பங்கு கொண்டனர். தென்னிந்திய திருச்சபை, அங்கிலிக்கன் மிசன் திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, பற்றிஸ் திருச்சபை ஆகியன இணைந்து இன்னிசை வழிபாட்டினை செயற்படுத்தினர். தென்னிந்திய திருச்சபை சார்பில் பங்குகொண்ட முறிகண்டி புனித பவுல் ஆலய பாடகர் குழு, நத்தார் இன்னிசை இசைப்பதனை காணலாம். (10, 6)





தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்குதனது மாகாணசபையின் நிதியொதுக்கீட்டிலிருந்து 20 துவிச்சக்கர வண்டிகளை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தார்.
யாழ்.வலயக்கல்விப்பணிமனையில் வலயக்கல்விப்பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், திட்டமிடல் பணிப்பாளர் ரவிச்சந்திரன், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், பயனாளிகள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (10)







கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த மாதம் இடம்பெற்ற பேராசிரியர் க.கைலாசபதியின் 34 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கில் க.சிவகரன் தலைமையுரை ஆற்றுவதையும், த.ஸ்ரீபிரகாஸ் நினைவுரை ஆற்றுவதையும், ச.சத்தியதேவன் கருத்துரையாற்றுவதையும் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (10)









முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அழகக சங்கத்தின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு கற்சிலைமடு பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அழகக சங்கத்தின் தலைவர் ச. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 14 மாணவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் 5 ஆயிரம் ரூபா வங்கியில் வைப்புச்செய்த புத்தகமும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட அழகக சங்க போசகர் ஞா. பொன்ராசா, சங்கத் தலைவர் ம.பொன்ராசா பொருளாளர், அ. அலோசியஸ் ஆகிய மூவருக்கும் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (10, 500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை

கறுப்பு நிற பாஸ் இன நாய்க்குட்டியை 1. 1. 2017 அன்று முதல் காணவில்லை. நல்லூர் கோயில் பின் வீதிப் பகுதியில் உள்ள வீட்டிலிருந்தே காணாமற்போயுள்ளது. கண்டவர்கள் **077-2378323** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்கவும்.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2833 திகதி 07.01.2017
**02 22 48 56** F **17** ரூ. 43,995,081/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 599
சீட்டிழுப்பு திகதி 07.01.2017
சனிக்கிழமை
**19 36 39 40 C**
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.46,859 365/=

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கைலைநாதன்

**(முன்னாள் அச்சுவார்ப்பாளர், சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)**



அளவெட்டியைப் பிறப்பிட மாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கைலைநாதன் கடந்த06.01.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் செல்லத்துரை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஷ்பராணியின் அன்புக் கண வரும் கல்பனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், சண்டிலிப் பாய்), சதீஷ் (நிர்வாக உத்தி யோகத்தர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கிளிநொச்சி), சோபனா(கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயச்சந்திரன், சகுந்தலாதேவி, யோகராணி, ஜெகதாசன், ஜெயபாலன், காண்டீபன் ஆகியோரின் சகோதரனும் , நிரஞ்சன்(முறு), சுபோதன் (கனடா), ஆகியோரின் மாமனாரும் புவனராணி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் தெய்வேந்திரன், புவனேந்திரன் காலஞ்சென்ற விமலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆத்வீகன், அனுஸ்கா, பிரகவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.01.2017) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை . உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**வடலியடைப்பு,**
**மதவடி, பண்டத்தரிப்பு**

**தகவல்:**
**சதீஷ் (மகன்)**

## மரண அறிவித்தல்

### ஜெகநாதப்பிள்ளை மண்டலேஸ்வரன்

**(ஸ்தாபகர் மண்டலேஸ்வரன் இசைக் குழு)**



நல்லூரைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெகநாதப் பிள்ளை மண்டலேஸ்வரன் நேற்று (07.01.2017) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பரமேஸ்வரி யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜெகநாதப்பிள்ளை-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற வர்களான சுப்பிர மணியம் -தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் கேதீஸ்வரன்(லண்டன்), லலிதா, அபர்ணா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுசா (லண்டன்), பிரதீப்குமார்.ரமணா(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அஜய்ராம், அக்சயராம், சதுசிகா, அனோசிகா, வளர்சிகன், அஜந், அஸ்மிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2017) திங்கட் கிழமை மு.ப.11 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம். நல்லூர் K.K.S Road பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. மெயின்றோட்டுகள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 738 3846**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். அச்சுவேலி சந்நிதி Road இல் 200m from அச்சுவேலி Junction, Main Road ஓரமாகவே காணி விற்பனைக்கு.

**077 779 2649/ 071 278 9227**

2017. 2018 இல் குடிபுகக் கூடிய நிலையில் புதிய தொடர்மாடிகள் சிறந்த கட்டணத்திட்டங்களுடன் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு: 077 442 3800**

## கார் விற்பனைக்கு

மாருதி கார் K-B-XXXX
வெள்ளை நிறம் 875,000/=

**தொடர்பு: 077 936 1427**

## SINGER FINANCE

முச்சக்கரவண்டிக்கான குத்தகை வசந்தகாலம்

பதிவுசெய்யப்பட்ட
முச்சக்கரவண்டிகள் தொடர்பில்




தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124

இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி

### மகமாச்சியம்மா பாலசுப்பிரமணியம்

(கற்கண்டு அக்கா)



கடந்த 12.12.2016 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியை 10.01.2017 செவ்வாய்க் கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளில் துணை நின்றவர்களுக்கும் ,உள்ளூர் வெளிநாடு களிலிருந்து தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.

**அரசடி மில்,**
**தொண்டமனாறு.**

**மகேந்திரன்**
**(மகன்)**

**021 226 1714,077 7164 556**

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் பவளலிங்கம்



கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பவளலிங்கம் நேற்று (07.01.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் குலமணியின் அன்புக் கணவரும் பவானந்தன், பவானி, தீபானந்தம்(சிவா), பகிரதி, தனுசா, சிவாஜினி, துஸ்யந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு.**
**கோணாவளை லேன்.**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## தேவை

புத்தளத்தில் உள்ள 25 ஏக்கர் காணியில் தங்கி இருந்து பார்த்துக் கொள்ளவும். தோட்ட வேலைக்கும் நீண்டகாலம் தங்கக் கூடிய தனிநபரோ சிறிய குடும்பமோ தேவை. தங்க இடவசதி உண்டு. அநாதரவான, முன்னேற ஆர்வமுள்ள வாலிபன். குடும்பமற்ற தனிநபர், வயதான யாருமற்ற தம்பதியினர் (ஆரோக்கியமான) இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் ஏனைய விடயங்கள் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 221 6416**

## தொடர்பு கொள்ளவும்

பற் பொடி தயாரிப்பதற்கான சாம்பல் எம்மிடம் உண்டு.தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

**மாம்பியன் மில்**
**சுதுமலை,மானிப்பாய். 077 772 2215**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் **A9** கண்டி வீதியில் **2 பரப்பு வெற்றுக்காணி** விற்பனைக்கு உண்டு. தரகர்கள் வேண்டாம்.

**தொடர்பு : 076 708 7942**

## புதிய கணக்கீடு வகுப்பு ஆரம்பம்

**A/L, O/L கணக்கீடு**
தனிப்பட்ட வகுப்பு மாத்திரம் இடம்பெறும்.

**தொடர்புக்கு : 075 409 9968**

## ஜப்பான் சைக்கிள் விற்பனைக்கு

யாழ் மண்ணில் மீண்டும் உதயம்
**Original Japan Ladies ,Jents Cycle**
மலிவு விற்பனைக்குண்டு.

**தொடர்பு :- 077 790 5333**

## வேலைக்கு ஆள்தேவை

யாழ் நகரில் உள்ள பான்சி கடை ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை. வயது 18-45

**தொடர்பு:- 077 996 6424**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

**0777 111 400**

## விற்பனைக்கு

சுண்டுக்குளியிலிருந்து 1/2Km தூரத்தில் விதானையார் வீதிக்கு முன்பாக உள்ள மொறிஸ் லேன் 107/13, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற மூன்று பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 076 309 7769**

## IPS

**புதிய கல்வியாண்டு 2017**
**இலவச கணினி வகுப்புக்கள் பிரிவு V**
*Diploma in Msoffice
*Diploma in Internet Technology

**G.C.E (A/L) - ICT பிரிவுகள் 2019**

aat, வங்கியியல் கற்கைகளுக்கான முகாமைத்துவம், கணக்கீடு, ICT க்கான பிரத்தியேக/ குழு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
**ஆரம்பம் - 12 - 15/01/2017, 10 AM**

**IPS Thirunelvely** (சாயி சமித்திக்கு அருகில்)
Hot line - 076 685 2529, 076 372 2678

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி மாணவியான சத்தியநாதன் சிவதுர்க்கா, கணிதப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். பரீட்சைப் பெறுபேறு வெளியாக முன்னர் - அண்மையில் குருநாகலில் விபத்தில் சிக்கி அவரும் அவரது உறவினரான மருத் துவரும் உயிரிழந்திருந்தனர். அந்த மாணவியே கணிதப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (த-4)

## வடக்கில்...

வீடு கள், 30 ஆயிரம் கல் வீடுகள் அமைப்புத் திட்டத்தில் தற்போது பொருத்து வீட்டுப் பணிகள் மட்டுமே இடம்பெறுகின்றன. வீட்டு வசதி கோரும் விண்ணப்பங்கள் பொதுமக்களால் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அதிகமாக 3 ஆயிரத்து 10 விண்ணப்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும், 2 ஆயிரத்து 42 விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலும், ஆயிரத்து 211 விண்ணப்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இருந்து கிடைத்துள்ளன.

மன்னாரில் ஆயிரத்து 290 விண்ணப்பங்களும், வவுனியாவில் ஆயிரம் விண்ணப்பங்களும் வந்துள்ளன .

இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 498 விண்ணப்பங்களும் , பூநகரிப் பிரதேச செயலாளர்பிரிவில்248விண்ணப்பங்களும் கிடைத்தன. கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 17 விண்ணப்பங்கள் கிடைத்தன. யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவில் கிடைத்துள்ள விண்ணப்பங்களில் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் ஆயிரத்து 23 விண்ணப்பங்களும், ஏனைய 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆயிரத்து 21 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-101)

## புது அரசமைப்பை...

நேற்று வெளியானது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பொது எதிரணி ஆகியவற்றின் தலைவர்களுக்கு இந்த விடயத்தைக் குறிப்பிட்டு தனித்தனியாகக் கடிதமும் அனுப்பி வைத்துள்ளார் அவர்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் அமைச்சர் மனோ கணேசனின் அறிக்கை வந்துள்ளது.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நாடாளுமன்றில் நடைபெற இருந்த அரசமைப்பு உருவாக்கத்துக்கான உபகுழுக்களின் அறிக்கை மீதான விவாதம் திடீரெனப் பிற்போடப்பட்டது. வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தயாராகாததால் அதை நாடாளுமன்றத்தில் முன்வைத்த பின்னர் ஒன்றாக விவாதத்தை நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டே உப குழுக்களின் அறிக்கை மீதான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டது.

எனினும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்பதும் அறிவிக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில், வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிப்பவரும் கூட்டு அரசின் பங்காளிக் கட்சியின் தலைவருமான அமைச்சர் மனோகணேசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வரும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புதிய அரசமைப்புக்கான கலந்துரையாடல் தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே போகிறது. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வழிகாட்டல் குழுவில், தயாரிக்கப்பட்ட இடைக்கால வரைவு பற்றிய தத்தமது நிலைப்பாடுகளை முன்வைப்பதில் கட்சிகள் தாமதம் செய்கின்றன. இனிமேலும் இதைத் தள்ளி வைக்க முடியாது.

அதிகாரப்பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பாக உங்கள் நிலைப்பாடுகளை வழிகாட்டல் குழுவுக்கு அறிவியுங்கள்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று தமிழ் மக்களை இனிமேலும் நம்ப வைத்து இழுபறிப்பட இடமளிக்க முடியாது. இதில் நாம் பங்காளிகளாக இருக்கவும் முடியாது.

கடைசியாக நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் முடிவின்படி, பெப்ரவரி மாதம் முதல் வாரத்துக்குள் அனைத்துக் கட்சிகளும் தத்தம் நிலைப்பாடுகளை அறிவிக்க உடன்பாடு ஏற்பட்டது. இந்தக் கால கட்டத்துக்குள் உங்கள் நிலைப்பாடுகள் வழிகாட்டல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்" - என்று அந்தப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## யாழ்.இந்து...

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் உயிரியல்பிரிவில் 13 பேரும், கணிதப்பிரிவில் 2 பேரும், வர்த்தகப்பிரிவில் 10 பெரும் 3 ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் 17 பேர் 3ஏ சித்தியை பெற்றுள்ளனர். அவர்களில் கணிதப் பிரிவில் 8 பேரும், வணிகத் துறையில் 3 பேரும், கலைத்துறையில் 6 பேரும் உள்ளடங்குகின்றனர்.

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியில் 10 பேர் 3 ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். அவர்களில் கணிதப் பிரிவில் 7 பேரும், விஞ்ஞானப் பிரிவில் ஒருவரும், வர்த்தகப் பிரிவில் 2 பேரும் அடங்குவர். நெல்லியடி மத்திய கல்லூரியில் கணிதப் பிரிவில் 2 பேரும், வர்த்தகப் பிரிவில் 3 பேரும், கலைப் பிரிவில் ஒருவருமாக 6 பேர் 3 ஏ பெறுபேறு பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 4 பேர் 3ஏ சித்தியடைந்துள்ளனர். அவர்களில் வர்த்தகத் துறையில் 2 பேரும், உயிரியல் துறையில் 2 பேரும் உள்ளடங்குகின்றனர்.

(த-4-8-109)

## தேசிய...

தமிழ் மாணவனான நான் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றதால் பெருமையடைகின்றேன். இந்த வெற்றி அனைத்துத் தமிழ் மாணவர்களுக்கும் முதல் படியாக இருக்கவேண்டும். இனிவரும் காலங்களில் அதிகளவான தமிழ் மாணவர்கள் தேசிய ரீதியான இடங்களைக் கைப்பற்றி தமிழர் கல்வி நிலைக்குப் பாராட்டுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். எனது வெற்றிக்குக் காரணமாக இருந்த எனது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், எனது நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

இந்தத் துறையை நான் தேர்ந்து எடுப்பதற்கு எனது குடும்பப் பின்னணியே காரணம். எனது தந்தை கடைச்சல் பட்டறை வைத்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். எனது சகோதரரும் தொழில் நுட்பம் சார்ந்த துறையில் ஈடுபட்டவர். எனக்கும் தொழில் நுட்பத்துறையில் ஏதாவது சாதிக்கவேண்டும் என்று தோன்றியது. சாதித்தேன்.

சிறந்த தொழில்நுட்பவியலாளராக வருவதே எனதுவிருப்பம். எனது பாடசாலையானஸ்கந்தவரோதயக் கல்லூரியில் முதல் தடவையாக பொறியியல் தொழில்நுட்பத்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தநேரம் கல்லூரியில் இந்தப் பாடங்களுக்குத் தேவையான ஆசிரியர்கள் இருக்கவில்லை. கல்விக்காக வெளியிலிருந்து ஆசிரியர்களை ஒழுங்குசெய்து எமது கல்விக்குப் பாடசாலை உதவியது. கல்வியாண்டின் இறுதிப் பகுதியிலேயே எமக்குரிய ஆசிரியர்கள் கிடைக்கப் பெற்றனர். அவர்களுக்கும் எனது நன்றிகள்-என்றார். (4,8)

## மகிந்த...

தது. போராட்டக்காரர்கள், பொலிஸார் என்று 23 பேர் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத உரிமையை குத்தகைக்கு வழங்கவும், 15 ஆயிரம் ஏக்கர் காணியில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்கவும், சீனாவுடன் இணக்கம் கண்டுள்ள இலங்கை அரசு இது தொடர்பான நிகழ்வை நேற்றுக் காலை அம்பாந்தோட்டையில் ஒழுங்கு செய்திருந்தது. முன்னதாக இந்த நிகழ்வில் [illegible] முத்திடப்படும் என்று [illegible] போதிலும், சில நெருக்கடிகளால் அந்த திட்டம் கைவிடப்பட்டு ஆரம்ப அடையாள நிகழ்வு மாத்திரம் நேற்று நடைபெற்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியாக அறிக்கைகளை வெளியிட்டு வந்த மகிந்த ஆதரவு அணி நேற்று நேரடியாகக் களத்தில் இறங்கியது.

அம்பாந்தோட்டையில் உள்ள விகாரை ஒன்றில் நேற்றுக் காலை மகிந்த ஆதரவு அணியினர் ஒன்று கூடினர். பிக்குகள், இளம் பிக்குகள், மக்கள் எனப் பலரும் அங்கு திரண்டனர். ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடம் நோக்கிப் பேரணியாக நகர முயன்றனர்.

நீதிமன்று ஏற்கனவே பேரணிகள், போராட்டத்துக்கு தடை விதித்திருந்தது. பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைக் காண்பித்து மகிந்த அணியின் போராட்டக்காரர்களைத் திருப்பி அனுப்ப முயற்சித்தனர்.

சீற்றமடைந்த மகிந்த அணியினர், பொலிஸாரின் தடையையும் தகர்த்தெறிந்து ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தை நோக்கி நகரத் தொடங்கினர். பொலிஸாரின் அறிவித்தலை உதாசீனம் செய்ததைத் தொடர்ந்து, மகிந்த அணியினர் மீது நீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் மகிந்த அணியினர் அடங்கவில்லை.

தடைகளைத் தாண்டி முன்னேற முயற்சித்தனர். மேலதிக பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டனர். நீர்த் தாரைப் பிரயோகத்துக்கும் மகிந்த அணியினர் தாக்குப் பிடித்து தடைகளைத் தகர்க்க முயற்சித்தமையினால் கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலிஸாரின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், மகிந்த ஆதரவு அணியினர் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டனர். கல் வீச்சு பரந்த அளவில் பொலிஸார் மீது நடத்தப்பட்டது. தாக்குதலைக் கட்டுப்படுத்த இறுதி அஸ்திரமாகப் பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து தடியடி மேற்கொண்டனர்.

இதன் பின்னரே நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. சுமார் இரு மணி நேரம் நீடித்த பதற்றம் 23 பேரின் காயத்துடன் முடிவுக்கு வந்தது. (த-5)

## வடக்கை...

அம்பாந்தோட்டையில் ஏற்பட்ட களேபரம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஹங்குரன்கெதவில் நடைபெற்ற நிகழ்வில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

நான் இங்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் அம்பாந்தோட்டையில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். வடமராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளைவிட அங்கு அதிக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இருப்பதாகக் கூறினர். வாகனங்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஏன் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்? தமது காணிகளை வெளிநாட்டவர்களுக்கு வழங்குவதாலேயே அவர்கள் குழப்பமடைந்துள்ளனர். விவசாயத்தையே நாம் இல்லாது செய்கின்றோம். நானே இதனை ஆரம்பித்ததாகத் தற்போது கூறுகின்றனர். ஆம். 750 ஏக்கரில் தொழில் பேட்டையொன்றை நாம் ஆரம்பித்தோம். என்னிடம் ஆயிரம் ஏக்கரைக் கோரினர். தொழில் பேட்டையை ஆயிரம் ஏக்கரில் அமைக்க வேண்டியதில்லை, 750 ஏக்கரில் அமைத்தால் போதும் என்றேன் - என்றார். (த-5)

## மகிந்த விற்ற...

கப்படுகின்றன. இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித் தார். அம்பாந்தோட்டையில் சீனா மேற் கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்றது. இங்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை முகம்கொடுத்துவரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழும் முகமாகத் தலைமை அமைச்சர் ரணில் வகுத்துள்ள [illegible] எமது நாடு கடன் சுமைகளில் இருந்து விடுபடும். மகிந்த அரசில் அம்பாந்தோட்டை உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களின் இடங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. நாங்கள் இடங்களை விற்பனை செய்யவில்லை. 99 வருட கால வரியின் அடிப்படையிலேயே அபிவிருத்தித் திட்டங்களுக்கு இடங்களைக் கொடுக்கின்றோம். அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டபோது 5 ஆயிரம் கோடியை மகிந்த தரப்பினர் கொள் ளையடித்திருந்தனர். நாட்டின் அதிகாரம் ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இவர் கள் செய்த நாசகார வேலைகள் காரணமாகவே இன்று மக்களின் பணத்தில் கடன் களையும் வரியையும் கட்ட வேண்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே வெளிநாடுகளுக்கு இடங்கள் விற்பனை செய்யப்படாமல் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2002 ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியே இடங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய முடியாது என்ற சட்டத்தையும் கொண்டு வந்திருந்தது. நாட்டின் எதிர்காலம் கருதியும், கடன் சுமைகளில் இருந்து விடுபட்டு அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள கொள்கைகளும், முயற்சிகளும் சிறந்தவைகளாகும்.

எமது நாடு பொருளாதார, நிதி நெருக்கடியைச் சந்தித்தித்து வருகின்றது. அதிலிருந்து விடுபடவே சீன நிறுவனத்துடன் இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றார். (த-5)

## 4 கட்சிகள்...

முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு, மொழியுரிமை, மத உரிமை, தேசியகீதம் ஆகிய ஏழு விடயங்கள் தொடர்பாகவே இந்த யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன.

“வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. நான்கு கட்சிகளும் இணைந்து தயாரிக்கும் ஒரு கூட்டு அறிக்கையை, வழிகாட்டல் குழுவுக்கு முன்வைக்க நாம் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பான எங்களின் வரைவு தயாரிக்கப்பட்டு நான்கு கட்சிகள் மத்தியிலும் பகிரப்பட்டுள்ளது. எமது இறுதி அறிக்கை, அடுத்த வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் வழங்கப்படும் - என்றார் அமைச்சர் மனோ. (உ-5)

## இராணுவம்...

களை அவர்கள் எடுத்துக்.கூறியிருக் கிறார்கள். அவர்களின் விடயங்களில் இலங் கைப் படையினர் தலையீடு செய்வார்கள் என்ற கருத்து அடிப்படையற்றது என்று கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் கூறினார்.

கலந்தாலோசனைச் செயலணியின் முன்பாகச் சாட்சியமளித்தவர்கள், கருத்துக்களைப் பகிர்ந்தவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அது மிக முக்கியம். இராணுவம் மற்றும் முன்னாள் போராளிகளின் நடவடிக்கைகளில் இருந்து சாட்சியங்களைச் சமர்ப்பித்தோரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும் என்று நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வுச் செயலணியின் தலை வர் மனோரி முத்தெட்டுவேகம கடந்த வாரம் கோரியிருந்தார். (த-4)

## பிரிட்டனுக்கு...

இந் தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர், பிரிட்டனின் பிரதமராக இருந்த டேவிட் கமரூன் பதவி விலகினார். தெரேஸா மே ஜூலை மாதம் பதவியேற்றிருந்தார்.

பிரிட்டனில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை சார்பில் உயர்மட்டப் பயணமாக, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர செல்லவுள்ளார். எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பிரிட்டனில் தங்கியிருந்து பல தரப்பினரையும் அவர் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளக் கோயிலில் உறைந்திருக்கும் தெய்வத்தின்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலராய்
01 . 07 . 1939



விண்ணில் தெய்வமாய்
11 . 01 . 2014

## அமரர் மயில்வாகனம் சபாரெத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: பூர்வபக்க சுவர்க்கவாயில் ஏகாதசி (08.01.2017)

மண்ணிலே பிறந்திட்ட பிறவிதன்னை மகிமையுடன் வாழ வழிவகுத்தீர் ஐயா!
எண்ணமதில் ஏற்றம் மிகு சிந்தனைகள் என்றுமே நடமாடக் கண்டுகொண்டோம்
நல்லவராய் வல்லவராய் ஞாலமதில் முழுமதியாய் ஒளி பரப்பினீரே
நானிலமாம் மேடையிலே புகழுடலை விட்டுவிட்டு போய்மறைந்த மர்மமென்ன!

அன்பாலே அனைவரையும் அரவணைத்து அறிவளித்து சேவை செய்தீர்
அன்னை தந்தை பகர்ந்தவழி தப்பாமல் கருமங்கள் ஆற்றினீரே
இன்னமுதாம் இல்லறத்தில் இணைந்திருந்தே நல்லறங்கள் பலவும் செய்தீர்
இதயமதில் தேங்கிநிற்கும் அறிவூற்றை எல்லோர்க்கும் அளிப்பதிலே
- திறமை கொண்டீர்

எழுபிறப்பும் தொடருகின்ற கல்விதன்னை எப்போதும் கற்பதிலே சமர்த்தரானீர்
ஈடில்லா பேச்சாற்றல் செயற்றிறன்கள் எங்கே பெற்றீர்
நாற்றிசையும் ஆசானாய் சேவைசெய்து நற்பெயரும் புகழும் பெற்றீர்
நொடிப்பொழுதில் மறைந்தீரே சுவர்க்கத்தில் உறைகின்ற ஆவலிலே!

(நீ.22486) (13.17.18)

"இராசபதி"
புத்தூர் வீதி, மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.



## மரண அறிவித்தல்

பிறப்பு
1945 . 04 . 07



இறப்பு
2017 . 01 . 06

## நல்லையா பரம்சோதி

புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பரம்சோதி 06.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், காண்டீபன், பிரதீபன், ஆதீபன், குணதீபன், மகாதீபன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவசோதி, ஆனந்தசோதி காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஞானபண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் லிங்கேஸ்வரி, சுகந்தினி, இந்துஜா, லவப்பிரியா, தற்பரா, தர்ஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் நல்லசேகரம், தெய்வேந்திரம், மனோராணி, விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் ஜெயந்தி, காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தீபிகா, லாகவி, தீபனா, கஜீபனா, தீபஜன், அபிலயன், அபிராம், கிருத்திகன், மகிபன், ஆராதனி, தர்வீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் புளியங்கூடலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் சுருவில் இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜே/7360)( 12.17.19.20)



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராமச்சந்திரன் சிவகுமார்

(சிவா/ மைந்தன்)

அன்னை மடியில்
06.08.1971

ஆண்டவன் அடியில்
24.12.2012

திதி: பூர்வபக்க ஏகாதசி

தெய்வத்தேவனே தேயாத வானிலவே!
தேடிப்புலம்புகின்றோம் தேம்பி அழுகின்றோம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தி எல்லாம் மறந்திடுமோ
உன் வார்த்தைகளைத் தேடுகின்றோம் வாஞ்சைக்குரியவனே!

செல்வ மகராசாவே உன் மாளிகை வெறுமையாக
சோர்ந்துவிட்டோம் நாம் சொல்லியழ வார்த்தையின்றி
நீயற்ற வாழ்வு நீண்ட துன்ப காலம் ஐயா – நாம்
நிம்மதி இழந்தோம் நீண்டதூரம் போனதெங்கே?

பாசமுடன் நீ வளர்த்த ஆசைமகன் வளர்ந்து – உன்
வழிகாட்டலின்றி வாடி நிற்கிறான்
எல்லாம் இருந்தும் ஏதும் அற்றவர்களாக
ஏங்கித் தவிக்கின்றோம் எங்கு ஐயா சென்றுவிட்டாய்!

பாசமானவனே நீ ஓடி மறைந்து இன்றுடன்
நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டதையா
பரிதவிக்கும் அம்மா, மனைவி, பிள்ளை உன்
உடன் பிறப்புக்கள் உறவுகள் எல்லாம்
உன்னைக் காணாது காத்துக் கிடக்கின்றனர்
எப்போ நீ வருவாய் ஐயா!

உன் ஆத்மா சாந்திக்காக அனுதினமும்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி............. ஓம் சாந்தி ................ ஓம் சாந்தி.................

குடும்பத்தினர்.

12/02, தொட்டியடி, விசுவமடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

**எவ்.ஏ. கிண்ணத்தில் யாழ். லீக் ஆட்டம்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. யாழ். லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதவுள்ளது.

**குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டம்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(ம-23-422-108)

## யாழ். மத்தியின் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர


JAFFNA CENTRAL COLLEGE
BICENTENNIAL 1816-2016

வீராங்கனைகளுக்கான பரி சளிப்பு நிகழ்வுநாளைகாலை 7.30மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## பட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 8

பருத்தித்துறை நகர அபிவிருத்தி ஒன்றியத்தினால் எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறை நடராஜா திறந்தவெளி அரங்கில் பட்டப் போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ம-422)



# ஐக்கியம், வீனஸ் வி.கழகங்கள் எவ்.ஏ. கிண்ணத்தில் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 8

எல்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐக்கியம், வீனஸ் அணிகள் வெற்றிபெற்றன.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பிறிதொரு ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதியது. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் வீனஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் பிரியங்கன். வேறெந்த மாற்றமும் இல்லாமல் வீனஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின்26 ஆவதுநிமிடத்தில்திருக்குமரனின் முதல் கோலைப் பதிவுசெய்தார் சயந்தன். ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் வீனஸ் அணிக்கு மூலை உதை ஒன்று கிடைத்தது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட 2:1 என்ற கோல் கணக்கில் வீனஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## யுனிபைட், ஜங்ஸ்ரார் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஜன. 8

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் யுனிபைட், ஜங்ஸ்ரார் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதியது. இதில் யுனிபைட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதியது. இதில் யங்ஸ்ரார் அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கலைமதியை தோற்கடித்தது இமையாணன் மத்தி.

யாழ்ப்பாணம், ஜன. 8

ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இமையாணன் மத்திய அணி வெற்றிபெற்றது.

ஐக்கியத்தின் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் இமையாணனின் முதல் கோலைப் பதிவுசெய்தார் சுலக்சன். மாற்றங்கள் ஏற்படாத நிலையில் இமையாணனின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியின் 23 ஆவது நிமிடத்தில் தர்சன் பெற்ற கோலின் மூலம் இமையாணன் மேலும் பலம் பெற்றது. அடுத்த சில நிமிடங்களில் கலைமதி பதில் கோலைப் பதிவுசெய்தது. சுலக்சனால் பிறிதொரு கோல் பதிவாக முடிவில் 3:1என்றகோல் கணக்கில் இமையாணன் மத்தி வெற்றிபெற்றது. சுலக்சன் ஆட்டநாயகனானார். (ம-108)



## முன்னேற்றம் கண்டது நக்கீரன் வி.கழகம்

பருத்தித்துறைஐக்கியவிளையாட்டுக்கழகம்நடத்தும்கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் முன்னேற்றம் கண்டது.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணிமோதியது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் நக்கீரன் அணியின் கபில்தேவ் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். அதுவே முதல்பாதியின்ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியிலும் நக்கீரன் அணியின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. அந்த அணியின் சங்கீர்த்தனன்29ஆவது,37ஆவது நிமிடத்திலும், 40 ஆவது நிமிடத்தில் ஜசீலனும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் நக்கீரன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. சங்கீர்த்தனன் ஆட்டநாயகனானார். (ம-422-108)



## சமநிலை!

யாழ்ப்பாணம், ஜன. 8

யங்ஸ்ராரின் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அல்மதீனா, யங்ஸ்ரார் பி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அல்மதினா, யங்ஸ்ரார் பி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், இரண்டு அணியினரும் தலா மூன்று கோல்களைப் பதிவு செய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியின் சாதனைகள் அரிதானவை

## அஸ்வின் உருக்கம்

டோனியின் கிரிக்கெட் வாழ்க்கை அற்புதமானது. அவரின் சாதனைகள் ஒப்பிட முடியாதவை. அரிதிலும் அரியவை இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின்.

மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த டோனி கடந்த 2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார். இருப்பினும் ரி-20 மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக அணியில் நீடித்து வந்தார். கடந்த புதன்கிழமை இரவு தலைமைப் பதவியிலிருந்து



விலகும் முடிவை அறிவித்தார். இருப்பினும் ஒரு வீரராக அணியில் தொடரும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். பலரும் டோனியின் தலைமைத்துவம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அஸ்வினும் தனது பங்குக்கு புகழ்ந்து தள்ளியுள்ளார்.

தலைமைத்துவத்தில் டோனி தலைசிறந்து விளங்கினார். மற்ற துறையைச் சேர்ந்த தலைவர்கள்கூட டோனியிடம் இருந்து கற்றுகொள்ள நிறைய விடயம் இருக்கிறது. டோனிக்கு சமமாக எவரும் செயற்பட முடியுமா? அவரைப்போல் சாதனைகள் படைக்க முடியுமா? என்று கேட்கிறீர்கள். என்னை பொறுத்தமட்டில் அவரை போன்று சாதிப்பது என்பது இமாலய இலக்காகும். நிச்சயமாக அதனை எட்டுவது என்பது எளிதான காரியம் அல்ல. அவரின் சாதனைகள் அரியவை. இளம் வீரர்களை அணியில் கொண்டுவந்தவர் டோனி. தற்போதைய தலைவரான கோக்லியும் டோனியின் காலத்திலேயே அணிக்குள் வந்தார் என்று அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)



# பாக். மீண்டும் தடுமாற்றம் வழித்துத் துடைத்தது ஆஸி.

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் முழுவதுமாகக் கைப்பற்றியது ஆஸி.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 538-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதிகபட்சமாக ரென்சொவ் 184 ஓட்டங்களையும், வோர்ணர் 113 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 110 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ரியாஸ் 3 இலக்குகளையும், அசார் அலி, இம்ரான் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், யாசிர் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 315 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக யுனிஸ்கான் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களையும், அசார் அலி 71 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில்; கசில்வூட் 4 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஸ்ராக், கெபி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 241-2 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. கவாயா ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும், சிமித் 59 ஓட்டங்களையும், வோர்ணர் 55 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

465 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான், நான்காம் நாள் முடிவில் 55-1 என்றிருந்தது. ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று ஆஸ்திரேலியாவின், வெற்றிக்கு 9 இலக்குகளும் பாகிஸ்தானின் வெற்றிக்கு 410 ஓட்டங்களும் தேவை என்ற நிலையில், அசார் அலி 11 ஓட்டங்களுடனும் யாசிர் 3 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். உடனடியாக வெளியேற்றப்பட்டனர் யாசிரும் அசார் அலியும். இந்தியாவின் கோக்லி என்று பாகிஸ்தானின் தலைமைப் பயிற்சியாளர் ஆர்தரால் வர்ணிக்கப்பட்ட அசாமால் முடிந்தது 9 ஓட்டங்களே. முதல் இன்னிங்ஸில் சதம் கடந்த யுனிஸ் கான் இரண்டாவது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மிஸ்பா, சபிக் இருவரும் சிறிது தாக்குப்பிடித்தனர். எனினும் தோல்வியைத் தவிர்க்க இயலவில்லை. 38 ஓட்டங்களுடன் மிஸ்பாவும் சபிக் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இலக்குச் சரிவை கருத்தில் கொண்டு ஆரம்பம் முதலே அடித்தாடினார் அகமட். 61 பந்துகளில் அவர் அரைச்சதம் கடந்தார். மறுமுனையால் இலக்குகள் சரிய 244 ஓட்டங்களில் பாகிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் கசில்வூட், கெபி இருவரும் தலா 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், ஸ்ராக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக வோர்ணரும் தொடராட்ட நாயகனாக சிமித்தும் தெரிவாகினர். (ம)

# ஆஸிக் கழகத்துக்காக விளையாடுகிறார் திசர

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் மெல்பேர்ண் ரெனேகட்ஸ் அணிக்காக விளையாட திசர பெரேரா ஒப்பந்தமாகினார்.

குறித்த அணிக்காக விளையாடி வந்த மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான பிராவோ, காயம் காரணமாக அணியில் இருந்து விலகியதை அடுத்தே பதில் வீரராக பெரேரா ஒப்பந்தம் செய்யப் பட்டார்.

அதேபோல் பிரிஸ்பெய்ன் ஹீட் அணியில் இடம் பிடித்திருந்த சாமு வேல் பத்ரி விலகியதை அடுத்து, பதில் வீரராக இங்கிலாந்து அணியின் மில்ஸ் சேர்க்கப்பட்டார். (ம)



# இறுதி ரி-20 இன்று

VS

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் நியூசிலாந்து வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும், கிண்ணத்தை நியூசிலாந்தே கைப்பற்றும். ஆனால் 0:3 என்று படுதோல்வியடையாமல் குறைந்த பட்சம் 1-2 என்று முடிக்க பங்களாதேஷ் முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இன்றை ஆட்டத்தில் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கிறது. (ம)

# இந்தியாவுடன் விளையாட இலங்கையைப் புறக்கணித்தது தெ.ஆபிரிக்கா

இந்தியாவுடன் தொடரொன்றை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு எதிரான தொடரைக் கைவிடும் முடிவுக்கு தென்னாபிரிக்க கிரிக்கெட்சபை வந்துள்ளது. தற்போது இலங்கை அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. மீண்டும் 2017-18 ஆம் ஆண்டில் இலங்கை அணி தென்னாபிரிக்காவுடன் விளையாடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறித்த காலப் பகுதியில் 4 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர்களில் விளையாட இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது தென்னாபிரிக்கா. இந்தத் தொடர் நடைபெற்றால், அதைத் தொடர்ந்து பங்களாதேஷ், ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர்கள் இருப்பதால் இலங்கை அணியுடன் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எனினும் தொடர் தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எவ்விதக் கருத்துக்களையும் வெளிப்படுத்தவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

(IT TECHNICIAN - தகவல் தொழில்நுட்பவியலாளர்)

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்திய சாலைக்கு மேற்படி பதவிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

01. துறைசார் கற்கை நெறிகளைக் கொண்டிருத்தல் (பட்டப்படிப்பு பட்டப்பின்படிப்பு மற்றும் டிப்ளோமா)
02. Hard ware, Soft ware தொடர்பான அனுபவம் விரும்பத்தக்கது.
03. ஆங்கிலத்தில் தேர்ச்சி (Fluent in Speaking & Writing)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 10.01.2017 இற்கு முதல் நேரிலோ தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்.

நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை
இல. 342, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 773 2892
E-mail: nchjaffna@gmail.com

## Yarl Beauty & Language's Skills College

Y.B.L.S.C

### ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புக்கள்

தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, அம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலைக்கூடத்துக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

## NEC

(01)மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.
(02)பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
T.P: 077469 6695

A/L 2016 பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று யாழ் மாவட்டத்தில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|
| 01. K. சண்முகாயினி | 3A | 03 |
| 02. T. ஆன்சில்ரா | 3A | 05 |
| 03. S. சியானா | 3A | 12 |
| 04. M. அயந்தன் | 3A | 16 |
| 05. R. மேரி டனுசியா | 3A | 27 |
| 06. U. உசாந்தன் | 3A | 42 |
| 07. A. துலக்ஷனா | 3A | 45 |
| 08. K. ஜனனி | 3A | 48 |
| 09. S. தனுசா | 3A | 53 |
| 10. S. சோபிதா | 3A | 54 |
| 11. M. சிந்துஜா | 3A | 67 |
| 12. R. ஸ்ரீவினா | 3A | 68 |
| 13. A. விதுஜா | 3A | 95 |
| 14. S. டிலக்ஷன் | 3A | 108 |
| 15. K. ஜானு | 3A | 77 |
| 16. மேரி பிரியங்கா | 3A | 71 |
| 17 W.P. நிஜுகாந்த் | 3A | 63 |
| 18 S. பிரண்ணவி | 3A | 74 |
| 19 தாரங்கன் | 3A | 37 |
| 20 J. ஜீன் லக்ஸ்மன் | 3A | 50 |
| 21. P. நர்த்தனி | 3A | 84 |
| 22. நர்த்தனா | 2AB | 87 |
| 23. M. நீதிக்கா | 2AB | 88 |
| 24. M. பானுஜன் | 2AB | 106 |
| 25. U. கபீஷா | 2AB | 140 |
| 26. E. கஜுசியா | 2AB | 150 |
| 27. S. சிந்து | 2AB | 102 |
| 28. T. ஆதி | 2AB | 20 |
| 29. டெ. மின்மினி | 2AB | 104 |
| 30. E. டைவிஷா | 2AC | 160 |
| 31. தமிழீசன் | 2AC | 153 |
| 32. சிந்துஜா | A 2B | |
| 33. ஹம்சாயினி | A 2B | |
| 34. S. குகதரன் | A 2B | |
| 35. கம்சிகா | A 2B | |
| 36 V. யட்சாயினி | A 2B | |
| 37 B. டெனுசியா | A 2B | |
| 38. சயந்தன் | A 2B | |
| 39. சிரீ ரூபினி | A 2B | |
| 40. லிம்லி கருண்சியா | A 2B | |
| 41. P. றுத்சிதபாலினி | A 2B | |
| 42. K. டிலக்ஷன் | A 2B | |
| 43. A. டினோசா | ABC | |

யாழ் நகரின் வர்த்தகப் பிரிவில் முன்னணிப் பெறுபேறுகளை பெறுவதற்கு காரணமான ஆசிரியர் குழாம்

கணக்கீடு K. பாலகஜன் | பொருளியல் NB. கஜீதரன் | வணிகக்கல்வி S.K. பாலசபேஷ்

### A/L DAY CLASS

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :- 09.01.2017 திங்கள் காலை 7.00 மணி
A/L 2019 பிரிவிற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## உடனடி வேலைவாய்ப்பு

2017 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **Everest Lanka Private Company** யானது தனது கம்பனிக்கான பதவி வெற்றிடங்களை நிரப்பவுள்ளது.

இதற்காக A/L, O/L படித்த இளைஞர், யுவதிகளை இணைப்பதற்கு தயாராகியுள்ளது.

தொடர்புகளுக்கு : 076-864 3505 : 077 - 077 1377 : 071 - 187 3807

## New Sky Computer Training Center

கணினி வகுப்பு

அனைத்தும் பாடத்திட்டத்திருமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

MS Office 2016, DTP, Internet & E-mail, Graphic Design, Computerized Accounting Kids Programe, Web Design, Hardware.

மேலதிக விபரங்களுக்கு TP:0779672038

இல.710 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(யாழ் மாநகர சபைக்கு முன்னால்)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 071 618 2182


## வேலணை மத்தி., ஹென்றிஸ் அணிகளுக்கு முதல் வெற்றி

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுப்பரிவு ஆண்களுக்கான விலகல் முறையிலான தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் வேலணை மத்திய கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத் தில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மாதகல் சென். ஜோசெப் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் வேலணை மத்திய கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)


## யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் துறைதிறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பயிற்சி நெறிகள்

எமது நிறுவனத்தில் தை 2017 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- இயந்திரவியல் (Machinist)
- அலுமினியம் பொருத்துதல். இணைத்தலும் (Aluminium Fabricator)

- இப் பயிற்சி நெறிக்கான கட்டணம் இலவசம்.
- ஆண், பெண்இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படும்.
- பயிற்சி நிறைவில் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு: இயக்குநர்
தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.
Tel.Phone : 021 321 3139/ 021 225 0975
Email: ejcit@sltnet.lk

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இறக்குமதி வியாபார விநியோக நிறுவனத்திற்கு தனியார்துறை நிறுவனங்களில் குறைந்தது ஐந்து வருடங்களிற்கு மேற்பட்ட சேவையாற்றியவர்கள் தேவை. (வயது 40 இற்கும் 55 இற்கும் இடைப்பட்டவர்கள்) சம்பளம் 30 000 இற்கு மேல்

1) கணக்காளர்
2) காசாளர்
3) உதவியாளர்கள் (வயது 18 - 25 சாரதி அனுமதிப்பத்திரம் விரும்பத்தக்கது.

மற்றும் தேவையானவை சுயவிவரக் கோவை, கல்வித்தகைமை சான்றிதழ்களையும் சேர்த்து அனுப்பவும்.

விளம்பர இல 13
மே.பா. உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 2016 A/L பெறுபேற்றைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான விசேட கணினி, ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்

இலங்கையின் தகவல் தொழில்நுட்பக் கல்வித் துறையின் முன்னோடியான IDM NATIONS CAMPUS இல் நீங்கள் டிப்ளோமா தொடக்கம் பட்டப்படிப்பு வரை தொடர அரிய சந்தர்ப்பம்...!

FIRST EVER HIGHER EDUCATION INSTITUTE TO RECEIVE ISO 9001 : 2015 IN SRI LANKA 35 YEARS PAR EXCELLENCE

1. பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு - AUTO CAD, JAVA & C ++
2. பல்கலைக்கழகத்தில் ஏனைய துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு International Diploma In Computing
3. அனைத்து மாணவர்களுக்கும்- Spoken English, Spoken Singala

✓ இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் சட்டக் கல்லூரியால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்

- LLB (Hons)
- BA (Hons)
- B.Sc (Hons)
- BEd ( Hons)

IDM Nations Campus

IDM NATIONS CAMPUS
REGIONAL BRANCHES - NORTHERN REGION

JAFFNA BRANCH
#216, Navalar Road, Jaffna,
021 222 9901

VAVUNIYA BRANCH
#19, Vairavar Kovil Road
Vairavappuliyankulam,
Vavuniya. 242 222 313

MANNAR BRANCH
#70, Main Street, Pettah-Mannar.
023 225 0666

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்ப

## வெளிவாரி பட்டப்படிப்பு கொழும்பு பல்கலைக்கழகம்

க.பொ.த உ.த சித்தியடைந்தோர் நேரடியாகவும் ஏனையோர் FIT எனும் அடிப்படைக்கணினிக்கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் பயில முடியும். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.

CIMA-UK CompEngineering USA

ICT AL2017,18,19, OL ICT2017,18 GIT2017,18 CISCO-CCNA JAVA AccountingPack.AutoCAD Shingalam EngToflelELTS

புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்குType course<Name>&sendTo772395895

MCS யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், வவுனியா
பெண் எழுதுவினைஞர்.
077 600 0507, 077 069 9492,

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் / வவுனியா / கொழும்பு
Sakya Private Ltd.No.157,Thekkawaththa, Vavuniya
077 069 9492, 077 600 0507


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.